**அல்லாஹ்வின் கட்டளை**

هُوَ الَّذِیۡۤ اَرۡسَلَ رَسُوۡلَهٗ بِالۡهُدٰی وَدِیۡنِ الۡحَقِّ لِیُظۡهِرَهٗ عَلَی الدِّیۡنِ کُلِّهٖ وَلَوۡ کَرِهَ الۡمُشۡرِکُوۡنَ ۟

பொருள்
அவனே தனது தூதரை நேர்வழியுடனும், உண்மையான மார்க்கத்துடனும் - இதனை அவன் எல்லா மார்க்கத்தின் மீதும் வெற்றி பெறச் செய்வதற்காக அனுப்பினான். இணை வைப்பவர்கள் (இதனை) எந்த அளவு வெறுத்தாலும் சரியே.
(61 : 10)

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 11

இதழ் 6 & 7

# பதர்
வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரி 1447 - 16 - 23 ஷஅபான்
ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - தப்லீஃக் 5 - 12 ★ 5 - 12 பிப்ரவரி 2026


**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியைக் குறித்த முன்னறிவிப்பு

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

بِاِلْهَامِ اللهِ تَعَالٰى وَاِعْلَامِهٖ عَزَّوَجَلَّ

ஒவ்வொரு பொருளின் மீதும் ஆற்றல் படைத்தவனுமாகிய அந்த இறைவன் மேன்மேலும் கருணை காட்டுபவனும், சிறப்பு மிக்கவனும், சான்றான்மையும், மேன்மையும் கொண்டவன் ஆவான்.

( جَلَّ شَانُهٗ وَعَزَّ اِسْمُهٗ

(கம்பீரம் பொருந்திய பெயர் கொண்ட அந்த கண்ணிய மிக்க வல்லமையுள்ள இறைவன்) தனது இல்ஹாம் மூலமாக என்னை நோக்கி இவ்வாறு கூறினான்:

நீ என்னிடம் கேட்டதற்கிணங்க ஒரு கருணையின் அடையாளத்தை நான் உனக்கு தருகின்றேன். நான் உன்னுடைய மன்றாடல்களைக் கேட்டேன். மேலும் எனது கருணையினால் அவை ஒப்புக் கொள்ளப்படுவதற்கான தகுதியை வழங்கினேன். ஹோஷியோர்பூர் மற்றும் லூதியானாவிற்கு நீர் மேற்கொண்ட உமது பயணத்தை உமக்கு அருளுக்குரியதாக ஆக்கிவிட்டேன். எனவே உமக்கு இறைவனின் வல்லமை, கருணை, நெருக்கம் ஆகியவற்றின் அடையாளம் வழங்கப்படுகின்றது. அருள் மற்றும் பேருபகாரத்தின் அடையாளமும் உமக்கு வழங்கப்படுகின்றது. மேலும், வெற்றியின் திறவுகோல் உமக்கு கிடைக்கின்றது. வெற்றியாளரே! உம் மீது சாந்தியும், சமாதானமும் உண்டாகட்டுமாக!

இறைவன் இதை கூறினான்: ஏனெனில், வாழ்வை விரும்புபவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து இரட்சிப்புப் பெற வேண்டும். கல்லறையில் புதைந்து கிடப்பவர்கள் வெளியில் வரவேண்டும்; இஸ்லாமிய மார்க்கத்தின் சிறப்பும், இறைவனின் வார்த்தையின் உயர் தகுதியும் மக்கள் மீது வெளிப்பட வேண்டும்; உண்மை அதன் அனைத்து அருட்களுடன் வரவேண்டும். மேலும், பொய் தனது அனைத்து தீய சகுனங்களுடன் ஓடி விடவேண்டும். மேலும், நான் வல்லமையுள்ளவன்; எதனை விரும்புகின்றேனோ அதனை நான் செய்பவன் ஆவேன் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் நான் உம்முடன் இருக்கின்றேன் என்று அவர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். மேலும், எவர்களுக்கு இறைவனின் இருப்பின் மீது நம்பிக்கை இல்லையோ, மேலும் எவர்கள் இறைவனையும், இறைவனின் மார்க்கத்தையும், இறைத் தூதர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களையும் நிராகரிப்பு மற்றும் பொய்ப்படுத்துதல் என்ற பார்வையுடன் பார்க்கின்றார்களோ அவர்களுக்கு ஒரு தெளிவான அடையாளம் கிடைக்க வேண்டும். மேலும், குற்றவாளிகளின் வழி வெளிப்பட்டு விட வேண்டும்.

ஆக, உமக்கு நற்செய்தி வழங்கப்படுகின்றது. ஓர் அழகான தூய மகன் உமக்கு வழங்கப்படுவார். ஒரு தூய புதல்வர் உமக்கு கிடைப்பார். அந்தப் புதல்வன் உமது வித்திலிருந்தே தோன்றியவராகவும், உமது சந்ததி மற்றும் வம்சத்தைச் சேர்ந்தவராகவுமே இருப்பார். அழகிய தூய மகன் உமது விருந்தாளியாக வருகின்றார். அவரது பெயர் இம்மானுவேல் மற்றும் பஷீராகவும் இருக்கின்றது. அவருக்கு பரிசுத்த ஆவி வழங்கப்பட்டுள்ளது. அவர் உட்புற அசுத்தத்திலிருந்தும் தூய்மை அடைந்தவராவார். அவர் அல்லாஹ்வின் ஒளி ஆவார். விண்ணிலிருந்து வருகின்ற அவர் அருளுக்குரியவர் ஆவார். அவருடன் அருள் உள்ளது. அந்த அருள் அவருடன் சேர்ந்து வரும். அவர் ஆற்றல் உடையவராகவும், மகத்துவ மிக்கவராகவும் செல்வம் படைத்தவராகவும் இருப்பார்.

அவர் உலகத்திற்கு வருவார். தமது குணப்படுத்தும் தன்மையாலும் உண்மையான ஆன்மாவின் அருட்களாலும் பலரையும் நோய்களிலிருந்து குணப்படுத்துவார். அவர் அல்லாஹ்வின் வார்த்தையாவார். ஏனெனில், இறைவனின் கருணையும், அவனது தன்மான உணர்வும் அவரை மகத்துவ மிக்க வார்த்தைகளுடன் அனுப்பி இருக்கின்றது. அவர் மிகுந்த புத்திக் கூர்மை உள்ளவராகவும், சிந்தித்துச் செயல்படும் ஆற்றல் மிக்கவராகவும் இருப்பார். மென்மையான உள்ளம் கொண்டவராகவும் இருப்பார். பௌதீக மற்றும் ஆன்மிக ஞானங்களால் அவர் நிரப்பப்படுவார். அவர் மூன்றை நான்காக்குபவர் ஆவார். (இதன் பொருள் புரியவில்லை) திங்கட்கிழமை ; அருளுக்குரிய திங்கட்கிழமை. உமது நேசத்திற்குரிய அப்புதல்வர் மதிப்பிற்கும், மேன்மைக்கும் உரியவர் ஆவார். அவர் நற்பேறு கொண்டவர்.

مَظْهَرُ الْاَوَّلِ وَالْاٰخِرِ مَظْهَرُ الْحَقِّ وَالْعَلَاءِ كَاَنَّ اللّٰهَ نَزَلَ مِنَ السَّمَآءِ

(அவரிடமிருந்து முதலும், இறுதியும் வெளிப்படும். அவரிடமிருந்து உண்மையும், உயர்வும் வெளிப்படும். இறைவனே விண்ணிலிருந்து இறங்கி வந்ததைப் போன்று இருக்கும்)

அவரது வருகை மிகவும் அருளுக்குரியதாகவும், இறைவனின் கம்பீரம் வெளிப்படுவதற்கு காரணியாகவும் இருக்கும். ஒளி வருகின்றது; ஒளி. அதனை இறைவன் தனது திருப்தியின் நறுமணம் கமழும்படி செய்வான். நாம் எமது ஆவியை அவர் மீது இடுவோம். இறைவனது நிழல் அவரது தலைமேல் இருக்கும். அவர் விரைவாக வளர்வார். கைதிகளின் விடுதலைக்குக் காரணமாக இருப்பார். பூமியின் எல்லை வரை அவரது புகழ் பரவும். சமுதாயங்கள் அவரிடமிருந்து அருட்களைப் பெறும். அப்போது தனது இறுதி நோக்கத்தை நிறைவு செய்தவாறு அவர் வானத்தின் பக்கம் உயர்த்தப்படுவார்.

وَكَانَ اَمْرًا مَّقْضِيًّا (இது விதிக்கப்பட்ட ஒன்றாகும்.)

(மஜ்முஆஃ இஷ்திஹாராத், தொகுதி 1, பக்கம் 100, இஷ்திஹார். பிப்ரவரி 20, 1886)

******* *


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

## தலையங்கம்

**பூமியின் எல்லைகள் வரை பிரபல்யம் அடைவார் '.... மேலும் சமுதாயங்கள் அவரிடமிருந்து அருள் பெறும்'**

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் உள்ளத்தில் அல்லாஹ் அன்னாரின் இளமைப் பருவம் தொட்டு இஸ்லாத்திற்கான தொண்டு மற்றும் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீதான நேசத்திற்கான உணர்வை ஏற்படுத்தியிருந்தான். அன்னாரின் காலத்தில் பிற மார்க்கத்தின் எதிரிகளின் புறமிருந்து இஸ்லாத்தின் மீது தாக்குதல்கள் தொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. மேலும் முஸ்லிம்கள் அவற்றிற்கு பதில் வழங்க இயலாதவர்களாக இருந்தனர். இன்னும் கூறப்போனால், கல்வியறிவு படைத்த முஸ்லிம்களோ ஆங்கிலேய அரசாங்கத்தின் ஆதிக்கத்திற்கு இலக்காகி இஸ்லாத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர். அப்படிப்பட்ட அபாயமும், நிராசையும் நிறைந்த நாட்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையினால் பராஹீனே அஹ்மதிய்யா என்ற நூலை எழுதினார்கள். அது 1882 முதல் 1884 வரை முழுமை பெற்றது. 1882 ஆம் ஆண்டு அன்னாருக்கு இறைவன் புறமிருந்து தோன்றியதற்கான முதலாவது இல்ஹாம் (அரபியில்) இறங்கியது. மேலும் அல்லாஹ் அன்னாரை நோக்கி இவ்வாறு கூறினான்:

. நான் இறைவன் புறமிருந்து தோன்றியுள்ளேன்; மேலும் நான் எல்லோரையும் விட முதலில் ஈமான் கொள்ளக் கூடியவன் ஆவேன் என்று நீர் கூறுவீராக! (பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 4 பக்கம் 502 503)

இறைவன் புறமிருந்து நியமிக்கப்பட்டதற்கான இல்ஹாமிற்கு பிறகு அன்னார் மீது அற்புதங்கள் மற்றும் அடையாளங்களுக்கான தொடர் தொடங்கியது. மேலும் அன்னார் (அலை) அல்லாஹ்விடம் துஆ செய்யத் தொடங்கினார்கள். அன்னாருக்கு இஸ்லாத்தின் வெற்றிக்கான வழிகள் காட்டித் தரப்பட வேண்டும் என்று அன்னார் (அலை) துஆ செய்தார்கள். எனவே அன்னார் (அலை) மீது இந்த திருக்குர்ஆன் வசனம் இல்ஹாமாக இறங்கியது.

هُوَ الَّذِيْٓ اَرْسَلَ رَسُوْلَهٗ بِالْهُدٰى وَدِيْنِ الْحَقِّ لِيُظْهِرَهٗ عَلَى الدِّيْنِ كُلِّهٖ وَلَوْ كَرِهَ الْمُشْرِكُوْنَ

அன்னார் (அலை) கூறினார்கள்: எனக்கு இந்த திருக்குர்ஆன் வசனம் இல்ஹாமாக இறங்கியது. அது

هُوَ الَّذِيْٓ اَرْسَلَ رَسُوْلَهٗ بِالْهُدٰى وَدِيْنِ الْحَقِّ لِيُظْهِرَهٗ عَلَى الدِّيْنِ كُلِّهٖ وَلَوْ كَرِهَ الْمُشْرِكُوْنَ

என்ற இந்த வசனம் ஆகும். தனது தூதரை நேர்வழியுடனும் உண்மையான மார்க்கத்துடனும் அனுப்பிய அந்த இறைவனே தனது மார்க்கத்தை மற்ற எல்லா மார்க்கங்களின் மீதும் மேலோங்க செய்வான்.

மேலும் இந்த இல்ஹாமிற்கு இந்த பொருள் என்று எனக்கு புரிய வைக்கப்பட்டது. அதாவது நான் இறைவன் புறமிருந்து ஏன் அனுப்பப்பட்டுள்ளேன் என்றால், என் கரங்கள் மூலமாக இறைவன் இஸ்லாத்தை அனைத்து மார்க்கங்களின் மீதும் மேலோங்க செய்வான். மேலும் இந்த இடத்தில் இதனையும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது இந்த திருக்குர்ஆன் வசனத்தில் ஒரு மகத்துவ மிக்க முன்னறிவிப்பு உள்ளது. அது தொடர்பாக ஆலிம்கள் மற்றும் மார்க்க ஆராய்ச்சியாளர்கள் இந்த கருத்தில் ஒன்றுபட்டு இருக்கின்றனர். அதாவது இது வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கரங்களால் முழுமையாகும் என்பதில் அவர்கள் ஒருமித்த கருத்து கொண்டிருக்கின்றனர். (தர்யாக்குல் குலூப் பக்கம்- 47)

மஸீஹ் மற்றும் மஹ்திக்கான வாதத்தை செய்த பிறகு பல்வேறு மார்க்கத் தலைவர்கள் அன்னாரிடம் எதிர்ப்பை தீவிரப்படுத்தி விட்டனர். மேலும் ஹுஸுர் (அலை) அவர்கள் முழு உலகிலும் இறை அடையாளத்தை காண்பதற்கு அழைப்பு விடுத்தார்கள் அதனால் காதியானின் இந்துக்கள் நாங்கள் தங்களுடைய அண்டை அயலாராக இருப்பதால் இறை அடையாளத்தை பார்ப்பதற்கு அதிக தகுதி படைத்திருக்கின்றோம் என்று விண்ணப்பித்தனர்.

ஆக, அன்னாருக்கு, உங்களது பிரச்சனைக்கான தீர்வு ஹோஷியார்பூரில் இருக்கும் என்ற இந்த இல்ஹாம் இறங்கியது. (ஸீரத்துல் மஹ்தி பாகம் 1, அறிவிப்பு எண் 88)

எனவே ஹுஸுர் (அலை) அவர்கள் ஹோஷியார்பூருக்கு சென்றார்கள். மேலும் அங்கு 40 நாட்கள் தங்கி ஹுஸுர் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் அழுது மன்றாடினார்கள். அதனால் அன்னாருக்கு எப்படிப்பட்ட ஒரு மகன் கிடைப்பதற்கான நற்செய்தி வழங்கப்பட்டது என்றால், அவர் மூலமாக இஸ்லாம் முழு உலகத்திலும் பரவி விடும். மேலும் பூமியின் எல்லைகள் வரை அவர் புகழ் பெறுவார். மேலும் சமுதாயங்கள் அவரிடமிருந்து அருள் பெறும். இந்த நற்செய்தி அன்னாருக்கு வழங்கப்பட்டது.

இந்த கண்ணியத்திற்குரிய மகன் 1886-ம் ஆண்டு முன்னறிவிப்பிற்கு பிறகு, அதாவது மூன்று வருடங்கள் கழித்து ஜனவரி 12, 1889 ஆம் ஆண்டு பிறந்தார். மேலும் மார்ச் 14 1914 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இரண்டாவது கலீஃபாவாக அவர் அரியணையில் அமர்ந்தார். மேலும் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதிக்கான முன்னறிவிப்பில் அவர் தொடர்பாக கூறப்பட்டிருந்த பண்புகள் மற்றும் முன்னறிவிப்புகளைப் பற்றி இதே இதழில் மற்ற பக்கங்களில் நீங்கள் படித்துக் கொள்ளலாம். அவை அனைத்தும் அன்னாருடைய அருளுக்குரிய இருப்பில் முழுமையடைந்தன. அவற்றில் இந்த விஷயமும் இடம்பெற்றிருந்தது. அதாவது அன்னாரின் மூலமாக ஆன்மீக ரீதியில் மரணித்தவர்கள் உயிர் பெறுவார்கள். மேலும், இஸ்லாத்தின் கண்ணியம் மற்றும் இறைவனிடம் உரையாடுகின்ற அந்தஸ்து அவருக்கு கிடைக்கும். அவர் மிகவும் புத்திசாலியாக இருப்பார். ஆத்மீகம் மற்றும் பௌதீக ஞானத்தால் அவர் நிரப்பப்படுவார்;அவர் இறைவனின் ஒளியாக இருப்பார். அவர் மீது இறைவனின் கூற்று இறங்கும். இறைவனின் நிழல் அவரது தலையின் மீது இருக்கும். அவர் பூமியின் எல்லைகள் வரை பிரபல்யம் அடைவார். சமுதாயங்கள் அவரிடமிருந்து அருள் பெறும். இறைவன் சாட்சியாக இருக்கின்றான். இந்த அனைத்து அடையாளங்களும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் வாழ்விலேயே முழுமை அடைந்து விட்டன. மேலும் கியாமத்து நாள் வரை முழுமை அடைந்து கொண்டே சென்று கொண்டிருக்கும்.

அன்னார் (ரலி) இறைவனின் கட்டளையால் 1944 ஆம் ஆண்டில் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி என்ற வாதத்தை முன் வைத்தார்கள். மேலும் சத்தியம் செய்து கூறினார்கள்: மேலும், அரை நூற்றாண்டிற்கும் கூடுதலாக கிலாஃபத்தின் அரியணையில் அன்னார் (ரலி) அமர்ந்திருந்தார்கள். மேலும், அன்னார் (ரலி) எப்படிப்பட்ட நேரத்தில் கலீஃபாவாக ஆனார்கள் என்றால், அப்போது நம்மவர்களில் சிலரும், அந்நியர்களும் முற்றிலும் எதிரிகளாக ஆகியிருந்தனர். மேலும் போர்களின் காரணமாக உலகத்தில் பொருளாதார சூழல்கள் மிகவும் மோசமடைந்திருந்தன. அப்படிப்பட்ட நிலைமைகளில் அன்னார் (ரலி) இஸ்லாத்தின் பிரச்சாரக் கொடியை தனது அருளுக்குரிய கரங்களில் தாங்கிப் பிடித்திருந்தார்கள். மேலும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே இந்தியாவிலிருந்து புறப்பட்டு ஆசியாவின் ஏனைய நாடுகளிலும், ஐரோப்பாவின் நாடுகளிலும், ஆஃப்ரிக்காவின் நாடுகளிலும் மற்ற துணைக் கண்டங்களிலும் இஸ்லாத்தின் கொடியை மேலோங்கச் செய்துவிட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் மற்ற ஸஹாபிகள் கலந்து கொண்டிருந்ததைப் போன்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஸஹாபிகளும் இந்தத் திட்டத்தில் முற்றிலும் கலந்து கொண்டிருந்தனர். லண்டனில் இஸ்லாத்தின் கொடியை நடுவதற்காக ஹஸ்ரத் சவ்த்ரி ஃபத்ஹே முஹம்மது ஸியால் ஸாஹிப் (ரலி) அவர்களை அன்னார் (ரலி) அனுப்பப்பட்டார்கள். மொரிஸியஸில் ஹஸ்ரத் சூஃபி குலாம் முஹம்மது ஸாஹிப் (ரலி) அவர்களின் கரத்தில் இஸ்லாத்தின் கொடி இருந்தது. அமெரிக்காவில் ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது ஸாதிக் (ரலி) அவர்கள் சென்றார்கள். ஆஃப்ரிக்காவில் ஹஸ்ரத் மவ்லவி அப்துர் ரஹீம் ஸாஹிப் நய்யர்

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் ...

# ஜுமுஆ பேருரை

**இறை வணக்கங்கள் மற்றும் உயரிய நல்லொழுக்கங்களின் ஒளியில்**
**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை வரலாறு**

அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அரசனாக்கினான். அப்போதும் அன்னார் (ஸல்) ஒவ்வொருவரின் விஷயத்தையும் செவிமடுத்தார்கள். எவராவது ஒருவர் கடுமைகாட்டினாலும் கூட அன்னார் (ஸல்) அமைதி காத்து வந்தார்கள். மேலும் கடுமையுடன் நடந்து கொண்டவர்களிடம் ஒருபோதும் பதிலுக்கு கடுமையுடன் பதில் அளித்ததில்லை

பொறுமைகாத்தலின் நிலை எப்படி இருந்தது என்றால், சிலவேளை அன்னார் (ஸல்) ஏதாவது ஒரு வேலைக்காக வெளியே புறப்படுவார்கள். சில மக்கள் அன்னாருடைய வழியைத் தடுத்து நின்று கொள்வர். தம்முடைய தேவைகளை எடுத்துக் கூறத் தொடங்கி விடுவர். அவர்கள் தம் கூற்றுகளை முடித்து விடும் வரை அன்னார் (ஸல்) நின்று கொண்டிருப்பார்கள்

அந்த மனிதர், தமது இயல்பால், தம்முடைய பண்புகளால், தம்முடைய செயல்களால், தம்முடைய அமல்களால், தமது ஆன்மிக மற்றும் தூய ஆற்றல் எனும் வலுவான நதியால் முழுமையான நிறைவுபெற்ற முன்மாதிரியை அறிவுரீதியிலும், செயல் ரீதியிலும், உண்மையுடனும், உறுதித் தன்மையுடனும் காட்டினார்கள். இவ்வாறு முழுமைபெற்ற மனிதர் என்று அழைக்கப்பட்டார்கள்.

அந்த அருளுக்குரிய நபி நபிமார்களின் முத்திரை, தூயவர்களின் தலைவர், இறைத்தூதர்களில் இறுதி எல்லையை அடைந்தவர், தூதர்களின் பெருமிதத்திற்குரியவர், ஜனாப் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஆவார்கள். இறைவா! அன்பிற்குரிய இறைவா! உலகம் தோன்றியதிலிருந்து நீ எவர் மீதும் பொழியாத அளவு கருணை மற்றும் அருளை இந்த அன்பிற்குரிய நபியின் மீது பொழிவாயாக!

(ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள்)

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 19 டிசம்பர் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **19 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

அல்லாஹ் கூறுகிறான்,

لَقَدْ كَانَ لَكُمْ فِيْ رَسُوْلِ اللّٰهِ اُسْوَةٌ حَسَنَةٌ لِّمَنْ كَانَ يَرْجُوا اللّٰهَ وَالْيَوْمَ الْاٰخِرَ وَذَكَرَ اللّٰهَ كَثِيْرًا

இந்த வசனத்தின் பொருள்: அல்லாஹ்வையும் மறுமை நாளையும் (சந்திக்கப் போவதை) எதிர்பார்த்து, அல்லாஹ்வை அதிகமாக நினைவுகூர்கின்ற உங்களுக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் திருத்தூதரிடத்து மிக மேலான முன்மாதிரி உள்ளது. (அல் அஹ்ஸாப்: 22)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் ஒருவர், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயர் நல்லொழுக்கம் மற்றும் அன்னாரது முன்மாதிரியைப் பற்றி சிறிது கூறுங்கள் என்று கேட்டார். அதற்கு பதில் அளித்தவாறு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்:

நீர் திருக்குர்ஆனை ஓதவில்லையா? அதிலோ அல்லாஹ்வே அன்னாரது முன்மாதிரியைப் பற்றி சான்று பகர்ந்து விட்டான். இதுகுறித்து அல்லாஹ் கூறுகிறான்:

وَاِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيْمٍ

பொருள்: தூதரே! நிச்சயமாக நீர் மிகவும் உயர்வான நல்லொழுக்கத்தில் நிலை பெற்றுள்ளீர். (அல் கலம்:5) (முஸன்னத் அஹ்மத் பின் ஹன்பல், தொகுதி 8, பக்.144)

ஆக, ஒரு விஷயத்தில் உயர்வான தரத்தில் இருப்பவர்களே முன்மாதிரியாகத் திகழ்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பொறுத்தவரை, இங்கு இறைவனுக்கான உரிமைகளைக் குறித்த விஷயமானாலும், அல்லது அடியார்களுக்கான உரிமையானாலும் சரி! இவை இரண்டிலும் அல்லாஹ்வே சான்று பகர்ந்துள்ள (அளவுக்கு) உயர்த்தரத்தை அன்னார் (ஸல்) கொண்டிருந்தார்கள்.

எனவே, அல்லாஹ் நமக்குக் கூறியுள்ளான்: இந்தத் தூதர் உங்களுக்கு முன்மாதிரி ஆவார். அவர் கூறுவதை செவிமடுப்பதோடு மட்டுமல்லாமல், அதன்படி அமலும் செய்யுங்கள். ஈமான் கொள்வது மட்டும் போதுமானதல்ல. நீங்கள் அமல் செய்யும்போது, எதற்காக நான் இந்தத் தூதரை அனுப்பியுள்ளேனோ அந்தத் தரத்தை நிச்சயமாக உங்களால் அடைய முடியும்.

எனவே, இது ஒவ்வொரு முஸ்லிம் மற்றும் முஃமினின் பொறுப்பாகும். உலகில் மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்றால், அவர்கள் சின்னதாக ஓரிரு நல்ல விஷயங்களை செய்து விடுகிறார்கள். அல்லது ஏதாவது ஒரு வேலையை செய்து விடுவார்கள். அதனால் புகழ் ஏற்பட்டு விடும். அவர்களுடைய பெயர் மிகவும் பிரகாசிக்கும். அவர்களுக்குப் பெரிய பரிசு, விருது வழங்கப்படுகிறது. ஒருவருக்கு நோபல் பரிசு கிடைக்கிறது. ஒருவருக்கு வேறு ஏதோ பரிசு கிடைக்கிறது. ஆனால், இந்தப் பரிசு ஏதாவது ஒரு கமிட்டி அல்லது அரசாங்கம் சார்பாக வழங்கப்படுகிறது. அது அந்த வேலைக்காக நிர்ணயிக்கப்பட்டதாக இருக்கிறது. ஆனால், முழு சமுதாயமும் ஒன்றுபட்ட ஒரு விஷயத்தைக் கூறியதாக ஒருபோதும் நடக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நபித்துவத்துக்கு முன்னரே இளமைப் பருவத்திலேயே மக்கள் ஸாதிக் (உண்மையாளர்) மற்றும் அமீன் (நம்பகமானவர்) என்று கூறி அளித்தார்களே அதுதான் அசல் பரிசு ஆகும். அன்னாருக்குப் பரிசுக்கான தேவை இருக்கவில்லைதான்; ஆனால், மக்களின் பார்வையில் அன்னார் (ஸல்) எத்தகைய தரத்தை அடைந்திருந்தார்கள் என்றால், அதற்கு எந்த நிகரும் இருக்கவில்லை. முழு சமுதாயமும் அன்னாருக்கு அந்தப் பட்டத்தை வழங்கியது. ஆக, இதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்த்தரம் ஆகும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் சுயமே இவ்வாறு கூறியுள்ளார்கள்: நீங்கள் எல்லாரும் எனது சுன்னத்தை (நடைமுறையை)ப் பின்பற்றுங்கள்; என்னுடைய அமல்கள்படி செயல்படுங்கள்; (ஸுனன் அபீ தாவூத், ஹதீஸ் எண்: 460)

ஏனென்றால், அல்லாஹ் என்னை உங்களுடைய சீர்திருத்தத்திற்காக அனுப்பியுள்ளான்; நான் அழகிய ஒழுக்கங்களை முழுமைப்படுத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்டுள்ளேன் என்று ஹுஸூர் (ஸல்) அவர்கள், கூறுகிறார்கள்.

எனவே, எவர் இந்த எல்லாப் பண்புகளையும் (ஒருங்கே) கொண்டுள்ளாரோ, எவரிடம் எல்லாப் பண்புகளும் காணப்படுகின்றனவோ அவரே நல்லொழுக்கங்களை

முழுமைப்படுத்துகிறார். நான் கூறியது போன்று, மாநபி (ஸல்) அவர்கள் நமக்கு அழகிய முன்மாதிரி ஆவார்கள் என்பதை அல்லாஹ்வே கூறியுள்ளான். எனவே, நாம் அன்னாரது வாழ்வை நமக்கு எத்தகைய தரத்தில் கொண்டிருக்க வேண்டுமென்றால், நாம் அன்னாரது ஒவ்வொரு கூற்றின்படியும் அமல் செய்ய வேண்டும். அன்னாரது ஒவ்வொரு கூற்றும் திருக்குர்ஆனின் கட்டளைகளை உள்ளடக்கியதாகும். அல்லாஹ்வின் தரப்பிலிருந்து உள்ளதாகும். எனவே, ஒரு மனிதனிடம் இருக்கக்கூடிய அல்லது இருக்க வேண்டிய நல்லொழுக்கத்தின் ஒவ்வொரு பண்பும் அல்லது அல்லாஹ்வின் பண்புகளாக எவை இருக்கின்றனவோ அவற்றிற்கான உண்மையான முன்மாதிரியும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கங்கள் குறித்து, அன்னாரது வாழ்க்கை வரலாறு குறித்து ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களும் தீபாச்சா தப்ஃஸீருல் குர்ஆன் எனும் நூலில் சில விஷயங்களை எடுத்துரைத்துள்ளார்கள். நம்முடைய வாழ்க்கை வரலாறு நூல்களிலும் இருக்கின்றன. சிலவற்றை இன்று நான் சுருக்கமாக எடுத்துரைக்கிறேன். இனி எப்பொழுது வாய்ப்பு கிடைத்தாலும் அவற்றின் விளக்கங்களையும் எடுத்துக் கூறிக் கொண்டே செல்வேன்.

முதல் விஷயமோ அல்லாஹ்விற்கான உரிமையாகும். அதாவது, அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமை. அதில் நமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் என்ன முன்மாதிரி தென்படுகிறது! நாம் பார்க்கிறோம்! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முழு வாழ்நாளும், இறைவன் மீதான அளவற்ற நேசத்தில் மூழ்கியிருக்கின்றது. அன்னார் (ஸல்) மீது மிகப் பெரும் பெரும் பொறுப்புகள் இருந்த போதிலும், புதிய ஷரீஅத்தை அமல்படுத்த வேண்டியிருந்தது. மக்களுக்குத் தர்பிய்யத் வழங்க வேண்டியிருந்தது.

இது குறித்து ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

அறிவீனர்களை மனிதர்களாக மாற்றினார்கள்; கல்வி பயின்ற மனிதர்களாக ஆக்கினார்கள்; இறை மக்களாக மாற்றினார்கள். (லெக்சர் ஸியால்கோட், ரூஹானீ கஸாயீன், தொகுதி 20, பக் 206)

இது மிகப் பெரும் பணியாக இருந்தது. ஆனால், அன்னார் (ஸல்) அல்லாஹ்வுக்கான உரிமையை, அதாவது, இபாதத்துக்கான உரிமையை ஒருபோதும் மறக்கவில்லை. இது மிகப் பெரிய மற்றும் மிகவும் முக்கியமான விஷயமாகும். அதற்கிடையே அன்னாருக்கு சிரமங்களும் வந்தன. போர்களுக்காகவும் செல்ல வேண்டி வந்தது. எதிரிகள் தாக்குதலும் தொடுத்தனர். ஆனால், அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமையை செலுத்துவதில் அன்னார் ஒருபோதும் குறை வைக்கவில்லை.

ஆக, இந்த முன்மாதிரிதான் நம் முன்னும் உள்ளது. அதாவது, நாம் எல்லா நிலையிலும் அல்லாஹ்வை முன்னிறுத்த வேண்டும். நாம் அல்லாஹ்வை முன்னிறுத்தும்போது, நம்முடைய பல்வேறு பிரச்சனைகள் தாமாகவே தீர்ந்து போய் விடும். எங்களுக்கு இந்தப் பிரச்சனை உள்ளது; அந்தப் பிரச்சனை உள்ளது என்று மக்கள் கேட்கிறார்கள். நாங்கள் இப்படி துஆ செய்தோம்; அப்படி துஆ செய்தோம் என்று கூறுகிறார்கள். தம் பிரச்சனைகளுக்காக துஆ செய்கிறார்கள். ஆனால், நாம் அல்லாஹ்வுக்கான உரிமையை செலுத்துவதில்லை. எனவே, பிறகு, மனிதன் இழப்பிற்குரியவனாகி விடுகிறான். எனக்கான உரிமையையும் செலுத்துங்கள் என்று அல்லாஹ் கூறுகிறான்.

பெருமானார் (ஸல்) அவர்களின் இபாதத்துகளின் தரம் என்னவாக இருந்தது? என்று பார்ப்போம்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவு கழிந்ததும், பாதி இரவு கழிந்ததும் இறைவனை வணங்குவதற்காக எழுந்து நிற்பார்கள். இதற்கு அல்லாஹ்வும் சான்று பகர்ந்துள்ளான்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ஒருமுறை அன்னார் இபாதத்துக்காக நின்று கொண்டிருந்த இத்தகைய தருணத்தில் அன்னாரிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இறைவனுக்கோ தாங்கள் ஏற்கனவே நெருக்கமானவர் ஆவீர்கள். பிறகு, ஏன் தங்களுடைய ஆன்மாவை இவ்வளவு துன்பத்தில் ஆழ்த்திக் கொள்கிறீர்கள்? இரவின் பெரும் பகுதியை இபாதத்தில் கழித்து விடுகிறீர்கள்? அல்லாஹ்வுக்கு முன்பு அழுது மன்றாடுகின்றீர்கள்? என்று கேட்டேன். அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள்

أَفَلَا أَكُونَ عَبْدًا شَكُورًا

என்று கூறினார்கள். (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம், தொகுதி20, பக் -382)

பொருள்: ஆயிஷாவே! நான் இறைவனுக்கு நெருக்கமானவன் என்பதும், இறைவன் தனது அருளைப் புரிந்து எனக்கு இந்த நெருக்கதை வழங்கியுள்ளான் என்பதும் உண்மைதான். ஆக, நான் அவனுக்கு நன்றி செலுத்துவது எனது கடமை அல்லவா? ஏனெனில், கருணைக்கு பகரமாகவே நன்றி செலுத்தப்படுகிறது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

இதைப் பாருங்கள்! அல்லாஹ் அன்னார் (ஸல்) மீது அருள் புரிந்தான். அன்னாரை இறுதி ஷரீஅத்தின் நபியாக ஆக்கினான். அன்னார் (ஸல்) மீது இறுதி வேதத்தை முழுமைப்படுத்தினான். ஷரீஅத்தை முழுமைப்படுத்தினான். இதனால் பெருமானார் (ஸல்) அவர்கள், நான் நன்றி செலுத்த வேண்டாமா! எனக் கூறினார்கள். மேலும், தனது நிலைக்கு ஏற்ப ஒவ்வொரு மனிதன் மீதும் அல்லாஹ் பெரும் அருள் புரிந்துள்ளான். நாம் நம்முடைய இறைவணக்கங்களின் தரத்தை உயர்த்திடுவதே அந்த நன்றி செலுத்துதலுக்கான உரிமை ஆகும்.

மக்கள் கேள்வி கேட்டு விடுகிறார்கள்; இளைஞர்களும் வருகிறார்கள்;நாம் எவ்வாறு அல்லாஹ்வை வணங்குவது? மேலும் அல்லாஹ்வுக்கு நம்முடைய இபாதத்துகளின் தேவை என்ன? என்று கேட்கிறார்கள். ஆக, அதற்கான பதில் இதுவே ஆகும் - இன்றைய கால உலகத்தின் தாக்கத்திற்குள்ளாகி பிள்ளைகளும் இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள் - ஆக, அதற்கான பதில் இதுவே ஆகும்: அல்லாஹ்வுக்கு உங்களுடைய இபாதத்துகளின் தேவை இல்லை. ஆனால், அல்லாஹ் உங்கள் மீது மார்க்க அடிப்படையிலும், உலக ரீதியிலும் புரிந்துள்ள பேரருள்கள் இருக்கின்றனவே! அவை நீங்கள் அவனுடைய பேரருள்களுக்கு நன்றி செலுத்துவதையும், நன்றி செலுத்தும் அடியாராக ஆவதையும் எதிர்பார்க்கவில்லையா?

இவ்வாறே பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் இந்த நிகழ்வும் கிடைக்கிறது:

பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவனின் இறை வேதத்தைக் கேட்கும்போது, குறிப்பாக, அன்னாருக்கு அன்னாருடைய பொறுப்புகள் குறித்து கவனமூட்டப்பட்டுள்ள வசனங்கள் வரும்போது, கட்டுப்பாடின்றி அன்னாருடைய கண்களில் கண்ணீர் வந்து விடும்.

ஆக, ஓர் அறிவிப்பில் வருகிறது, ஒருநாள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸூது (ரலி) அவர்களிடம், நான் கேட்பதற்குத் திருக்குர்ஆன் ஓதிக் காட்டுங்கள் என்று கூறினார்கள். அவர்கள் கூறுகிறார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! திருக்குர்ஆனோ தங்கள் மீது இறங்கியுள்ளது! நான் என்ன தங்களுக்கு ஓதிக்காட்டுவது என்று பணிவுடன் கேட்டேன். அதற்கு, மற்ற மக்களையும் திருக்குர்ஆன் ஓத வைத்துக் கேட்பதை நான் விரும்புகிறேன்

என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இதனால் நான் சூரா அந்நிஸா ஓதிக் காட்டத் துவங்கினேன். நான் ஓதியவாறு இந்த வசனத்தை எட்டினேன்:

فَكَيْفَ اِذَا جِئْنَا مِنْ كُلِّ اُمَّةٍۭ بِشَهِيْدٍ
وَّجِئْنَا بِكَ عَلٰى هٰٓؤُلَآءِ شَهِيْدًا

பொருள்: நாம் ஒவ்வொரு சமுதாயத்திலிருந்தும் அதன் நபியை அவருடைய சமுதாயத்திற்கு முன்னால் நிற்க வைத்து, அந்த சமுதாயத்துக்கான கணக்கு வழக்கைப் பார்க்கும் போதும், உம்மையும் உமது சமுதாயத்துக்கு முன்னால் நிற்க வைத்து, அதற்கான கணக்கு வழக்கைப் பார்க்கும் போதும், அப்பொழுது நிலை என்னவாகும்.(.....)

அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், போதும்! போதும்! என்று கூறினார்கள். ஸஹாபி கூறுகிறார்கள்: நான் அன்னாரை நோக்கி பார்த்தபோது, அன்னாருடைய இரு கண்களிலிருந்தும், தாரை தாரையாக கண்ணீர் வழிந்துக் கொண்டிருந்தது. இந்த அளவுக்கு அன்னாருக்கு உருக்கம் ஏற்பட்டு விட்டது. அந்த நேரத்தில் அன்னாருக்கு நிச்சயமாக சமுதாயம் குறித்தும் கவலை ஏற்பட்டிருக்கும். அல்லாஹ்வின் விருப்பமின்மைக்கு ஆளாகக்கூடிய எந்த செயலையும் எனது சமுதாயம் செய்து விடக்கூடாது; இவ்வாறு, நான் அவர்களுக்கு எதிராக சாட்சி பகரும் நிலை வரக்கூடாது (என்று கவலை கொண்டிருப்பார்கள்).

எனவே, இதிலிருந்து இந்த ஓர் அம்சமும் வெளிப்படுகிறது: அன்னாரது சாட்சி பகர்தலுக்காக இன்னும் பல விஷயங்களும் இருக்கின்ற அதே வேளையில், அன்னாருடைய சாட்சியம் நமக்கு எதிராக எங்கும் இருந்து விடக் கூடாது என்று நாம் அஞ்ச வேண்டும். நம்முடைய பாவங்களை வெளிப்படுத்தும் வகையில், நாம் அல்லாஹ்வின் தண்டனைக்கு உரியவர்களாக ஆகும் வகையில் நம்முடைய அசல்நிலை இருந்து விடக் கூடாது. எனவே, இது மிகவும் அஞ்ச வேண்டிய இடமாகும். நாமும் இந்த இறை வணக்கங்களின் உரிமையை செலுத்த வேண்டும். மாநபி (ஸல்) அவர்கள் நமக்கு வலியுறுத்திக் கூறியுள்ள, அல்லாஹ் நமக்குத் திருக்குர்ஆனில் கட்டளையிட்டுள்ள அத்தகைய அளப்பரிய நேசத்தை நாம் அல்லாஹ்வின் மீது கொள்ள வேண்டும்.

தொழுகையைப் பேணுவதை எடுத்துக் கொள்ளுங்கள்! அதில் அன்னார் (ஸல்) எந்த அளவுக்கு அக்கறை கொண்டிருந்தார்கள் என்றால், கடுமையான நோயின் நிலையிலும், படுத்துக் கொண்டு தொழுது கொள்வதற்கான அனுமதி இருக்கின்ற இறுதி நாள்களிலும், வரலாற்றில் வருகிறது, அன்னார் (ஸல்) மக்களுடைய கைத்தாங்கலாக பள்ளிவாசலை நோக்கிச் சென்றார்கள்.

ஒருநாள் அன்னாரால் வர முடியாதபோது, அன்னார் (ஸல்) ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குத் தொழ வைக்கக் கட்டளையிட்டார்கள். அப்பொழுது அன்னார் (ஸல்) தமது உடல் நிலை சற்று முன்னேற்றத்தைக் கண்டார்கள். எனவே, உடனடியாக இரண்டு பேர் கைத்தாங்கலாகப் பள்ளிவாசலை நோக்கி செல்லத் துவங்கினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அந்த நிலையிலும் கூட நிலைமை எப்படி இருந்தது எனில், அன்னாருடைய இரண்டு பாதங்களும் தரையில் தேய்த்துக் கொண்டிருந்தன. ஆனால், ஜமாஅத்தான தொழுகை அன்னார் (ஸல்) கண்முன் இருந்தது. அன்னார் (ஸல்) உம்மத்துக்குக் காட்ட விரும்பினார்கள். எனவே, அன்னார் (ஸல்) அந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டார்கள். பாதங்கள் தரையில் தேய்ந்த நிலையில் அங்கே சென்றடைந்தார்கள். அங்கு பள்ளிவாசலுக்கு சென்று விட்டார்கள். தம்முடைய வேதனையைப் பொருட்படுத்தவில்லை.

ஆக, இதுதான் அன்னார் (ஸல்) அல்லாஹ்வின் மீது கொண்டிருந்த அன்பின் நிலை ஆகும். இது தொடர்பாக மக்களுக்குத் தர்பிய்யத்தும் எப்படி வழங்கி வந்தார்கள்! ஒன்றோ தொழுகைகளைக் கடைபிடிப்பதன் பக்கம் கவனம்! பிறகு, அல்லாஹ்வின் மகத்துவம்! அவனது அந்தஸ்த்து ஆகியவற்றை மக்களுக்கு எப்படிப் பதியச் செய்தார்கள்! எப்படி தர்பிய்யத் வழங்கி வந்தார்கள் பாருங்கள்! அரேபியர்களிடம் ஒரு வழக்கம் இருந்தது. அதாவது, கவனமூட்டுவதற்காக கைதட்டப்பட்டு வந்தது. அந்தக் காலத்திலோ இந்த வழக்கம் சாதாரணமானதாக இருந்தது. ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த வழக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, அதற்குப் பதிலாக இறைவனை நினைவு கூர்தல் இருக்க வேண்டும் என்று கூறினார்கள்.

இது குறித்து எழுதப்பட்டுள்ளது: ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஏதோ ஒரு வேலையில் மூழ்கியிருந்தார்கள். அப்பொழுது தொழுகை நேரம் வந்து விட்டது. தொழ வைக்குமாறு அபூ பக்ர் அவர்களிடம் கூறுங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

இதற்குள் அன்னாரது வேலை முடிந்து விட்டது. உடனடியாக பள்ளிவாசலை நோக்கி நடந்தார்கள். அன்னார் (ஸல்) பள்ளிவாசலை அடைந்தபோது, ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள் தொழ வைத்துக் கொண்டிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலுக்குள் வந்து விட்டார்கள் என்பது மக்களுக்குத் தெரிந்ததும், தொழுது கொண்டிருந்தவர்கள் தம் நிலை மறந்து கைதட்ட ஆரம்பித்து விட்டனர்.

இதன் மூலம், ஒருபக்கமோ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வந்ததனால், தங்களுடைய உள்ளங்கள் அளவற்ற மகிழ்ச்சி அடைந்து விட்டன என்று சொல்வது நோக்கமாக இருந்தது. மறுபக்கம், அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு, இப்பொழுது உங்களுடைய இமாமத் முடிந்து விட்டது; ஏனெனில், நபி பெருமானார் (ஸல்) அவர்கள் வருகை தந்துள்ளார்கள் என்று கவனமூட்டுவது நோக்கமாக இருந்தது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பின்னால் வந்து விட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காக இமாமத்துக்கான இடத்தை விட்டுவிட்டார்கள். தொழுகைக்குப் பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அபூபக்ரே! நான் உமக்கு தொழ வைக்குமாறு கட்டளையிட்டிருந்தபோது, எதற்குப் பின்னால் வந்துவிட்டீர்? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகவும் பணிவுடன் கூறினார்கள். எந்த அளவு தூய்மை இருந்தது என்று பாருங்கள்! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ்வுடைய தூதர் (ஸல்) இருக்கும் பொழுது, தொழ வைப்பதற்கு அபூ கஹாஃபாவின் மகனுக்கு என்ன அந்தஸ்து இருக்கின்றது? என்று கூறினார்கள்.

பிறகு நபி (ஸல்) அவர்கள் ஸஹாபிகளைப் பார்த்து, நீங்கள் எதற்காக கைதட்டினீர்கள்? இறைவனை நினைவு கூர்கின்றபொழுது கைதட்டுவது பொருத்தமானது அல்ல என்று கூறினார்கள். இதிலிருந்து தெரியவருவதாவது, தொழுகையின் போது, இப்படி ஏதும் நடந்தால், அது பொருத்தமற்ற விஷயமாகத் தெரிகிறது. தொழுகையின் போது, ஒரு விஷயத்தின் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாக இருக்கும் வகையில் ஏதாவது நடக்கிறது என்றால், கைதட்டுவதற்கு பதிலாக இறைவனின் பெயரை உரத்த குரலில் கூறுங்கள். ஸுப்ஹானல்லாஹ் என்று கூற வேண்டும்; நீங்கள் அப்படி செய்யும் பொழுது, தானாகவே மற்றவர்களுடைய கவனம் அந்த விஷயத்தின் பக்கம் சென்றுவிடும்.

இதேபோன்று பெருமானார் (ஸல்) அவர்கள் வீண் சிரமங்களை மேற்கொண்டு செய்யும் இபாதத்தையும் விரும்பவில்லை. இபாதத்கள் பக்கம் இவ்வளவு கவனமூட்டி வந்த பிறகும் கூட, பெருமானார் (ஸல்) அவர்கள், தேவையற்ற சிரமங்களை மேற்கொள்ளக்

கூடாது என்று கூறி வந்தார்கள்.

ஒருமுறை அன்னார் (ஸல்) வீட்டிற்குச் சென்றார்கள். அப்பொழுது இரண்டு தூண்களுக்கு நடுவில் ஒரு கயிறு தொங்குவதைப் பார்த்தார்கள். அன்னார், இந்தக் கயிறு ஏன் கட்டப்பட்டுள்ளது? என்று கேட்டார்கள். இது ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களின் கயிறு ஆகும். அவர்கள் இபாதத் செய்து செய்து களைப்படைந்து விடும்போது, இந்தக் கயிறு தாங்கலாக பிடித்துக் கொள்வார்கள் என்று மக்கள் கூறினர். அதற்கு, இப்படி செய்யக்கூடாது; இந்தக் கயிற்றை அவிழ்த்து விடுங்கள்; ஒவ்வொருவரும் தனது மனதில் களிப்பு இருக்கும் வரை மட்டுமே இபாதத் செய்ய வேண்டும்; களைப்படையும்போது, உட்கார்ந்துக் கொள்ள வேண்டும்; இதுபோன்று தேவையற்ற சிரமங்களை மேற்கொண்டு செய்யும் இறைவணக்கம் எந்தப் பலனும் சேர்க்க முடியாது என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இதிலிருந்து அன்னாரது தர்பிய்யத் வழங்குதல் தெரிய வருகிறது. ஒன்று அன்னாரது தர்பிய்யத்தின் தாக்கத்தால் ஸஹாபியாக்கள், பெருமானார் (ஸல்) அவர்களின் வீட்டு மக்கள் மற்றும் குடும்பத்தினரும் இறைவணக்கத்தில் ஆர்வம் கொண்டிருந்தார்கள். தம்மை துன்பத்தில் ஆழ்த்திக் கொள்வார்கள். மறுபுறம், பெருமானார் (ஸல்) அவர்கள், உங்களைத் துன்பத்தில் ஆழ்த்திக் கொள்ளத் தேவையில்லை. மாறாக, நிம்மதியாக இபாதத் செய்யுங்கள் என்பதையும் கூறி விட்டார்கள்.

ஆனால், இன்றைய காலத்து மக்களுக்கு நான் இதையும் கூறிவிடுகின்றேன்: இதற்கு இந்த அர்த்தமும் கிடையாது. அதாவது, இன்றைய காலத்து மக்கள் சிலவேளை இப்படி சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள்: துன்பத்தில் ஆழ்த்திக் கொள்ள வேண்டிய தேவையில்லை; எனவே வேகவேகமாக தொழுது கொள்ளலாம். இது ஒரு கடமையாகும். அதை நிறைவேற்றி விட்டு தலையிலிருந்து இறக்கி வைத்து விடலாம். உங்களுக்கு வசதி ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்ற விஷயத்துக்கு முற்றிலும் எதிர்மறையான பொருள் கொள்ளத் துவங்கி விட்டார்கள்.

இன்றைய நாட்களில் தொழுகையாளிகள் சிலர் வருகிறார்கள்; சில நிமிடங்களில் தொழுதார்கள்; முடித்துவிட்டார்கள் என்று இருக்கிறார்கள். அல்லது வீடுகளில் தொழுகிறார்கள். அப்பொழுது ஒரு சில நிமிடங்களில் தொழுது முடித்து விடுகிறார்கள். பலமுறை என்னிடம், இங்கும் மக்கள், எப்படித் தொழ வேண்டும்? என்று கேள்வி கேட்டு விடுகிறார்கள்.

ஆக, தொழுகையை நிறுத்தி நிதானமாகத் தொழ வேண்டும். இதைக் குறித்து, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு ஹதீஸ் உள்ளது: ஒரு ஸஹாபிக்கு அன்னார் (ஸல்) 3, 4 முறை தொழுமாறு வலியுறுத்தினார்கள். அவர் அன்னாரது அவைக்குத் தாமதமாக வந்தார். பெருமானார் (ஸல்) அவர்கள் தொழ வைத்துவிட்டு அவையில் அமர்ந்திருந்தார்கள். ஜமாஅத்தான தொழுகை முடிந்திருந்தது. அவை கூடியிருந்தது. ஒவ்வொரு முறையும் அந்த ஸஹாபி தொழுவார். பிறகு அன்னாரிடம் வருவார். அப்பொழுது, மீண்டும் சென்று தொழுவீராக! என்று அன்னார் (ஸல்) கூறுவார்கள். அவர் மீண்டும் தொழுது விட்டு வருவார். அப்பொழுது அன்னார் (ஸல்) மீண்டும் சென்று தொழுவீராக! என்று கூறுவார்கள். இவ்வாறு மூன்று, நான்கு முறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரை மீண்டும் தொழுமாறு வலியுறுத்தினார்கள். எனக்கு இதை விடச் சிறப்பாக தொழுவதற்கான வழிமுறை தெரியாது; எப்படித் தொழ வேண்டும் என்று தாங்கள் கூறுங்கள் என்று அவர் பணிவுடன் கூறினார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், தொழுகையை நிறுத்தி நிதானமாக தொழுங்கள்; அல்லாஹ்வை நினைவு கூர்ந்திடுங்கள்; துரூத் ஓதுங்கள். தவ்ஹீத் மற்றும் தஹ்மீது ஆகியவற்றை ஓதுங்கள்; ருகூவு மற்றும் ஸஜ்தா ஆகியவையும் சரியாக இருக்க வேண்டும் என்று கூறினார்கள்.

எனவே, இதையும் நினைவில் கொள்ளுங்கள். வசதியாகத் தொழ வேண்டும் என்பதற்கு அவசர அவசரமாகத் தொழ வேண்டும் என்பது பொருள் கிடையாது. ஏனென்றால், எளிமையாகத் தொழுங்கள் என்று அறிவிப்பில் ஒன்று வந்துவிட்டது. நமக்கு உறக்கம் வந்தது என்று வேக வேகமாக இரண்டு நிமிடத்தில் தொழுவது கூடாது. மயக்க நிலையில் தொழுவது சாதாரணமாகவே தடுக்கப்பட்டுள்ளது. இது ஆகுமானதல்ல. மாறாக, தொழ வேண்டும் என்றால், அதற்கான உரிமையையும் செலுத்த வேண்டும். அதையும் அன்னார் (ஸல்) வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள்.

ஷிர்க்கை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு வெறுத்தார்கள் என்றால், வஃபாத் நேரத்தில் அன்னார் (ஸல்) இறுதி நேரத்தின் துன்பத்தில் மூழ்கியிருந்த பொழுது, அன்னார் (ஸல்) சிலவேளை வலது பக்கம் திரும்பிப் படுப்பார்கள். சிலவேளை இடது பக்கம் திரும்பிப் படுப்பார்கள். மேலும், தங்களுடைய நபிமார்களின் மண்ணறைகளைப் பள்ளிவாயில்களாக ஆக்கிக் கொண்ட அந்த யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் மீது இறைவன் சாபமிடுவானாக! என்று கூறிக் கொண்டே செல்வார்கள்.

அதாவது, அவர்கள் நபிமார்களின் மண்ணறைகளில் ஸஜ்தா செய்கிறார்கள். அவர்களிடம் துஆ கேட்கிறார்கள். அன்னாரது கூற்றின் பொருள் என்னவென்றால், எனது சமுதாயம் எனக்குப் பிறகு இப்படிப்பட்ட செயலை செய்தால், அது எனது துஆக்களைப் பெறும் என்று நினைக்க வேண்டாம். மாறாக, நான் அதை விட்டு முற்றிலும் விலகியிருப்பேன். ஏற்கனவே கூறப்பட்டிருந்தது, அல்லாஹ் சாட்சி கேட்பான். இப்பொழுது பாருங்களேன்! மதீனாவிலோ நபி (ஸல்) அவர்களுடைய அருளுக்குரிய மண்ணறையிடம் அரசாங்கம் பெரும் கட்டுப்பாடுகளை விதித்து வைத்திருக்கின்றது. இதன் காரணமாகவே, யாரையும் சஜ்தா செய்ய விட மாட்டார்கள். அருகில் கூட வரவிட மாட்டார்கள். ஆனால், பல முஸ்லிம் நாடுகளில் பீர்மார்கள் மற்றும் ஃபக்கீர்மார்களுடைய தர்காக்களில் ஸஜ்தாக்கள் செய்யப்படுவதுண்டு. பெரியவர்களிடம், வேண்டிக் கொள்ளப்படுவதுண்டு. இந்த வழிமுறை ஷிர்க் ஆகும். இதை நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள். தமக்கு முன் செய்வதைத் தடுத்திருக்கின்றார்கள். அவ்வாறிருக்க, வேறு ஒரு பீர், ஃபகீர் அல்லது சான்றோருக்கு அவர்களுடைய கப்ர் முன் ஸஜ்தா செய்யப்படுதவற்கு அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது. அல்லாஹ்வின் அருளால், நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக்கொண்டு, இந்தத் தீமைகளிலிருந்தோ நம்மைக் காப்பாற்றிக் கொண்டோம்தான்.

ஆனால், எவ்வாறாயினும், நாம் இபாதத்களின் தரத்தை பெற்றே தீர வேண்டும். ஆனால் மற்றவர்களிடம், மற்ற முஸ்லிம்களிடம் இது அதிகமாக வழக்கத்தில் இருக்கிறது. அவர்கள் அந்த ஷிர்க்கிலிருந்து (இணைவைப்பிலிருந்து) விடுபடுவதற்கு அல்லாஹ் அவர்கள் மீதும் கருணை புரிவானாக! அவர்களுக்கு அறிவையும் புரிதலையும் வழங்குவானாக!

இறைவனுக்கு முன்னால் பணிவு எந்த அளவுக்கு இருந்தது என்றால், மக்கள் அன்னாரிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்களோ தங்களுடைய அமல்களின் வலுவால் இறைவனின் அருளைப் பெற்று விடுவீர்கள். ஏனென்றால், அல்லாஹ் தங்களுக்கு சான்றிதழ் வழங்கிவிட்டான். தங்களுடைய நல்லொழுக்கங்களைப் புகழ்ந்துள்ளான். தங்களுடைய முன்மாதிரியை முஸ்லிம்களுக்கு அமல் செய்வதற்கான ஒரு தரமாக நிறுத்திவிட்டான். இதன் பொருள், தங்களுடைய அமல்கள் எப்படிப்பட்டவை என்றால், அல்லாஹ் தங்களை மன்னித்தருள்வான். அல்லது மன்னித்து விட்டான் என்று கூறினார்கள். அதற்கு அன்னார் (ஸல்) இல்லை! இல்லை! நானும் இறைவனுடைய பேரருளினாலேயே மன்னிக்கப்படுவேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூஹுரைரா

(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நான் ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டேன். எந்த நபரும் தன்னுடைய அமல்களால் சொர்க்கத்தில் நுழைய மாட்டார் என்று அன்னார் (ஸல்) கூறிக் கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்களும் தங்களுடைய அமல்களால் சொர்க்கத்தில் நுழைய மாட்டீர்களா? என்று நான் பணிவுடன் கேட்டேன். அதற்கு, அன்னார் (ஸல்) நானும் என்னுடைய அமல்களின் வலுவால் சொர்க்கத்தில் நுழைய முடியாது. எனினும், இறைவனின் அருள் மற்றும் கருணை என்னைப் போர்த்திக் கொண்டால், இது ஒன்றுதான் வழியாகும் என்று கூறினார்கள்.

இது புஹாரீயின் அறிவிப்பாகும். பிறகு அன்னார் (ஸல்) அறிவுரை வழங்கியவாறு கூறினார்கள்: உங்களுடைய வேலைகளில் நன்மையை மேற்கொள்ளுங்கள். இறைவனுடைய நெருக்கத்திற்கான வழிகளைத் தேடுங்கள். மேலும், கூறினார்கள்: உங்களில் எவரும் தனது மரணத்துக்கு ஆசைப்பட வேண்டாம். அவர் நல்லவர் என்றால், உயிருடன் இருந்து தன்னுடைய நன்மைகளில் இன்னும் முன்னேறி விடுவார். தீயவர் என்றால், உயிருடன் இருந்து அவருக்கு தன் பாவங்களிலிருந்து தவ்பா செய்வதற்கு நல்வாய்ப்பு கிடைக்கும். சிந்தனை உருவாகி விடும்.

இது ஒரு மிகவும் முக்கியமான அறிவுரையாகும். இதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, எப்பொழுதும் மரணத்துக்கு ஆசைப்படக்கூடாது. இதற்கான காரணத்தை நபி (ஸல்) அவர்கள் இப்படி கூறியிருக்கின்றார்கள்: ஏதாவது துன்பத்தினால், நீங்கள் இப்படி செய்கிறீர்கள் என்றால் - மனிதன் ஏதாவது காரணத்தினால் தானே மரணத்துக்காக ஆசைப்படுகிறான் - உங்களுடைய நன்மைகள் ஏதும் இருக்கின்றவென்றால், அல்லாஹ் உங்களுக்கு மேற்கொண்டு நன்மைகள் செய்ய நல்வாய்ப்பு வழங்குவான். மறுமையில் உங்களுக்கு சிறந்த ஏற்பாடு இருக்கும்.

உங்களுடைய பாவங்களை மன்னித்து விடுவான். உங்களிடம் தீமைகள் இருக்கின்றன என்றால், தவ்பா, இஸ்திஃக்ஃபார் செய்வதற்கு நல்வாய்ப்பு கிடைக்கும். உங்களுக்கு இதன் பக்கம் கவனம் பிறந்து விட்டால், தீமைகளிலிருந்து விடுதலை கிடைத்து விடும். பிறகும், அல்லாஹ்வுடைய நெருக்கத்தைப் பெறுவீர்கள். நேரம் வரும் போது, அந்த நேரத்தில் பிறகு அல்லாஹ் உங்களோடு எப்படி நடந்து கொள்வான் என்றால், உங்களுக்கு பாவமன்னிப்பும் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது; கிடைக்கவும் செய்யும்.

அன்னாருடைய இபாதத்களின் தரத்தைப் பார்த்து விட்டோம். மற்றவர்களுக்கும் கவனமூட்டி வந்தார்கள்.

அறிவிப்பில் வருகிறது, ஒருமுறை அன்னார் (ஸல்) இரவு நேரத்தில் தம் மருமகன் ஹஸ்ரத் அலீ மற்றும் தம் மகள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) ஆகியோரின் வீட்டுக்குச் சென்றார்கள். அவர்களிடம், தஹஜ்ஜுத் தொழுது வருகிறீர்களா? என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தொழுவதற்கோ முயற்சி செய்கின்றோம்தான். ஆனால், இறை நாட்டத்துக்கு ஏற்ப என்றாவது நாங்கள் கண்விழிப்பதில்லை. பிறகு, தஹஜ்ஜுத் விடுபட்டு விடுகிறது என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பணிவுடன் கூறினார்கள்.

தஹஜ்ஜுத் தொழுது வாருங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.. பிறகு எழுந்து தம் வீட்டை நோக்கிச் செல்லத் துவங்கினார்கள். செல்லும் வழியில் அன்னார் (ஸல்) وَكَانَ الْإِنسَانُ أَكْثَرَ شَيْءٍ جَدَلًا என்று என்று மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருந்தார்கள். பொருள்: மனிதன் பெரும்பாலும் தனது தவறை ஏற்பதற்குப் பதற்றப்படுகிறான். பல்வேறு வகையான சான்றுகளைத் தந்து தனது தவறின் மீது திரையிடுகின்றான்.

எனவே, அன்னார் (ஸல்) அங்கு அவர்களுக்கு முன்னாலும் கூறினார்கள். அவர்களுக்குப் புரிய வைத்தார்கள். திரும்பி வரும் போதும், இந்த விஷயத்தை மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டே சென்றார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் வரை மற்ற மக்களும் இந்த விஷயத்தை எட்ட வைப்பதற்காக அவ்வாறு செய்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு இந்தப் பாடத்தைக் கற்றுக் கொடுத்தார்கள். எப்பொழுதாவது எங்களிடம் பிழை ஏற்பட்டு விடுகிறது, அதாவது, தவறு ஏற்பட்டு விடுகிறது; எனவே, எங்களால் எழுந்திருக்க முடிவதில்லை என்று சொல்லியிருக்க வேண்டும். அவ்வாறு சொல்வதற்குப் பதிலாக இறைவனின் நாட்டமிருந்தால் நாங்கள் விழித்துக் கொள்கிறோம்; இல்லையென்றால், உறங்கிக் கிடக்கிறோம் என்று அவர்கள் இந்த விஷயத்தை அல்லாஹ்வின் மீது போட்டு விட்டார்கள்.

ஆக, உங்கள் தவறை அல்லாஹ்வின் பக்கம் ஏன் கொண்டு செல்கிறீர்கள்? என்பது பெருமானார் (ஸல்) அவர்களின் நோக்கமாக இருந்தது.

முன்னரும் கூறப்பட்டுள்ளபடி, அன்னாருக்கு இபாதத்தில் எந்த வகையான பாசாங்கும் அல்லது பகட்டும் பிடிக்கவில்லை. எடுத்துக்காட்டாக, அன்னார் (ஸல்) ஒருமுறை தமது இல்லத்தில் கயிறுகள் தொங்குவதைக் கண்டார்கள். அப்பொழுது அன்னார் (ஸல்), அவர்களைத் தடுத்து கயிறுகளை அவிழ்த்து விடுங்கள் என்று கூறினார்கள். இது பெருமானார் (ஸல்) அவர்களின் கோட்பாடாக இருந்தது. அதாவது, எந்த ஆற்றல்களை அல்லாஹ் மனிதனிடம் உருவாக்கியுள்ளானோ அவற்றை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். இதுவே அசல் இபாதத் ஆகும். கண்கள் இருக்கும்போது, கண்ணை மூடிக் கொள்வது அல்லது அதை பிடுங்கி எடுக்கச் செய்வது ஒன்றும் இபாதத் கிடையாது. மாறாக, இது அவமதித்தல் ஆகும். எனினும், அவற்றைத் தவறாகப் பயன்படுத்துவது பாவமாகும். இப்பொழுது இன்றைய நாளில் பார்த்துக் கொள்ளுங்கள்! உலகின் இத்தகைய பல்வேறு விஷயங்கள் உள்ளன. மனிதர்களின் ஆசைகள் உள்ளன. ஈர்ப்புகள் உள்ளன. அவை நம்மைத் தம் பக்கம் ஈர்க்கின்றன. நாம் அவற்றின் பக்கம் கவனம் செலுத்தினால், தவறான வகை நிகழ்ச்சிகளைத் டி.வியில் பார்க்கிறோம்; அல்லது இணையத்தில் பார்க்கிறோம்; அல்லது பொருத்தமற்ற விஷயம் எதையும் பார்க்கிறோம் என்றால், இது பாவமாகும்.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: அந்தப் பாவத்திலிருந்து தவிர்ந்திருப்பது அசல் விஷயமாகும். இதுவே உங்களை நற்கூலிக்கு உரியவராக ஆக்கும். அவ்வாறே காதுகளை மூடிக் கொள்வது ஒன்றும் நன்மை கிடையாது. அல்லாஹ் ஒரு திறனை வழங்கியிருக்கிறான். ஏன் அதை மூடுகிறீர்கள்? இதை அவமதித்தல் என்றே சொல்ல வேண்டும். அல்லாஹ் உங்களுக்கு ஓர் அருட்கொடையை வழங்கியுள்ளான். நீங்கள் அதை வீணாக்குகிறீர்கள். எனினும், மக்களின் புறங்கூறுதல் மற்றும் கோள் சொல்லுதல் ஆகியவற்றைக் கேட்பது பாவமாகும்.

பல மக்கள் இருக்கிறார்கள். புறங்கூறவும் செய்கிறார்கள். கோள் பேசுவதையும் கேட்கிறார்கள். மக்களைப் பற்றி தவறான விஷயங்களைக் கேட்கிறார்கள். பிறகு, அதிலிருந்து இன்பமும் அடைந்து கொண்டிருப்பார்கள். மக்களின் பலவீனங்கள் மற்றும் தவறான விஷயங்களைக் கேட்டு சிரித்தும் கொண்டிருப்பார்கள். இந்த விஷயங்கள் தவறாகும். இது பாவமாகும்.

இதைப் பற்றி அன்னார் (ஸல்) கூறினார்கள்: இத்தகைய செயல்களை செய்யாதீர்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்: இயல்பான ஆற்றல்களை சரியான முறையில் பயன்படுத்துதலே நல்லொழுக்கம் ஆகும். இயல்பான ஆற்றல்களை அழித்து விடுவது முட்டாள்தனமாகும். அவற்றைத் தகாத செயல்களில் ஈடுபடுத்துவது

தீய நடத்தையாகும். அவற்றிற்கான அசல் மற்றும் சரியான பயன்பாடு நன்மையாகும். இது பெருமானார் (ஸல்) அவர்களின் போதனைகளின் சுருக்கமாகும். இதுவே மாநபி (ஸல்) அவர்களின் சுயவாழ்வின் சுருக்கமுமாகும். இதன் காரணமாகத்தான், நீங்கள் முன்மாதிரியாக அதை மேற்கொள்ளுங்கள் என்று அல்லாஹ் நமக்குக் கட்டளையிட்டுள்ளான்.

ஹுஸுர் (ஸல்) அவர்களின் அமல்கள் தொடர்பாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்வில், அன்னாருக்கு முன்னால் இரண்டு வழிகள் திறந்திருந்து, அன்னார் (ஸல்) அவ்விரு வழிகளில் எளிமையான வழியைத் தேர்ந்தெடுக்காமல் இருந்தது ஒருபோதும் நடக்கவில்லை. எனினும், எளிய வழியைத் தேர்ந்தெடுப்பதில் பாவத்திற்கான எந்த சாத்தியமும் இல்லாமல் இருப்பது நிபந்தனை. இப்பொழுது இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று எளிய வழி, மற்றொன்று சிரமமான வழி.

ஆக, பெருமானார் (ஸல்) அவர்கள் எது எளிய வழியோ அதை மேற்கொள்ள முயற்சி செய்வார்கள். ஏனெனில், அல்லாஹ் தேவையில்லாமல் மனிதனை இன்னலில் ஆழ்த்த விரும்புவதில்லை. ஆனால், அந்த எளிய வழியில் செல்வதனால் சில பாவங்களும் நிகழ வாய்ப்பு உள்ளது என்று எங்கு தெரியவருகிறதோ பிறகு, அன்னார் (ஸல்) அதை விட்டும் விலகி ஓடுவார்கள். நீண்ட வழியைத் தேர்வு செய்வார்கள். இன்னும் கூறுவதாயின், சிறிதளவும் ஐயம் ஏற்பட்டால் அன்னார் எப்படி விலகி ஓடுவார்கள் என்றால், அன்னாரது இந்த அமல் அனைத்து மனிதர்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கும். அதை விட்டு விலகிச் செல்வதற்கு எந்த மனிதனும் அந்த அளவுக்கு முயற்சி செய்யவே முடியாது. அவ்வளவு விலகிச் செல்வார்கள்.

ஆக, உலகில் பார்த்துக் கொள்ளுங்கள்! சிலவேளை ஏமாற்றுவதற்காக மக்கள் தம்மைத் துன்பத்தில் ஆழ்த்திக் கொண்டு, நாம் கடும் முயற்சி செய்தோம்; அது செய்தோம் என்று தமது பெரும் சிறப்புகளை வெளிப்படுத்திக் கொண்டிருப்பார்கள். பீர் ஃபகீர்களும் இத்தகைய விஷயங்களை செய்து கொண்டிருப்பார்கள். பெரும் கதைகள் உள்ளன. ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எளிமைக்கான வழியைத் தேடினார்கள். ஏனென்றால், எந்த மக்கள் இப்படி உலகுக்குக் காட்டுவதற்காகப் பேசுகிறார்களோ, தமது பெருமையை எடுத்துக் கூறுவதற்காக, தம்மைத் துன்பங்களில் ஆழ்த்திக் கொள்வார்கள். அல்லது தம்மைப் புகழ வைப்பதற்காக செய்வார்கள். இறைவனுக்காக செய்ய மாட்டார்கள். ஏனென்றால், இறைவனுக்கும் அவர்களுடைய துன்பங்களால் எந்தப் பயனும் இல்லை. அவர்களுக்கு அதற்கென எந்த நற்கூலியும் கிடைப்பதில்லை. இதுவே மக்களை ஏமாற்றுவதற்காக இருக்கிறது. மனிதன் ஏமாற்றுவதற்காக ஒரு செயலை செய்யும்போது, அந்தத் தீய எண்ணம் காரணமாக பிறகு, அல்லாஹ் அவனுக்குத் தீமையை அளிக்கிறான். நற்கூலியை அளிப்பதில்லை. சில மக்கள் தங்களுடைய குறைகளை மறைப்பதற்காக நாங்கள் இது செய்தோம்; அது செய்தோம் என்று பெரிதாக வெளிப்படுத்திக் கொண்டிருப்பார்கள். ஏதாவது ஒரு வகையில் திரையிட முயற்சி செய்து கொண்டிருப்பார்கள். மிகவும் உயர்ந்த வகையான அந்தப் பணியை நாங்கள் செய்து விட்டோம்; அதன் காரணமாக நாங்கள் பெரும் சிரமத்தில் ஆழ்த்தப்பட்டோம் என்று தம்மைப் புகழ்ந்து கொண்டிருப்பார்கள். இவர்கள் இதைப் பெரிதும் வெளிப்படுத்திக் கொண்டிருப்பார்கள். ஆனால், இல்லை! இந்த நன்மைகள் உங்களுக்கு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்று தராது என்று அல்லாஹ் கூறுகிறான்:

அதற்கு மாறாக, அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாக்கி விடும். ஏனெனில், உங்களுடைய நிய்யத் தூய்மையானதாக இருக்கவில்லை. நீங்கள் உங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, நாம் மக்களுக்குக் காட்டினால் மக்கள் நமக்கு சாதகமாக ஆகி விடுவார்கள் என்று அத்தகைய சில பணிகளை செய்து விடுகிறீர்கள். எனவே, பெருமானார் (ஸல்) அவர்கள் நமக்கு இந்தச் சின்னச்சின்ன பாடங்களைத் தம்முடைய முன்மாதிரியின் மூலமாகவும் வழங்கியுள்ளார்கள். அறிவுரை வழங்கியும் கூறியுள்ளார்கள். மனித குலத்துடன் நடந்து கொள்வதைப் பொறுத்தவரை அதில் அன்னாரது வீட்டில் இருந்து துவங்குவோம். அன்னார் துணைவியார்களுக்கான உரிமைகளில் எப்படி நடந்து கொண்டார்கள்? என்று பார்ப்போம்! மிகவும் பரிவான மற்றும் நீதியான அணுகுமுறையாக இருந்தது. இன்றைய காலத்து மக்களும் இதைப் புரிந்து கொண்டால், வீடுகளின் பல சண்டைகள் மற்றும் குழப்பங்கள் அகன்று விடும். சில நேரம் அன்னாருடைய துணைவியார்கள் அன்னாரிடம் கடுமையாகவும் இருந்து விடுவார்கள். அதாவது, கடுமையாகப் பேசி வந்தார்கள். கோபத்துடன் பேசுவார்கள். ஆனால், அன்னார் மௌனமாக சிரித்து விஷயத்தைத் தணித்து விடுவார்கள்.

ஒருநாள், (ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம்) ஆயிஷாவே! நீங்கள் என் மீது கோபமாக இருக்கும் போது, நீங்கள் என் மீது கோபமாக இருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரிந்து விடுகிறது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். தங்களுக்கு எப்படித் தெரிந்து விடுகிறது? என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அன்னார் (ஸல்), நீங்கள் என் மீது மகிழ்ச்சியாக இருக்கும்போது, சத்தியம் செய்வதற்கான ஏதாவது சந்தர்ப்பம் வந்து விட்டால், எப்பொழுதும் முஹம்மதின் இறைவன் மீது ஆணையாக! விஷயம் இப்படி என்று கூறுவீர்கள். நீங்கள் என் மீது கோபமாக இருக்கும்போது, சத்தியம் செய்வதற்கான தேவை ஏற்பட்டால், நீங்கள் இப்ராஹீமின் இறைவன் மீது ஆணையாக! விஷயம் இப்படி என்று கூறுவீர்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இந்த விஷயத்தைக் கேட்டு புன்சிரித்தார்கள். மேலும், அன்னார் (ஸல்) கூறியதற்கு சான்று பகர்ந்த வண்ணம், தாங்கள் முற்றிலும் சரியாகப் புரிந்துள்ளீர்கள் என்று கூறினார்கள்.

பிறகு, ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் நிகழ்வுகள் உள்ளன. இவர்கள் ஹுஸுர் (ஸல்) அவர்களின் துணைவியார்களில் முதலாமவரும், எல்லாரையும் விட மூத்தவரும் ஆவார்கள். இவர்கள் அன்னாருக்காகப் பெரும் தியாகங்களைச் செய்துள்ளார்கள். இவர்களின் வஃபாத்திற்குப் பிறகு, மாநபி (ஸல்) அவர்களின் திருமண பந்தத்தில் இளம் துணைவியார்கள் வந்தார்கள். ஆனால், அவ்வாறிருந்தும் அன்னார் (ஸல்) ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுடனான உறவை மறக்கவில்லை. ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் தோழியர்களும் வரும்போது, அன்னார் (ஸல்), அவர்களை வரவேற்பதற்காக எழுந்து நின்று விடுவார்கள். ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் செய்த ஏதாவது ஒரு விஷயம் அன்னாருக்கு முன்னால் வந்து விட்டால், அன்னாருடைய கண்களில் கண்ணீர் வந்து விடும். பத்ர் யுத்தத்தின் நிகழ்வாகும். அதுவரை முஸ்லிம் ஆகாத அன்னாருடைய ஒரு மருமகன் சிறைபிடிக்கப்பட்டு வந்தார். விடுதலைக்கான ஈட்டுத் தொகையை செலுத்துவதற்கு அவரிடம் எந்தப் பணமும் இருக்கவில்லை. அவருடைய மனைவி, அதாவது, பெருமானார் (ஸல்) அவர்களின் மகள் தம் கணவரைக் காப்பாற்ற வேறு எந்த செல்வமும் இல்லை என்பதைப் பார்த்தார்கள். எனவே, தம் தாயாரின் இறுதி நினைவாக அவர்களிடம் இருந்த ஒரு மாலையை (செயினை) அவர்கள் தம் கணவருக்கான ஈட்டுத் தொகையாக மதீனாவுக்கு அனுப்பி வைத்து விட்டார்கள். அந்த மாலை கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களுக்கு முன்னால் வைக்கப்பட்ட போது, அன்னார் (ஸல்) அதை அடையாளம்

கண்டு கொண்டார்கள். அன்னாருடைய கண்களில் கண்ணீர் வந்து விட்டது. அன்னார் (ஸல்) சஹாபிகளிடம், நான் உங்களுக்குக் கட்டளையோ இடவில்லை. ஏனெனில், எனக்கு அப்படிக் கட்டளையிடுவதற்கான எந்த உரிமையும் இல்லை. ஆனால், இந்த மாலை ஸைனபிடம் தன் தாயின் இறுதி நினைவாக உள்ளது என்று எனக்குத் தெரியும். நீங்கள் மகிழ்ச்சியுடன் அப்படி செய்ய முடிந்தால், ஒரு மகளை அவளின் தாயின் இறுதி நினைவுப் பொருளை விட்டும் இழப்பிற்குரியவராக ஆக்க வேண்டாம் என்று நான் பரிந்துரைக்கிறேன் என்று கூறினார்கள்.

ஸஹாபா பெருமக்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களுக்கு இதை விட அதிகம் மகிழ்ச்சிக்குரியதாக எது இருக்க முடியும்? என்று கூறினார்கள்.

எனவே, அவர்கள் அந்த மாலையை ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் அன்னாருடன் செய்த அந்த நன்மைகளின் தாக்கம் அன்னார் (ஸல்) மீது எந்த அளவு இருந்தது என்றால், அன்னார் பெரும்பாலும் தம் துணைவியார்களிடம் அவர்களைப் பற்றி கூறி வருவார்கள்.

இது குறித்து ஒரு நிகழ்வு வருகிறது. மனைவிமார்கள் இடையே ஒருவர் மற்றவருடன் சிறிது சச்சரவு ஏற்பட்டு விடுவதும் உண்டு. அந்த மனைவி மரணித்திருந்தார்கள் என்றாலும் சரி. அவரை அதிகமாகப் புகழ்ந்தால் பொறாமை ஏற்பட்டு விடுகிறது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் இவ்வாறு அன்னார் ஒருமுறை ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களைப் புகழ்ந்தார்கள். அப்பொழுது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அந்தக் கிழவியைப் பற்றி ஏன் பேசிக் கொண்டே இருக்கிறீர்கள்? விட்டு விடுங்கள். இப்பொழுது அவர்களைப் பற்றிய பேச்சை விடுங்கள். அல்லாஹ் அவர்களை விடச் சிறந்த இளமையான, அழகான பெண்களைத் தங்களுக்கு வழங்கியுள்ளான் என்று கூறினார்கள். இதைக் கேட்டதும் மாநபி (ஸல்) அவர்களுக்கு உருக்கம் ஏற்பட்டு விட்டது. அன்னார் (ஸல்) ஆயிஷாவே! கதீஜா எனக்கு எவ்வளவு தொண்டு செய்துள்ளார்கள் என்று உங்களுக்குத் தெரியாது என்று கூறினார்கள். உயர் நல்லொழுக்கத்தில் அன்னாரது தரம் எப்படி இருந்தது என்று பார்ப்போம். நாம் வரலாற்றில் பார்வையிட்டால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு முன்னர் அன்னாருடைய தந்தையாரும், சிறுவயதிலேயே அன்னாருடைய தாயாரும் வஃபாத் ஆகிவிட்டார்கள். ஆரம்பகால எட்டு வயதை அன்னார் (ஸல்) தம் தந்தைவழிப் பாட்டனாரின் கண்காணிப்பில் கழித்தார்கள்.

இதற்குப் பிறகு, அன்னார் (ஸல்) தம் சிறிய தந்தையார் அபூ தாலிப் அவர்களின் பொறுப்பில் வளர்ந்தார்கள். சிறிய தந்தையாருடன் இரத்த உறவும் இருந்தது. அவர்களுடைய தந்தையாரும் கூட மரணிக்கும் தருவாயில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் குறித்து குறிப்பாக வலியுறுத்திக் கூறியிருந்தார்கள்.

எனவே, அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது குறிப்பாக, அன்பும் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது அக்கறையும் கொண்டிருந்தார்கள். ஆனால், சிற்றன்னையிடம் அந்தப் பரிவு குணமும் இருக்கவில்லை. குடும்ப பொறுப்புகளுக்கான உணர்வும் இருக்கவில்லை. வீட்டில் ஏதாவது ஒரு பொருள் வரும் பொழுது, சிலவேளை அன்னாருடைய சிற்றன்னை தம் குழந்தைகளுக்கு முதலில் கொடுத்து விடுவார். நபி (ஸல்) அவர்களைக் கருத்தில் கொள்ள மாட்டார். அன்னார் (ஸல்) அப்பொழுது சிறு பிள்ளையாக இருந்தார்கள். அபூ தாலிப் அவர்கள் வீட்டுக்கு வரும்பொழுது, தம் சகோதரர் மகன் அழுது கொண்டோ அல்லது முறையிட்டுக் கொண்டோ இருப்பதைப் பார்ப்பதற்கு பதிலாக, என்ன பார்ப்பார்கள் என்றால், தம் பிள்ளைகளோ ஏதோ ஒன்றை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய சகோதரரின் அந்த சிறிய பிள்ளை கண்ணியத்தின் மலை போல் ஓரிடத்தில் அமர்ந்திருப்பார்கள். அதாவது, கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் சிறு வயதிலும் மிகவும் பொறுமையோடு எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்வார்கள். சிறிய தந்தை என்ற வகையில் அன்பும், குடும்ப பொறுப்புகளும் அவர்களின் கண் முன் வந்துவிடும். அவர்கள் வேகமாக ஓடி வந்து, தம் சகோதரரின் புதல்வரைத் தோளில் தூக்கிக் கொள்வார்கள். என் பிள்ளையையும் பார்த்துக் கொள்! என் பிள்ளையையும் பார்த்துக் கொள்! என்று கூறுவார்கள். இப்படி பலமுறை நடந்து வந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இந்த அறிவிப்பை எடுத்து எழுதியுள்ளார்கள்: ஆனால், பார்க்கக் கூடியவர்கள் கூறுகிறார்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருபோதும் முறையிட்டதும் கிடையாது; அன்னாருடைய முகத்தில் ஒருபோதும் துயரம் வெளிப்பட்டதும் கிடையாது. அதனால், ஒருபோதும் சிடுசிடுப்பு தன்மையும் உருவானது கிடையாது. மேலும் தம் சிறிய தந்தையார் வழி சகோதரர்கள் மீது ஒருபோதும் போட்டி மனப்பான்மை உருவானது கிடையாது. எப்படி அன்னார் (ஸல்) பிற்காலத்தில் மாறிய நிலைமையிலும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களைத் தம் தர்பிய்யத்தில் எடுத்துக் கொண்டார்கள். மேலும், எல்லாவிதத்திலும் அவர்களுடைய மேம்பாட்டுக்காக திட்டம் வகுத்தார்கள் என்று பாருங்கள்!

இன்றைய காலத்தில் பார்த்துக் கொள்ளுங்கள்! பெரியவர்களான பிறகும் மக்கள் சிறிய வயது விஷயங்களை ஞாபகம் வைத்துக் கொள்கிறார்கள்; பழிவாங்கிக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நல்ல முறையிலேயே நடந்து கொண்டார்கள். இன்னும் சொல்வதாயின், பெரியவர்களாகி புரியக்கூடிய வயதை அடைந்த பிறகும், இன்றைய நாள்களில் நாம் பார்த்துள்ளோம். சில மக்கள் தம்முடைய மற்ற உறவினர்களிடம் செல்ல வேண்டி வந்துவிட்டால், சிலவேளை அவர்களுடைய தந்தை இருக்க மாட்டார்கள். அதனால், 14, 15 வயதில் இருக்க வேண்டி வந்து விடுகிறது. அல்லது வேறு ஏதாவது நிர்பந்தத்தின் காரணமாக, இருக்க வேண்டி வந்துவிடுகிறது. அங்கு அந்த உறவினர்கள் ஏதாவது வரம்பு மீறினால், பிறகு, அந்த விஷயங்களை மறக்க மாட்டார்கள். வாய்ப்பு கிடைக்கும்போது, பிறகு பழி வாங்கிக் கொண்டே செல்வார்கள். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருபோதும் பழி வாங்கவில்லை. மாறாக, அதற்கு நேர்மாறாக, சந்தர்ப்பம் வந்த பொழுது அவர்களைத் தம் அரவணைப்பில் எடுத்துக் கொண்டார்கள். அவர்களுக்குத் தர்பிய்யத் வழங்கினார்கள். மேலும், அவர்களுக்கு ஒரு அந்தஸ்தை வழங்கினார்கள்.

உயர் நல்லொழுக்கம் தொடர்பாக, பொறுமைக்கான ஓர் எடுத்துக்காட்டைப் பார்க்கலாம். ஒருமுறை ஒரு பெண் இருந்தாள். அவளுடைய மகன் இறந்து விட்டான். அவள் தன் மகனின் மண்ணறைக்கு முன்பு ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தப் பக்கமாக கடந்து சென்ற போது, பெண்ணே! பொறுமை காப்பாயாக! இறைவனின் விருப்பம் அனைத்திலும் மேலோங்கியதாக உள்ளது என்று அன்னார், (ஸல்) கூறினார்கள்.

அந்தப் பெண் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அடையாளம் காணவில்லை. அவள் எதிர்த்துப் பேசி, என் குழந்தை இறந்தது போன்று, உங்கள் குழந்தையும் இறந்திருந்தால், பிறகு, பொறுமை என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று பதில் அளித்தாள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள், ஒன்று அல்ல; என்னுடைய ஏழு பிள்ளைகள் மரணமடைந்து விட்டார்கள் என்று கூறி

அங்கிருந்து சென்று விட்டார்கள்.

ஆக, இது போன்ற சந்தர்ப்பங்களில், கடந்த கால பெரும் துயரங்களில் இந்த அளவுதான் வெளிப்படுத்தி வந்தார்கள். ஆனால், ஒருபோதும் அதைவிட அதிகமாக வெளிப்படுத்தியது கிடையாது. அந்த வேதனையின் காரணமாக மனித குலத்திற்குத் தொண்டு செய்வதில் எப்பொழுதும் அன்னார் குறை வைத்தது கிடையாது.

அன்னாரது பொறுமையின் நிலை எப்படி இருந்தது என்றால், அல்லாஹ் அன்னாருக்கு அரசாட்சி வழங்கியபிறகும், அப்பொழுதும் அன்னார் (ஸல்) ஒவ்வொருவர் கூறுவதையும் கேட்பார்கள். யாராவது ஒருவர் கடுமை காட்டினாலும் அன்னார் (ஸல்) அமைதியாகி விடுவார்கள். கடுமை காட்டுபவருக்கு ஒருபோதும் கடுமையுடன் பதிலளிக்க மாட்டார்கள்.

வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது: முஸ்லிம்கள் கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களை அன்னாருடைய பெயரை வைத்து அழைப்பதற்கு பதிலாக, அன்னாருடைய ஆன்மிக அந்தஸ்த்தை வைத்து அழைத்து வந்தார்கள். அதாவது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்று கூறி அழைத்து வந்தார்கள். மாற்று மதத்தவர்கள் தம்முடைய வழிமுறைப்படி, அங்குள்ள வழக்கப்படி எப்படி கண்ணியம் அளித்து வந்தார்கள் என்றால், அன்னாரை முஹம்மது (ஸல்) அவர்களே! என்று அழைப்பதற்கு பதிலாக அபுல் காஸிம் என்று அழைத்து வந்தார்கள்.

இது நபி (ஸல்) அவர்களுடைய குனியத் பெயராகும். அதாவது, காஸிமின் தந்தை. ஏனென்றால், அன்னாருடைய ஒரு மகனின் பெயர் காஸிம் என்றும் இருந்தது. அவர்கள் மரணித்து விட்டார்கள். ஒருமுறை ஓர் யூதன் மதீனாவுக்கு வந்தான். அவன் அன்னாரிடம் வந்து விவாதம் செய்யத் துவங்கி விட்டான். விவாதத்துக்கு நடுவே அவன், முஹம்மதே! விஷயம் இப்படி! முஹம்மதே! விஷயம் இப்படி! என்று மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தான். கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் எவ்வித மன இறுக்கமும் இல்லாமல், அவனுடைய பேச்சுக்கு பதிலளித்து வந்தார்கள். ஆனால், அவனது இந்த அவமதித்தலைக் கண்டு ஸஹாபிகளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கடைசியில் ஒரு ஸஹாபியால் பொறுமை காக்க முடியவில்லை. அவர்கள் அந்த யூதனிடம், எச்சரிக்கை! அன்னாருடைய பெயரைக் கூறி பேசாதே! உன்னால் ரஸூலுல்லாஹ் என்று அழைக்க முடியாது என்றால், குறைந்தபட்சம் அபுல் காஸிம் என்று அழைத்திடு! என்று கூறினார்கள். அதற்கு அந்த யூதன், நானோ இவர்களின் தாய் தந்தையர் இவர்களுக்கு வைத்த பெயரை வைத்தே அழைப்பேன் என்றான்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் புன்சிரித்தார்கள். மேலும், ஸஹாபிகளிடம், பாருங்கள்! இவர் சரியாகவே கூறுகிறார்; என் தாய் தந்தையர் எனக்கு முஹம்மது என்றுதான் பெயர் வைத்தார்கள். இவர் என்ன பெயர் வைத்து அழைக்க விரும்புகிறாரோ அழைக்க விடுங்கள். இவர் மீது கோபத்தை வெளிப்படுத்தாதீர்கள் என்று கூறினார்கள்.

பொறுமைகாத்தலின் நிலை எப்படி இருந்தது என்றால், சிலவேளை அன்னார் (ஸல்) ஏதாவது ஒரு வேலைக்காக வெளியே புறப்படுவார்கள். சில மக்கள் அன்னாருடைய வழியைத் தடுத்து நின்று கொள்வர். தம்முடைய தேவைகளை எடுத்துக் கூறத் தொடங்கி விடுவர். அவர்கள் தம் கூற்றுகளை முடித்து விடும் வரை அன்னார் (ஸல்) நின்று கொண்டிருப்பார்கள். பிறகு, அன்னார் (ஸல்) அடுத்துச் செல்வார்கள். பிறகு, சில மக்களுக்கு வழக்கம் இருக்கும், கைகுலுக்கும் பொழுது, நீண்ட நேரம் கையைப் பிடித்து வைத்திருப்பார்கள். அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்களும் அவர்களின் கைகளை வெகுநேரம் பிடித்தே வைத்திருப்பார்கள்.

இது ஒன்றும் விருப்பமான செயல் இல்லையென்றாலும், மாநபி (ஸல்) அவர்கள் ஒருபோதும் அவர்களுடைய கைகளிலிருந்து தம் கையை விடுவிக்க மாட்டார்கள். எல்லாவிதமான தேவையுடையவர்கள் தம்முடைய தேவைகளை அன்னார் (ஸல்) முன்னால் எடுத்து வைப்பார்கள். சிலவேளை கேட்கக் கூடியவருக்கு அவருடைய தேவைக்கு ஏற்ப ஏதாவது கொடுத்து விடுவார்கள். அப்பொழுது அவர் தனது பேராசையால், நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி, இன்னும் அதிகமாக கோரிக்கை வைப்பார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவருடைய ஆசையையும் நிறைவேற்றி விடுவார்கள். சிலநேரங்களில், மக்கள் கேட்டுக்கொண்டே இருப்பார்கள். அன்னார் (ஸல்) அவர்களுக்கு ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒன்றைக் கொடுத்துக்கொண்டே செல்வார்கள். குறிப்பாக, இத்தகைய நிலையில், கலப்பற்றவராக தென்படுகின்ற மனிதர் கேட்பவராக இருந்தால், அவர் கேட்பதற்கு ஏற்ப கொடுத்ததற்குப் பிறகு, அந்தக் கலப்பற்ற மனிதரிடம், நீர் இறைவன் மீது நம்பிக்கை வைத்திருந்தால் அது இன்னும் நன்றாக இருந்திருக்கும் என்று மட்டும் கூறுவார்கள்.

எனவே, ஒருமுறை ஒரு ஸஹாபி தொடர்ச்சியாக வற்புறுத்தி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் பலமுறை தம்முடைய தேவைகளுக்காகப் பணம் கேட்டார். அன்னார் (ஸல்) அவருடைய ஆசையை நிறைவேற்றி விட்டார்கள். ஆனால், இறுதியில், மனிதன் அல்லாஹ்வின் மீது தவக்குல் வைப்பதே எல்லாவற்றிலும் சிறந்த தரம் ஆகும் என்று கூறினார்கள்.

அந்த சஹாபியிடம் கலப்பற்ற தன்மை இருந்தது. பணிவும் இருந்தது. அவர் என்னவெல்லாம் பெற்றிருந்தாரோ அவற்றைப் பணிவின் காரணமாகவோ அவர் திருப்பி கொடுக்கவில்லைதான்; ஆனால், எதிர்காலத்திற்கு அவர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது என்னுடைய கடைசி விஷயமாகும். இனி நான் எந்த நிலையிலும் யாரிடமும் எதுவும் கேட்டுப் பெற மாட்டேன் என்று கூறினார்கள்.

அந்த ஸஹாபியைப் பற்றியே ஒரு நிகழ்வு வருகின்றது. ஒருமுறை போர் நடந்து கொண்டிருந்தது. மிகவும் பயங்கரமான போர் சூழல் இருந்தது. போர்க் களத்தில் ஈட்டிகள் எறியப்பட்டு வந்தன. வாள்கள் வீசப்பட்டுக் கொண்டிருந்தன. அம்புகள் வீசப்பட்டுக் கொண்டிருந்தன. வாள்கள் வீசப்பட்டன. ஈட்டிகள் எறியப்பட்டன. சிப்பாய்களும் சிப்பாய்களும் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். தலைகள் வெட்டப்பட்டுக் கொண்டிருந்தன. சரியாக இவர்கள் எதிரிகளின் திரளுக்கு நடுவில் இருந்தபோது, அவர்களுடைய ஒரு சாட்டை கையிலிருந்து விழுந்துவிட்டது. பக்கத்தில் இருந்த ஒரு முஸ்லிம் காலாற்படை வீரர், அதிகாரி கீழே இறங்கினார் என்றால், அதனால் இழப்பு ஏற்பட்டு விடப் போகிறது என்று எண்ணி, அவர்களுடைய கையில் எடுத்துக் கொடுப்பதற்காக குனிந்து சாட்டையை எடுக்கப் பார்த்தார்.

இந்த ஸஹாபியின் பார்வை அந்த சிப்பாய் மீது பட்டது. இவர்கள், என் சகோதரரே! உங்களுக்கு நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். அந்த சாட்டையை எடுக்காதீர்கள்! என்று கூறினார்கள். இவ்வாறு கூறியவாறு இவர்கள் குதிரையிலிருந்து இறங்கி சாட்டையை எடுத்துக் கொண்டார்கள்.

பிறகு, இவர்கள் தம் உடனிருந்தவரிடம், நான் யாரிடமும் எதுவும் கேட்க மாட்டேன் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் உறுதி எடுத்துக் கொண்டிருக்கிறேன். நான் உங்களை சாட்டையை எடுக்க விட்டிருந்தால், நான் நாவால் உங்களிடம் கேட்கவில்லைதான்; ஆயினும், சூழ்நிலையின் அடிப்படையில் இது கேட்பதாக அமைந்திருக்கும் என்பதில் என்ன ஐயம் உள்ளது! அவ்வாறு செய்வது என்னை வாக்குறுதியை மீறியவனாக ஆக்கியிருக்கும். ஆக, இது போர்க்களம்தான்; ஆனாலும், நான் என் வேலையை நானே செய்வேன் என்று கூறினார்கள்.

இந்த பயங்கரமான நிலையிலும், அவர்களுக்குத் தமது வாக்குறுதி நினைவிருந்தது. ஆக, ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்)

அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் இன்னும் பல விஷயங்கள் உள்ளன. அன்னாரது நீதி தொடர்பாக, உணர்வுகளுக்கு மதிப்பளித்தல் தொடர்பாக, ஏழைகளைக் கருத்தில் கொள்வது தொடர்பாக உள்ளன. இவை நமக்கு ஒரு முன்மாதிரி ஆகும். ஏழைகளின் செல்வங்களைப் பாதுகாப்பது தொடர்பாக உள்ளது. பெண்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது உள்ளது. இது குறித்து நான் முன்னரும் கூறியிருந்தேன். வீட்டில் துணைவியார்களுடன், மற்ற பெண்களுடனும் நல்ல முறையில் நடந்து கொள்வார்கள். மனித குலத்துக்குத் தொண்டு செய்வது தொடர்பாக, அண்டை அயலாருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல் மற்றும் உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல் ஆகியவை தொடர்பாக எண்ணற்ற விஷயங்கள் உள்ளன.

அவை மாநபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியில் நமக்குக் கிடைக்கின்றன. மக்களின் செல்வங்களைப் பாதுகாப்பதற்காக அன்னார் (ஸல்) என்ன முயற்சி செய்து வந்தார்கள். பிறரது குறையை மறைப்பது தொடர்பாக அன்னாரது முயற்சி என்னவாக இருந்தது. எவ்வாறு திரையிட்டு வந்தார்கள். உண்மை தொடர்பாக என்ன அறிவுரைகள் இருந்தன. தப்பெண்ணத்திலிருந்து தவிர்ந்து கொள்ளுதல் தொடர்பாக அன்னார் (ஸல்) என்ன கூறினார்கள். குறை கண்டுபிடித்தலிருந்து தவிர்ந்து கொள்தல் தொடர்பாக என்ன கூறினார்கள். நம்பிக்கையிழந்து போவதிலிருந்து தவிர்ந்து கொள்ளுதல் தொடர்பாக என்ன கூறினார்கள். எதுவரை என்றால், விலங்குகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல் தொடர்பாகவும் கூறியுள்ளார்கள். மத நல்லிணக்கம் தொடர்பாகவும் அன்னார் (ஸல்) கூறியுள்ளார்கள். இந்த எல்லா விஷயங்களும் எத்தகையவை என்றால், இவை நமக்கு முழுமையான முன்மாதிரி ஆகும். நான் முன்னரும் கூறியது போன்று, இனி இதை, இந்த விஷயங்களை நான் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப எடுத்துக் கூறிக் கொண்டே இருப்பேன். இன்ஷா அல்லாஹ்! இப்பொழுது நான் இந்த விஷயத்தை இங்கு நிறைவு செய்கிறேன்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை வாசிக்கிறேன். அன்னார் (அலை) கூறுகிறார்கள்: அந்த மனிதர், தமது இயல்பால், தம்முடைய பண்புகளால், தம்முடைய செயல்களால், தம்முடைய அமல்களால், தமது ஆன்மிக மற்றும் தூய ஆற்றல் எனும் வலுவான நதியால் முழுமையான நிறைவுபெற்ற முன்மாதிரியை அறிவுரீதியிலும், செயல் ரீதியிலும், உண்மையுடனும், உறுதித் தன்மையுடனும் காட்டினார்கள். இவ்வாறு முழுமைபெற்ற மனிதர் என்று அழைக்கப்பட்டார்கள்.

அந்த அருளுக்குரிய நபி நபிமார்களின் முத்திரை, தூயவர்களின் தலைவர், இறைத்தூதர்களில் இறுதி எல்லையை அடைந்தவர், தூதர்களின் பெருமிதத்திற்குரியவர், ஜனாப் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஆவார்கள். இறைவா! அன்பிற்குரிய இறைவா! உலகம் தோன்றியதிலிருந்து நீ எவர் மீதும் பொழியாத அளவு கருணை மற்றும் அருளை இந்த அன்பிற்குரிய நபியின் மீது பொழிவாயாக!

எனவே, அல்லாஹ் நமக்கு இந்த நற்பேறு வழங்குவானாக! நாம் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின் படி செயல்பட்டவாறு, உண்மையான முஸ்லிம்களாக ஆவதற்கு முயற்சி செய்வோமாக! அன்னாரது இந்தத் தூதுச் செய்தியை உலகில் எட்ட வைக்கக்கூடியவர்களாகவும் இருப்போமாக! இவ்வாறு உலகத்தையும் நாம் அன்னாரது கொடியின் கீழ் கொண்டு வருபவர்களாக இருப்போமாக! எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

اللهم صل على محمد وعلى آل محمد وبارك

وسلم انك حميد مجيد

தொழுகைக்குப் பிறகு, நான் ஜனாஸாவும் தொழ வைப்பேன். ஜனாஸா வந்து விட்டதா? ஒரு ஹாஸிர் ஜனாஸா ஆகும். இது மதிப்பிற்குரிய லெயீக் அஹ்மத் தாஹிர் அவர்களுடையதாகும். ஜமாஅத்தின் முரப்பி ஆவார்கள். யூ.கேவில் இருந்தார்கள். கடந்த நாள்களில் 83 ஆவது வயதில் இவர்கள் வஃபாத் ஆகிவிட்டார்கள். انا لله وانا اليه راجعون

மர்ஹூம் வஸிய்யத் செய்திருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் ஒரு மகள் மற்றும் 3 மகன்கள் இருக்கிறார்கள். லையீக் தாஹிர் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபியான ஹஸ்ரத் ஷேக் ஃபஸ்ல் அஹ்மத் சாஹிப் பட்டாலவீ (ரலி) அவர்களின் வீட்டில் காதியானில் பிறந்தார்கள். இவர்களின் தந்தையார் 1907 இல் பைஅத் செய்தார்கள். லெயீக் ஸாஹிப் பத்தாம் வகுப்பு கல்வி பயின்ற பிறகு, 1959 இல் வாழ்வை அர்ப்பணித்தார்கள். ரப்வாவின் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் நுழைந்தார்கள். 1966 இல் ஜாமிஆவிலிருந்து தேர்ச்சி பெற்றார்கள். ஜாமிஆ படிப்பின் போது, இவர்கள் F.A வும் முடித்தார்கள். அதீப் ஃபாஸில் படிப்பும் முடித்தார்கள். அரபி ஃபாஸில் படிப்பும் முடித்தார்கள். ஜாமிஆவிலிருந்து தேர்ச்சி பெற்ற பிறகு, பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் B.A. பட்டமும் பெற்றார்கள். ஜூலை 1967 இல் இவர்கள் தொண்டாற்றுவதற்காக முபல்லிஃக் ஆக இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். இங்கு லண்டன் ஃபஸ்ல் பள்ளிவாசலில் நாயிப் இமாமாக இவர்களுக்குத் தொண்டாற்றுவதற்கு நல்வாய்ப்பு கிடைத்தது. பிறகு, 1970 இல் பாக்கிஸ்தானுக்குத் திரும்பிச் சென்று விட்டார்கள். பிறகு, இஸ்லாஹ் வ இர்ஷாத் துறையின் கீழ் பல்வேறு இடங்களில் இவர்கள் முரப்பியாக பணியாற்றி வந்தார்கள். பிறகு, இவர்கள் தஸ்னீஃப் (நூல்கள்) துறையில் பணிமாற்றம் செய்யப்பட்டார்கள். இவர்கள் மவ்லானா அப்துல் ஹமீத் நூரம் ஸாஹிப் அவர்களின் பேரராவார்கள். பிறகு, இவ்வாறே இவர்கள் அங்கு தொண்டாற்றிக் கொண்டிருக்கும்போது, ஜாமிஆவில் ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டார்கள். ஏறத்தாழ 10 ஆண்டுகள் இவர்கள் கல்வி கற்பிக்கும் கடமையை நிறைவேற்றி வந்தார்கள். பிறகு, 1982 இல் வகாலத் தப்ஷீரில் பணி நியமிக்கப்பட்டார்கள். நாயிப் வக்கீலுத் தப்ஷீர் ஆக நியமனம் செய்யப்பட்டார்கள். இவ்வாறே ஜாமிஆவின்போது, குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் கிளை அமைப்புகளின் தொண்டுகளையும் ஆற்றி வந்தார்கள். ஜாமிஆவின் போதும், பாகிஸ்தானில் முரப்பியாக இருந்த போதும் செய்து வந்தார்கள்.

பிறகு, 1986 இல் இயக்கத்தின் முபல்லிஃக் ஆக அமெரிக்காவிற்கும் அனுப்பி வைக்கப்பட்டார்கள். பிறகு, 1986 -லேயே ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் ராபிஃ (ரஹ்) அவர்கள் இவர்களை இங்கு அழைத்து க்ளாஸ்கோவில் பணியமர்த்தி விட்டார்கள். அங்கு இவர்களுக்கு இயக்கத்தின் முரப்பி ஆகவும் இயக்கத்தின் முபல்லிஃக் ஆகவும் பணிபுரிய நல்வாய்ப்பு கிடைத்தது. 2005 இல் ஜாமிஆ திறக்கப்பட்டபோது, இவர்கள் யூ.கே ஜாமிஆவின் முதல்வராகவும் நியமிக்கப்பட்டார்கள். இவர்களின் தொண்டு காலம் ஏறத்தாழ 59 ஆண்டுகள் ஆகிறது.

லண்டன் ஃபஸ்ல் பள்ளிவாசல் இமாம் அத்தாவுல் முஜிப் ராஷித் ஸாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: மர்ஹூம் இஸ்லாம் மார்க்கத்திற்காக தம்மை மாய்த்துக் கொள்ளக்கூடியவராகவும், கிலாஃபத்திற்காக உயிரைத் தியாகம் செய்யக்கூடிய தொண்டராகவும், வாழ்வை அர்ப்பணித்தவருக்கான எதிர்பார்ப்புகளை முழுமையான முறையில் நிறைவேற்றக்கூடிய, ஜமாஅத்தின் ஒரு மிகவும் வெற்றிகரமான முபல்லிஃக் ஆக இருந்தார்கள். இவர்கள் நீண்ட காலம் தம்மை மாய்த்துக் கொண்டு மார்க்கத் தொண்டாற்றுவதற்கு நல்வாய்ப்பு பெற்றார்கள். அழகிய குரலில், தாக்கம் ஏற்படுத்துகின்ற தொணியில் திருக்குர்ஆனை ஓதுவார்கள். மனதை ஈர்க்கும் பாணியில் தர்பிய்யத் விஷயங்கள் பக்கம் கவனமூட்டி வந்தார்கள். இவர்களுக்கு எந்தெந்த ஜமாஅத்களில்

தொண்டாற்றுவதற்கு நல்வாய்ப்பு கிடைத்ததோ அங்கு பல நல்ல நினைவுகளை விட்டுள்ளார்கள். ஜமாஅத் மக்களிடம் அன்பு, நேசம் கொண்ட ஒரு ஏற்றுக் கொள்ளப்பட்ட மார்க்கத் தொண்டராக இருந்தார்கள். எழுத்துக் களத்திலும் இவர்களுக்குப் பல்வேறு தொண்டுகள் ஆற்றுவதற்கு நல்வாய்ப்பு கிடைத்தது. இவர்களுக்கு துஆவில் குறிப்பான கவனம் இருந்தது. இவர்கள் தமது வீட்டின் சுவர்கள் மற்றும் கதவுகளையும்கூட துஆ சொற்களால் அலங்கரித்திருந்தார்கள். பல சிறப்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள்.

முபாரக் ஸித்தீக்கீ ஸாஹிப் கூறுகிறார்கள்: ரப்வாவில் இருந்த காலத்தில் இருந்து எனக்கு அவர்களைத் தெரியும். மிகவும் மலர்ந்த முகமாக இருந்தார்கள். மகிழ்ச்சி காணப்பட்டது. இயல்பில் நற்பண்பு இருந்தது. கிலாஃபத் மற்றும் ஜமாஅத் அமைப்புடன் அளவுகடந்த பற்றுறுதி இருந்தது. சந்திக்கக்கூடியவர்களுக்கும் இவர்கள் காலத்தின் கலீஃபா அவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்படுங்கள் என்று அறிவுரை கூறி வந்தார்கள். இவ்வாறே கூறுகிறார்கள்: இவர்களின் பையில் எந்நேரமும் ஒரு சிறிய நோட்டுப் புத்தகம் இருக்கும். எங்காவது ஏதாவது ஒரு நல்ல விஷயத்தைப் பார்த்தால், கேட்டால் உடனடியாக அதைக் குறித்துக் கொள்வார்கள். யாராவது குறிப்பிட்ட மனிதரிடமிருந்து என்று இல்லை; மாறாக, எங்கு ஒரு விஷயத்தைக் கேட்டாலும் உடனடியாக குறித்துக் கொள்வார்கள். மாணவப் பருவத்திலிருந்து இயக்கத்தின் சான்றோர்களுடன் அமர்வது இவர்களது வழக்கமாக இருந்தது. ஆக, ஹஸ்ரத் ஹாஃபிஸ் முக்தார் அஹ்மத் சாஹிப் ஷாஹ்ஜஹான்பூரீ அவர்களின் பல விஷயங்கள் இவர்களுக்கு மனனமாக இருந்தன. மேலும், தம்முடைய அவைகளில் எடுத்துரைத்தும் வந்தார்கள்.

இவர்களின் மகள் குர்ரத்துல் அய்ன் கூறுகிறார்கள்: தந்தையாரிடம் மிகவும் சிறப்பாகக் காணப்பட்ட, நான் கண்ட ஓர் அம்சம் என்னவென்றால், அது அவர்களின் துஆக்களுக்கான தோரணை ஆகும். துஆக்களில் துடிப்பு, பணிவு, தவக்குல் மற்றும் அல்லாஹ்விடம் அன்பாகக் கேட்பதற்கான சாயல் விந்தையாக இருந்தது. அல்லாஹ்விடமிருந்து ஏதாவது பதில் வந்த விடாத வரை துஆக்கள் செய்வதை விட மாட்டார்களோ என்பது போன்று சிலநேரம் தோன்றும். மகள் மேலும், கூறுகிறார்கள்: அல்லாஹ்வும் அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொண்டான். எப்படி என்றால், பல கனவுகள் மூலமாக பல விஷயங்கள் பற்றி முன்னரே அல்லாஹ் கூறி விடுவான். மேலும், துஆக்கள் பற்றி கூறுகிறார்கள்:- எங்களுக்கு இவ்வாறு அறிவுரை கூறி தந்தார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் (பஞ்சாபி மொழியில்) இதைக் கூறினார்கள்: துஆ செய்பவரின் நிலை எப்படி இருக்க வேண்டும் என்றால், ஜோ மங்கே ஸோ மர் ரஹே மரே ஸோ மங்கன் ஜா. இது அசல் விஷயமாகும். இதன் பொருள்: கேட்பவரின் நிலை எப்படி இருக்க வேண்டும் என்றால், மரணித்தது போன்று இருக்க வேண்டும். அந்த நிலையில் நீங்கள் கேட்கும்போது, பிறகு, அல்லாஹ்வும் செவிசாய்க்கிறான்.

அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி, இவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக! இவர்களின் படித்தரத்தை உயர்த்துவானாக! இவர்களுடைய ஜனாஸா, ஹாஸிர் ஜனாஸா (முன்னால் இருக்கும் ஜனாஸா) ஆகும். இப்பொழுது ஜுமுஆவுக்குப் பிறகு, நான் வெளியே சென்று தொழ வைப்பேன்.

இரண்டாவது குறிப்பு, காயிப் ஜனாஸா, மதிப்பிற்குரிய ஸீகா ஜாலூ ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் மாலீயின் மண்டலமான ஸோகோவின் நாயிப் சத்ர் ஆவார்கள். இவர்களும் கடந்த நாட்களில் மரணமடைந்துவிட்டார்கள்.

, انا لله وانا اليه راجعون

மர்ஹூம் அவர்களும் மூஸீ ஆவார்கள். ஜமாஅத் முபல்லிஃக் தாஹீர் ஸாஹிப் எழுதுகிறார்கள்: மர்ஹூம் அவர்களுக்கு ரேடியோ நிகழ்ச்சியைக் கேட்டு, 1916 இல் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. பிறகு, இவர்கள் தமது ஈமானில் பெரும் முன்னேற்றம் கண்டார்கள். மிகவும் மாய்த்துக் கொள்ளக்கூடிய, சுறுசுறுப்பான அஹ்மதியாக இருந்தார்கள். ஜமாஅத் நிகழ்ச்சிகளில், சந்தாக்களில், மிகவும் அதிகமாக பங்கெடுத்து வந்தார்கள்.

தினமும் ஃபஜ்ர், மக்ரிப் மற்றும் இஷா ஆகிய தொழுகைகளைப் பள்ளிவாசலுக்கு வந்து நிறைவேற்றுவார்கள். மிகவும் தூரமாக இருந்தது. கிலாஃபத்துடன் அளவுகடந்த பற்றுறுதி மற்றும் அன்பின் தொடர்பு இருந்தது. இவர்களுக்கு 1918 இல் வஸிய்யத் அமைப்பில் இணையும் நல்வாய்ப்பு கிடைத்தது. வஃபாத் வரை ஒவ்வொரு மாதத்தின் துவக்கத்திலும், தமது சம்பளத்திலிருந்து வஸிய்யத் சந்தா செலுத்தி வந்தார்கள். ஒருமுறை ஏதோ ஒரு காரணத்தினால், ஆறு மாதங்கள் இவர்களுக்கு சம்பளம் கிடைக்கவில்லை. ஆஃப்ரிக்காவில் நிலைமைகளும் இப்படி இருக்கின்றன. எனவே, இவர்கள் சந்தா கொடுக்கவில்லை. மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். பிறகு, இறுதியாக, அல்லாஹ் அருள் புரிந்தான். சம்பளம் கிடைத்ததுமே இவர்கள் செய்த முதல் வேலை என்னவென்றால், தமது வஸிய்யத் சந்தாவையும் பிற சந்தாக்களையும் செலுத்தினார்கள். இவர்களின் மனைவியும், 3 மகன்களும் இருந்தார்கள். அவர்களுக்குத் தப்லீக் செய்து வந்தார்கள். தப்லீகின் காரணமாக, 2 மகன்களோ அஹ்மதிகள் ஆகி விட்டார்கள். ஆனால், மனைவியும் 1 மகனும் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் இவர்களுக்குப் பெரும் கவலை இருந்தது. அஹ்மதிய்யத் மீது ஈமான் மிகவும் வலுவாக இருந்தது. அஹ்மதி அல்லாதவர்கள் மற்றும் மவ்லவிகள் தொடர்பாக இவர்களின் கருத்து மிகவும் தூய்மையானதாகவும், தெளிவானதாகவும் இருந்தது. மேலும், இந்த மக்கள் மஹ்தி, மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், இவர்களால் வெற்றி பெற முடியாது என்று கூறி வந்தார்கள். மிகவும் சுறுசுறுப்பான தப்லீக் செய்யக்கூடியவராகவும் இருந்தார்கள். ஜமாஅத்துக்குத் தொண்டாற்றுபவராகவும் இருந்தார்கள். அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி இவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக!

தமிழாக்கம்
முபல்லிஃக்
அதாவுல் முஃக்னீ

*******

**தலையங்கம்...**
**2-ம் பக்கத் தொடர்ச்சி**

2-ம் பக்கத் தொடர்ச்சி

(ரலி) அவர்கள் மூலமாக இஸ்லாமிய பிரச்சாரம் உயிர் பெற்றது. மேலும் கிழக்கின் தொலைதூரத்திலும் ஹஸ்ரத் மவ்லவி ரஹ்மத் அலி (ரலி) ஸாஹிப் அவர்கள் உறங்கியவர்களை எழுப்புவதற்காக சென்றார்கள். அதே நேரம் டமாஸ்கஸ் மற்றும் பாலஸ்தீனிற்கு ஹஸ்ரத் ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் (ரலி) அவர்கள் சென்றார்கள். அடுத்து 1934 ஆம் ஆண்டிலிருந்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் அருளுக்குரிய தஹ்ரீகே ஜதீத் திட்டம் இஸ்லாத்தின் வெற்றிக்கான ஆன்மீக வாளை தனது கரத்தில் ஏந்திக் கொண்டது. மேலும் தற்போது உலகின் நூற்றுக்கணக்கான நாடுகளில் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் அமைதி நிறைந்த தூதுச் செய்தியை பரப்புவதற்காக சென்றடைந்து விட்டனர். மேலும், அஹ்மதிய்யத்தின் மூலமாக இஸ்லாத்தின் இந்த தூதுச் செய்தி உலகின் 216 நாடுகளில் பரவி விட்டது. இந்த அனைத்து பணிகளும் இறைவனின் உதவியும், ஒத்தாசையின்றி நடக்க முடியுமா என்ன? அவர் பூமியின் எல்லைகள் வரை பிரபல்யம் அடைவார் என்ற இந்த முன்னறிவிப்பிற்கு இவை தெளிவான சான்றாக அமைந்துள்ளன. அல்ஹம்துலில்லாஹ்!.

*******

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகளின் நாயகம் (ஸல்) அவர்களின் இறைநேசம்**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழு வாழ்க்கையுமே இறை நேசத்தில் மூழ்கியிருந்தது. அந்த அன்பின் காட்சிகளைக் கண்டுதான் மக்கா வாசிகள் اِنَّ مُحَمَّدًا عَشِقَ رَبَّهٗ என்று கூறினர்

பொருள்: முஹம்மது தமது இறைவனின் நேசராக மாறிவிட்டார். (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் ஒருபக்கம் அல்லாஹ்வின் மீதான நேசத்திற்கான துடிப்பு இருந்தது. மற்றொரு பக்கம் அல்லாஹ்வின் படைப்பினங்களின் மீதான நேசமும், அவர்களை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற விருப்பமும் இருந்தது. அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவதற்குரிய வழிமுறைகளை அன்னாரின் முன்மாதிரியிலிருந்தே நம்மால் கற்றுக் கொள்ள முடியும்

இறைஞானமே எனது மூலதனமாகும், பகுத்தறிவு எனது மார்க்கத்தின் அடிப்படையாகும். அல்லாஹ்வின் மீதான நேசம் எனது வாழ்வின் அஸ்திவாரமும், அடிப்படையும் ஆகும். இறை வழியில் முன்னேறுவதற்கான ஆர்வம் எனது வாகனம் ஆகும் (நபிமொழி)

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 26 டிசம்பர் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **26 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

கடந்த குத்பாவில் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்து சில விஷயங்களைக் கூறியிருந்தேன். அல்லாஹ்விடம் அன்னார் கொண்டிருந்த அன்பு குறித்து அன்னாரின் வாழ்வின் சில அம்சங்களை இன்று எடுத்துரைப்பேன். சில விஷயங்கள் ஏற்கனவே சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டிருக்கலாம்; இருப்பினும் சில இடங்களில் அவற்றின் விரிவான விளக்கங்களும் காணக் கிடைக்கின்றன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வின் இந்த அம்சத்தின் மூலம், அல்லாஹ் அன்னாரின் மீது கொண்டிருந்த நேசமும் வெளிப்படுகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தரப்பிலிருந்து மட்டுமே அல்லாஹ்வின் மீது அன்பு இருந்தது என்றல்லாமல் அல்லாஹ்வுக்கு அன்னாரின் மீது இருந்த அன்பையும் நாம் காண முடிகிறது. அல்லாஹ்வுக்கு அன்னாரின் மீது இருந்த அன்பை வெளிப்படுத்திய பிறகு அல்லாஹ் அன்னாருக்கு வழிகாட்டவும் செய்தான். பிறகு, அந்த அன்பினால் உந்தப்பட்டு அன்னார் (ஸல்) எவ்வாறு தமது உம்மத்திற்கு தர்பிய்யத் வழங்கி, வழிநடத்தினார்கள் என்பதையும் நாம் பார்க்கிறோம்.

அல்லாஹ் அன்னாருக்கு அருளிய போதனைகளை, உம்மத்தினர் நேர்வழி பெரும்பொருட்டு அன்னார் (ஸல்) எவ்வாறு உம்மத்திற்கு கொண்டு சேர்த்தார்கள் என்பதை பார்க்கும் போது அன்னாரின் உள்ளத்தில் இருந்த வேதனையை பார்க்க முடிகிறது. இந்த வேதனையின் காரணமாகவே அல்லாஹ் அன்னாருக்குத் தனது உம்மத்தை வழிநடத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்கினான். இன்னொரு வகையில் கூறுவதானால், அன்னாரின் உள்ளத்தில் ஒருபுறம் அல்லாஹ்வின் மீதான அன்பின் தாகமும் மறுபுறம் அல்லாஹ்வின் படைப்புகள் மீதான நேசமும், அவர்களை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற ஆவலும் இருந்தது. திருக்குர்ஆனில் சூரா அல்-ளுஹாவில் அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

. وَوَجَدَكَ ضَآلًّا فَهَدٰى

பொருள்: அவன் உம்மை உம் சமுதாயத்திடம் கொண்ட அக்கறையில் தம்மையே இழந்தவராகக் கண்ட போது அவன் உமக்கு அவர்களைச் சீர்திருத்தும் சரியான வழியை கூறினான்.(அல் ளுஹா:8)

அல்லாஹ்வின் அன்பு என்ற அடிப்படையில் இந்த வசனத்தின் பொருள் இவ்வாறு அமையும். அதாவது அல்லாஹ் கூறுகின்றான்: எம் மீதான அன்பினால் நீர் மிகுந்த வேதனை அடைந்திருப்பதைக் கண்டபோது, இறுதியில் நாம் எம்மைச் வந்தடைவதற்கான வழியை உமக்குக் காட்டினோம். அதன் மூலமாக நீர் எம்மிடம் வந்தடைந்தீர் என்பதாகும்.

இமாம் ராஸியின் தஃப்ஸீர் கபீரில் சூரா அல்-ளுஹாவின் وَوَجَدَكَ ضَآلًّا فَهَدٰى என்ற இந்த வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: اِنَّكَ لَفِيْ ضَلٰلِكَ الْقَدِيْمِ என்ற இறை வசனத்தில் ضَلَال என்பதற்கு தனது நேசம் என்ற ஒரு பொருளும் இருக்கின்றது. எனவே நீர் நேசிப்பவராக இருக்கின்றீர் என்பது இதன் பொருளாக அமையும். ஆக, உமது நேசனுக்கு தொண்டு செய்து, அவனது நெருக்கத்தைப் பெறுவதற்கான வழிகளை நாம் உமக்கு காட்டிக் கொடுத்தோம். (மஃபாதீஹுல் கைப் (அத் தஃப்ஸீருல் கபீர்) தொகுதி 16, பாகம் 31, பக்கம் 197,தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2004-ம் ஆண்டு பதிப்பு)

இதன் மூலம் அல்லாஹ், நீர் அல்லாஹ்வின் அன்பில் திளைத்திருக்கின்றீர் என்று அல்லாஹ் சான்றிதழ் வழங்கிவிட்டான்.

அல்லாஹ் அன்னார் மீது கொண்டிருந்த அன்பு மற்றும் அன்னாருக்கு அல்லாஹ்வின் மீது இருந்த அன்பு ஆகியவற்றின் வெளிப்பாட்டை நாம் பல்வேறு ஹதீஸ்களில் காண்கிறோம்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

சில நேரங்களில் அந்த கண்ணியமும், கருணையும் மிக்க இறைவன் தனது சிறப்புமிக்க அடியார்களுக்காக எப்படிப்பட்ட சொற்களை பயன்படுத்துகின்றான் என்றால், அவை வெளிப்படையில் மோசமானதாகத் தோன்றும்.

ஆனால், பொருள் ரீதியாக மிகவும் புகழ்ச்சிக்குரிய மற்றும் போற்றுதலான வார்த்தையாக இருக்கின்றது. திருக்குர்ஆனின் நடைமுறைகளை நன்கு அறிந்தவர்களுக்கு தெரியும். மேலும் இவ்விஷயம் அவர்களுக்கு மறைவானதல்ல. வெளிப்படையில், அந்த சொல் பொதுவான பயன்பாட்டு முறையின்படி பார்த்தால், இது சரியான சொல் அல்ல என்று தோன்றும். ஏனென்றால், ضال என்பதன் பொருள் 'வழிகேடு' ஆகும். ஆனால் இறைவன் தனது குறிப்பான அடியார்களுக்கு ஒரு குறிப்பிட்ட சூழலில் இவ்வார்த்தையைப் பயன்படுத்தும்போது அதன் அர்த்தம் மாறிவிடுகிறது. உதாரணமாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறும்போது,

وَوَجَدَكَ ضَآلًّا فَهَدَىٰ

என்று கூறியுள்ளான். மிகவும் பிரசித்திப்பெற்ற, புகழ்பெற்ற அகராதி அறிஞர்கள் ضال என்பதற்கு வழிகேடு என்ற பொருளையே பொதுவாகக் கொடுக்கின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இந்த வகையில் வசனத்தின் பொருள் **இவ்வாறு அமையும். வல்ல இறைவன் கூறினான்:** தூதரே! நாம் உம்மை **வழிகேட்டில் இருப்பதைக் கண்டோம்; மேலும்,** உமக்கு நேர்வழி **வழங்கிவிட்டோம்.**

அதாவது, பொதுவாக மக்கள் கொடுக்கும் பொருள் இதுவாகும். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருபோதும் வழிகேட்டில் இருந்ததில்லை. ஒரு முஸ்லிமாக இருந்து கொண்டு அன்னார் (ஸல்) எப்போதாவது வழிகேட்டில் இருந்ததாகக் ஒருவன் கருதுபவன் என்றால் அவன் காஃபிர் ஆவான்; அவன் மார்க்கமற்றவன் ஆவான். அவன் ஷரீஅத்தின் வரம்புகளை மீறியவன் ஆவான். இந்த இடத்தில் வசனத்தின் சூழல் மற்றும் அதன் தொடர்ச்சி ஆகியவற்றிற்கு ஏற்ப பொருள் கொள்ள வேண்டும். அது இவையாகும்; அதாவது, கம்பீரமும், கண்ணியமும் மிக்க அல்லாஹ் أَلَمْ يَجِدْكَ يَتِيمًا فَآوَىٰ وَوَجَدَكَ ضَآلًّا فَهَدَىٰ وَوَجَدَكَ عَائِلًا فَأَغْنَىٰ (அல் ளுஹா: 7-9)

என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்து முதலில் கூறியுள்ளான்.

பொருள்: 'அல்லாஹ் உம்மை அனாதையாகவும் ஆதரவற்றவராகவும் கண்ட போது தன்னிடத்தில் இடமளித்தான். உம்மை ضال ஆக, அதாவது ஒரு அல்லாஹ்வின் ஒரு நேசனாகக் கண்டான். எனவே, உம்மை தன்னிடமே இழுத்துக்கொண்டான். உம்மை எளியவராகக் கண்டு செல்வந்தராக ஆக்கினான்' என்றே பொருள் கொள்ள வேண்டும். (ஆயினா கமாலாத்தே இஸ்லாம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 5, பக்கம் 170 - 171)

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மேலும் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தூய உள்ளம், பரந்த மனப்பான்மை, பரிசுத்தத்தன்மை, வெட்க உணர்வு, உண்மை, நேர்மை, நம்பிக்கை, நன்றியுணர்வு, இறைவன் மீதான நேசம் போன்ற அனைத்து நற்பண்புகளிலும் அனைத்து நபிமார்களை விடச் மேலானவர்களாகவும், அனைவரையும் விட சிறந்தவர்களாகவும், உயர்ந்தவர்களாகவும், முழுமையானவர்களாகவும், ஒளிமிக்கவர்களாகவும், தூயவர்களாகவும் இருந்தார்கள். இதனால்தான் அல்லாஹ் அவர்களை விசேஷமான நற்குணங்களின் நறுமணத்தால் மிக அதிகமாக நறுமணப்படுத்தினான். முன்னோர் மற்றும் பின்னோர் அனைவரின் இதயங்களை விட விசாலமானதும், தூய்மையானதும், பிரகாசமானதுமான அன்னாரின் இதயம்தான் திருக்குர்ஆன் போன்ற ஒரு மகத்தான வஹீ இறங்குவதற்குத் தகுதியுள்ளதாக இருந்தது. அந்த வஹீ மற்ற முந்தைய வேதங்களை விட வலிமையானதும் முழுமையானதும் ஆகும். அந்த வஹீ உயர்வானதும் நிறைவானதும் ஆகும். மேலும் மிகவும் மேலானதும் பூரணமானதும் ஆகும். அன்னாரின் புனிதமான இருதயம் அல்லாஹ்வின் உயர்வான முழுமையான பண்புகளை காட்டக்கூடிய ஒரு தூய விசாலமான அகண்ட கண்ணாடியாகும்.'

இந்தக் கண்ணாடியில் நாம் அல்லாஹ்வின் பண்புகளையும் அவனது இருப்பின் ஒவ்வோர் அம்சத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்திலும், அன்னாரின் போதனைகளிலும் காணலாம்.

கூறினார்கள்: இந்தக் காரணத்தினால் தான் திருக்குர்ஆன் எத்தகைய மேலான சிறப்புகளைக் கொண்டுள்ளது என்றால், அதன் ஒளிமிக்க வெப்பமான கதிர்களுக்கு முன்னால் அனைத்து முந்தைய வேதங்களின் பிரகாசமும் மறைந்துவிடுகிறது.

அதாவது, அனைத்து முந்தைய வேதங்களும் அவற்றின் போதனையின் பிரகாசமும் திருக்குர்ஆனுக்கு முன்னால் எந்த அந்தஸ்தும் கொண்டிருப்பதில்லை.

திருக்குர்ஆனில் இல்லாத எந்தவோர் உண்மையையும் எவராலும் கொண்டு வர முடியாது. திருக்குர்ஆனில் எல்லா விஷயமும் உள்ளது. உலகில் யாரேனும் கண்டறியும் வகையில் திருக்குர்ஆனில் இல்லாத ஒன்றும் கிடையாது. ஆனால், புரிய வேண்டிய தேவை உள்ளது. யாரேனும் எடுத்து வைக்கும் வகையில் திருக்குர்ஆனில் இல்லாத எந்தவோர் அறிவுப்பூர்வான சான்றும் கிடையாது. திருக்குர்ஆன் இலட்சக்கணக்கான இதயங்களில் ஏற்படுத்துவதைப் போன்ற ஆழமான மற்றும் பரக்கத் நிறைந்த தாக்கத்தை எந்தவொரு சொற்பொழிவாலும் ஏற்படுத்த முடியாது. திருக்குர்ஆன், சந்தேகத்திற்கிடமின்றி அல்லாஹ்வின் முழுமையான பண்புகளைப் பிரதிபலிக்கும் ஒரு தூய்மையான கண்ணாடி போன்றது. பயணி ஒருவர் உயர்ந்த இறைஞான அந்தஸ்துகளை அடைவதற்குத் தேவையான அனைத்தும் இதில் அடங்கியுள்ளன. (ஸர் சஷ்ம் ஆரியா, ரூஹானீ கஸாயீன், தொகுதி 2, பக்-71-72, அடிக்குறிப்பு)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அருளப்பட்ட போதனைகள் மிகவும் தூய்மையானவை. அவை மற்ற அனைத்து போதனைகளையும் விடவும், அனைத்து வேதங்களையும் விடவும் உயர்ந்ததும், முழுமையானதும் ஆகும். திருக்குர்ஆன் ஒரு முழுமையான போதனையாகும். எனவேதான், அன்னாரும் இந்தப் போதனைகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு முழுமையான மற்றும் பூரணமான முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள் என்பதை அன்னார் நிரூபித்துக் காட்டினார்கள். அன்னார் (ஸல்) மீது இத்தகைய மகத்தான வேதம் இறக்கப்படுவதற்குக் காரணம், அன்னார் (ஸல்) அனைத்து மனிதர்களையும் விட முழுமையான மனிதராக இருந்ததே ஆகும். அன்னார் (ஸல்) எத்தகைய உயரிய

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

*திருக்குர்ஆனிலிருந்து...*

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

நிலையில் உள்ள முழுமையான மனிதர் என்றால், அந்த இடத்தை வேறு எவராலும் எட்ட முடியாது. எனினும், 'உங்களுக்கு அன்னாரின் வாழ்வில் அழகிய முன்மாதிரி உள்ளது; எனவே அவர்களைப் பின்பற்ற முயற்சி செய்யுங்கள்' என்று அல்லாஹ் கூறியுள்ளான். இதனால்தான் அல்லாஹ் அன்னாரின் வாயிலாக

قُلْ إِنْ كُنتُمْ تُحِبُّونَ اللهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللهُ
وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَاللهُ غَفُورٌ رَّحِيمٌ

என்று பிரகடனப்படுத்தினான்:

அதாவது, நீர் கூறுவீராக! மக்களே! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால், என்னைப் பின்பற்றுங்கள்; அப்போது அல்லாஹ்வும் உங்களை நேசிப்பான், உங்கள் பாவங்களை மன்னிப்பான். நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனுமாவான்.(3:32)

எனவே, அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்கான வழிமுறைகளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியிலிருந்தே நாம் கற்றுக்கொள்ள முடியும். அல்லாஹ்வின் மீது அன்னார் (ஸல்) கொண்டிருந்த அன்பின் காட்சிகளை ஹதீஸ்களில் நாம் காண்கிறோம். அன்னார் (ஸல்) தனது இறைவனிடம் அவனது அன்பை வேண்டியவாறு,

اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ حُبَّكَ، وَحُبَّ مَنْ يُحِبُّكَ،
وَالْعَمَلَ الَّذِي يُبَلِّغُنِي حُبَّكَ، اَللّٰهُمَّ اجْعَلْ
حُبَّكَ أَحَبَّ إِلَيَّ مِنْ نَفْسِي وَأَهْلِي
وَمِنَ الْمَاءِ الْبَارِدِ

என்று துஆ செய்து வந்தார்கள். (ஜாமிஃ திர்மிதி, பாபுத் துஆயே தாவூத், ஹதீஸ் எண்: 3490)

பொருள்: அல்லாஹ்வே! நான் உன்னிடமிருந்து உனது அன்பையும், உன்னை நேசிப்பவர்களின் அன்பையும், உனது அன்பிற்கு என்னை இட்டுச் செல்லும் நற்செயல்களையும் வேண்டுகிறேன். அல்லாஹ்வே! உனது அன்பை எனது உயிர், எனது குடும்பம் மற்றும் குளிர்ந்த நீரை விடவும் அதிக நேசத்திற்குரியதாக எனக்கு ஆக்குவாயாக.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நேசிப்பதாகக் கூறும் ஒவ்வொருவரும், அல்லாஹ்வின் அன்பிற்குப் பாத்திரமாக விரும்புபவரும், அல்லாஹ் அவர் மீது தன் அருளை இறக்க வேண்டும் என்று விரும்புபவரும் இன்று இந்த துஆவைச் செய்ய வேண்டும்.

அதேபோல் மற்றோர் அறிவிப்பில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் யஸீத் கத்மி அன்சாரி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்து வந்தார்கள். அதாவது, 'அல்லாஹ்வே! எனக்கு உனது அன்பையும், உன்னிடத்தில் எனக்குப் பயன் தரக்கூடியவர்களின் அன்பையும் வழங்குவாயாக! அல்லாஹ்வே! நீ எனக்கு வழங்கிய எனக்கு விருப்பமான விஷயங்களை, உனது விருப்பமானவற்றை அடைவதற்கான ஆற்றலாக மாற்றுவாயாக! எனக்குப் பிரியமான ஏதேனும் ஒன்றை நீ என்னிடமிருந்து பிரித்துவிட்டால், அதற்குப் பதிலாக உனக்கு விருப்பமானவற்றை செய்வதற்கான ஆற்றலை எனக்குத் தருவாயாக!

ஆகவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்: 'அல்லாஹ்வே! நீ எனக்கு வழங்கிய எனக்கு விருப்பமான விஷயங்களை, உனது விருப்பமான விஷயங்களை அடைவதற்கான எனது ஆற்றலின் ஆதாரமாக ஆக்குவாயாக! அவற்றுக்கு மேலும் வலிமை அளிப்பாயாக; அவற்றின் மூலம் உனக்கு விருப்பமானவற்றை நான் மேற்கொண்டு பெற்று உனது அன்பிற்குரியவனாக மாற வேண்டும். மேலும் அதன் மூலமாக நான் மேற்கொண்டு உன்னுடைய அன்பை பெற வேண்டும். மேலும் உனக்கு பிடித்தமான விஷயங்களை பெறக்கூடியவனாக நான் ஆக வேண்டும். மேலும், எனக்குப் பிரியமானவை என்று நான் கருதும் ஏதேனும் விஷயங்களை அல்லது மனிதர்களை நீ என்னிடமிருந்து பிரித்துவிட்டால், அதை உனக்கு விருப்பமான விஷயங்களை செய்தவற்கான ஆற்றலாக எனக்கு மாற்றித் தருவாயாக!

எனவே, நம்மிடமிருந்து ஏதேனும் பிரிந்து சென்றால் அதற்காக நாம் விரக்தியடையக் கூடாது. மாறாக, அது அல்லாஹ்விற்குப் பிடிக்கவில்லை என்பதால் அவன் நம்மை விட்டு நீக்கிவிட்டான் அல்லது அவனது விருப்பம் இதுதான் என்று கருதி, அதற்குப் பதிலாக அல்லாஹ்விற்குப் பிரியமானவை நமக்குக் கிடைக்க வேண்டும்; அதற்கான ஆற்றலை பெற வேண்டும். அல்லாஹ்வுக்கு விருப்பமில்லாதவற்றை என்னிடமிருந்து அவன் எடுத்துக் கொண்டால் அல்லாஹ்வே! உனக்கு விருப்பமான விஷயங்களை பெறுவதற்கான ஆற்றலை எனக்கு வழங்குவாயாக! இதுவே அல்லாஹ் மீது அன்னார் (ஸல்) கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடாகும்.

இதேபோல் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகையில், إِذَا جَآءَ نَصْرُ اللهِ وَالْفَتْحُ இறங்கிய பிறகு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், سُبْحَانَكَ رَبَّنَا وَبِحَمْدِكَ اَللّٰهُمَّ اغْفِرْ لِي என்று ஓதாமல் எந்தத் தொழுகையையும் தொழவில்லை.

பொருள்: எங்கள் இறைவா! நீ தூய்மையானவன். உன்னைப் புகழ்ந்து போற்றுகிறேன். அல்லாஹ்வே! என்னை மன்னிப்பாயாக!

அல்லாஹ்வின் மீதான அன்பின் மற்றுமொரு நிகழ்வை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்: 'ஓர் இரவு நான் அல்லாஹ்வின் தூதருக்கு அருகில் படுத்திருந்தேன். திடீரென அவர்கள் அங்கு இல்லாததைக் கண்டு இருட்டில் தேடினேன். அப்போது எனது கை அன்னாரின் பாதங்களில் பட்டது. அன்னார் ஸஜ்தாவில் இருந்தார்கள். அல்லாஹ்விடம் இவ்வாறு துஆ செய்து கொண்டிருந்தார்கள்: 'அல்லாஹ்வே! உனது கோபத்திலிருந்து உனது திருப்தியைக் கொண்டும், உனது தண்டனையிலிருந்து உனது மன்னிப்பைக் கொண்டும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். உனது புகழை என்னால் எண்ணி மாளாது. நீ உன்னைப் பற்றி எவ்வாறு புகழ்ந்தாயோ அவ்வாறே நீ இருக்கிறாய்.' அதாவது, என்னால் உன்னைப் புகழ முடியாது; நீயே உன்னைப் புகழ்ந்து கொண்டதுதான் உனது உண்மையான புகழாகும்.'

அதேபோல் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மற்றோர் இடத்தில் கூறுகையில்:

'ஓர் இரவு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனது இல்லத்தில் தங்கும் முறை இருந்தது. நான் உறங்கிவிட்டபோது அன்னார் (ஸல்) சத்தமில்லாமல் வெளியே சென்றார்கள். அன்னார் (ஸல்) வேறொரு மனைவியின் இல்லத்திற்குச் சென்றிருக்கலாம் என்று நான் எண்ணினேன். நான் பொறாமையினால் வெளியே வந்து பார்த்தபோது, அன்னார் (ஸல்) ஒரு துணி மூட்டையைப் போலத் தரையில் ஸஜ்தாவில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டேன். (அப்போது) அன்னார் (ஸல்) இவ்வாறு கூறுவதை நான் கேட்டேன்:

سَجَدَ لَكَ سَوَادِي وَخَيَالِي وَآمَنَ بِكَ
فُؤَادِي رَبِّ هَذِهِ يَدِي، وَمَا جَنَيْتُ
عَلَى نَفْسِي، يَا عَظِيمُ تُرْجَى
لِكُلِّ عَظِيمٍ فَاغْفِرِ الذَّنْبَ الْعَظِيمَ

பொருள்: அல்லாஹ்வே! எனது உடலும், உள்ளமும் உனக்கே ஸஜ்தா செய்கின்றன. எனது உள்ளம் உன் மீது ஈமான் கொள்கிறது. என் இறைவா! இதோ எனது இரு கைகள் உனது முன்னிலையில் விரிந்துள்ளன. இவற்றைக் கொண்டு நான் எனது ஆன்மாவிற்கு செய்த அநீதிகளும் உனது முன்னிலையில் உள்ளன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நற்செயல்களைத் தவிர வேறொன்றும் அறியாத ஒரு முழுமையான மனிதராக இருந்தார்கள். இருந்தபோதிலும், அன்னார் (ஸல்) 'நான் எனது ஆன்மாவிற்கு அநீதி இழைத்துவிட்டேன்; அவை உன் முன்னால் உள்ளன' என்று கூறுகிறார்கள். மேலும், பெரும் கண்ணியமுடையவனே! உன்னிடமிருந்தே ஒவ்வொரு பெரிய விஷயங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன, எனவே எனது பெரும் பாவங்களை மன்னிப்பாயாக! என்று வேண்டுகிறார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் (தொடர்ந்து) அறிவிக்கிறார்கள்: பிறகு அன்னார் (ஸல்) தம் அருளுக்குரிய தலையை உயர்த்தியபோது, என்னைப் பார்த்துவிட்டார்கள். என்ன விஷயம் உம்மை வெளியே கொண்டு வந்தது? நீ ஏன் வெளியே வந்தாய்? நீ உறங்கிக் கொண்டிருந்தாயே?' என்று கேட்டார்கள். அதற்கு நான் எனது மனதில் ஏற்பட்ட எண்ணத்தைச் சொன்னேன். அதாவது அன்னார் வேறொரு மனைவியிடம் சென்றிருக்கலாம் என்று நினைத்ததைக் கூறினேன். அதற்கு அன்னார் '(ஸல்) நிச்சயமாக சில எண்ணங்கள் பாவமாகிவிடும். என் மீது உனக்குச் சந்தேகம் ஏற்பட்டதா? இது பாவமாகும்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியது போல, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வேறொரு மனைவியிடம் சென்றிருக்கலாம் என்று தமக்குச் சந்தேகம் ஏற்பட்டதாக அவர்கள் தெரிவித்தார்கள். 'இத்தகைய எண்ணங்கள் பாவமாகிவிடும், எனவே அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோரு! தவறான எண்ணங்களிலிருந்து தப்பிக்க ஒவ்வொரு விஷயத்திலும் அல்லாஹ்விடம் மன்னிப்புத் தேடுவது, இஸ்திக்ஃபார் செய்வது மிக அவசியம்' என்றார்கள்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், 'விஷயம் என்னவென்றால், ஜிப்ரயீல் என்னிடம் வந்து இந்த சொற்களை ஓதுமாறு கூறினார். எனவே நீயும் உனது ஸஜ்தாக்களில் இதனை ஓதுவாயாக! இப்போது நீ இதனைக் கேட்டுவிட்டாய்; எனவே இதனை ஓதி வா! எவர் இந்த சொற்களை ஓதுகிறாரோ அவர் ஸஜ்தாவிலிருந்து தலையை உயர்த்துவதற்கு முன்பே மன்னிக்கப்படுவார் என்று கூறினார்கள்.


இத்துடன் ஒரு நிபந்தனையும் உண்டு; அது என்னவென்றால், அவர் அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை கொண்டவராக இருக்க வேண்டும். அவரது நம்பிக்கையும் நிறைவானதாக இருக்க வேண்டும். மற்ற நற்செயல்களைச் செய்பவராகவும் இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் உயர்ந்த தகுதியை அன்னார் (ஸல்) அறிந்திருந்ததால் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு இதனை அறிவுறுத்தினார்கள். ஆனால் மற்ற நற்செயல்களைச் செய்யாமல் வெறும் இந்தத் துஆவை மட்டும் ஓதுவதினால் மன்னிப்பு கிடைத்துவிடாது.

இதேபோல் மற்றோர் அறிவிப்பு ஸஹீஹ் முஸ்லிமில் விரிவாக இடம்பெற்றுள்ளது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னுடன் தங்கியிருந்த இரவில், அன்னார் (ஸல்) வீட்டிற்குத் திரும்பியதும் தமது போர்வையை வைத்துவிட்டு, காலணிகளைக் கழற்றித் தமது பாதங்களுக்கு அருகில் வைத்துக் கொண்டார்கள். பிறகு, தமது போர்வையின் ஒரு முனையை விரித்துப் படுத்துக்கொண்டார்கள். நான் உறங்கிவிட்டேன் என்று அன்னார் (ஸல்) நினைக்கும் வரை சிறிது நேரம் கழிந்தது. பிறகு, அன்னார் மெதுவாகத் தமது போர்வையை எடுத்து, மெதுவாகக் காலணிகளை அணிந்து, கதவைத் திறந்து வெளியே சென்றார்கள்; பின்னர் கதவை மெதுவாக மூடினார்கள்.

நானும் எனது முக்காட்டையும் போர்வையையும் அணிந்துகொண்டு அன்னாருக்குப் பின்னால் சென்றேன். அன்னார் (ஸல்) 'ஜன்னதுல் பகீ' சென்றடைந்தார்கள். அங்கே அன்னார் நின்று நீண்ட நேரம் துஆ செய்தார்கள். பிறகு மூன்று முறை இரு கைகளையும் ஏந்தினார்கள். பின்னர் அன்னார் (ஸல்) திரும்பினார்கள்; நானும் திரும்பினேன். அன்னார் (ஸல்) வேகமாக நடந்தார்கள்; நானும் வேகமாக நடந்தேன். அன்னார் (ஸல்) வேகத்தை இன்னும் அதிகமாக்கியதும் நானும் அதிகமாக்கினேன். அன்னார் (ஸல்) இன்னும் வேகமாக நடக்கத் தொடங்கியதும் நானும் வேகமாக நடக்கத் தொடங்கினேன். பிறகு, அன்னார் (ஸல்) வீட்டுக்கு வந்தார்கள். அன்னாருக்கு முன்பே நான் உள்ளே வந்து படுத்துக்கொண்டேன்.

அன்னார் (ஸல்) உள்ளே வந்தபோது, 'ஆயிஷாவே! உனக்கு என்ன ஆயிற்று? ஏன் இவ்வளவு வேகமாக மூச்சு வாங்குகிறது?' என்று கேட்டார்கள். வேகமாக நடந்ததால் மூச்சு வாங்கியதை அன்னார் (ஸல்) கவனித்துவிட்டார்கள். நான் 'ஒன்றுமில்லை' என்று கூறி அதனை மறைக்க முயன்றேன். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீ உண்மையைச் சொல்லாவிட்டால், நுட்பமானவற்றை அறிபவனும் எல்லாம் தெரிந்தவனுமாகிய அல்லாஹ் எனக்கு அறிவித்துவிடுவான்' என்றார்கள். பிறகு நான், 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது தாய் தந்தையர் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும்! என்று கூறி,




எனது உள்ளத்தில் தோன்றிய எண்ணம், நான் பின்தொடர்ந்து சென்றது போன்ற நடந்த அனைத்தையும் கூறினேன். 'அப்படியானால் எனக்கு முன்னால் தெரிந்த அந்த உருவம் உன்னுடையதுதானா?' என்று கேட்டார்கள். நான் ஆம்! என்றேன்.

பிறகு அன்னார் (ஸல்) என் நெஞ்சில் கையால் தட்டிவிட்டார்கள். அதை நான் உணர்ந்தேன். 'அல்லாஹ்வும் அவனது தூதரும் உனக்கு அநீதி இழைப்பார்கள் என்று நீ எண்ணினாயா? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: மனிதர்கள் மறைப்பதை அல்லாஹ் நிச்சயமாக அறிவான். அல்லாஹ் இதை அன்னாரிடம் வெளிப்படுத்தி விடுவான் என்று நானே அன்னாருக்கு கூறிவிடுகிறேன் என்று கருதி என் மனதில் இருந்தவற்றைச் சொன்னேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ஜிப்ரயீல் என்னிடம் வந்து என்னைக் கூப்பிட்டார். அப்போதுதான் நீ என்னைக் கண்டாய். அவர், அதனை உன்னிடமிருந்து மறைத்து வைத்திருந்ததால் நான் உன்னிடம் கூறாமல் வெளியே சென்றேன். நீ உறங்கிவிட்டாய் என்று நான் நினைத்தேன். உன்னை எழுப்ப விரும்பவில்லை. நான் உன்னிடம் கூறிவிட்டு சென்றிருந்தால், இன்று நான் தனியாக இருக்கின்றேன் என்று கூறுவீர்! ஜிப்ரயீல் என்னிடம் வந்து, உமது இறைவன் உம்மை பகீ மயானத்தில் உள்ளவர்களுக்காகப் பாவமன்னிப்புத் தேடச் சொல்கிறான் என்று கூறினார்.'

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நானும் இந்த நன்மையில் பங்கேற்க முடியுமா? நான் அவர்களுக்காக எப்படி துஆ செய்வது? என்று கேட்டார்கள்' நீங்களோ துஆ செய்துவிட்டீர்கள்! நானும் அங்கிருந்து திரும்பி வந்துள்ளேன்; எனவே நான் அவர்களுக்காக என்ன துஆ செய்ய வேண்டும்? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம்

(ஸல்) அவர்கள் இவ்வாறு துஆ செய்ய கற்றுக்கொடுத்தார்கள்:

முஃமின்கள் மற்றும் முஸ்லிம்களைச் சார்ந்தவர்களில் இந்த வீட்டில் இருப்பவர்களின் மீது சாந்தி உண்டாவதாக! அல்லாஹ் நம்மில் முந்தியவர்களுக்கும் பிந்தியவர்களுக்கும் கருணை காட்டுவானாக! அல்லாஹ் நாடினால் நாங்களும் உங்களுடன் வந்து இணைவோம்.'

இதேபோல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ் மீது கொண்டிருந்த அன்பைப் பற்றி மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு வந்துள்ளது; அதா என்பவர் அறிவிக்கிறார்: 'நானும், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமரும், உபைது பின் உமைரும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் சென்றோம். அப்போது இப்னு உமர் (ரலி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதரிடம் நீங்கள் கண்டவற்றில் மிகவும் அழகான மற்றும் ஆச்சரியமான விஷயத்தைக் கூறுங்கள்' என்று கேட்டார். இதைக் கேட்டதும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அழுதுவிட்டார்கள். 'அன்னாரின் ஒவ்வொரு விஷயமுமே அழகானதும் ஆச்சரியமானதும்தான்' என்று கூறிவிட்டு ஒரு சம்பவத்தை எடுத்துரைத்தார்கள்: 'ஒருமுறை எனது வீட்டில் தங்கும் முறை இருந்த இரவு, அன்னார் (ஸல்) என்னிடம் வந்து, என்னுடன் போர்வையில் படுத்துக்கொண்டார்கள். அன்னார் (ஸல்) தம் உடலை எனது உடலோடு சேர்த்து படுத்தபோது அதை நான் உணர்ந்தேன். அப்போது 'ஆயிஷாவே! நீ அனுமதித்தால், இந்த இரவின் மீதமுள்ள பகுதியை எனது இறைவனை வணங்குவதில் கழிக்க விரும்புகிறேன் என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள்.' நான் கூறினேன்: 'எனக்கு உங்களது அருகாமையும் பிடிக்கும், அதேசமயம் உங்களது விருப்பத்தையும் நான் நேசிக்கிறேன். உங்களது ஒவ்வொரு ஆசையும் நிறைவேற வேண்டும் என்பதே எனக்கு மிகவும் விருப்பமான விஷயம். சரி! நீங்கள் இறை வணக்கம் செய்ய விரும்பினால் செய்யுங்கள்.'

பிறகு அன்னார் (ஸல்) வீட்டிலிருந்த ஒரு தண்ணீர்ப்பையை நோக்கி சென்றார்கள். உளூ செய்தார்கள். அன்னார் (ஸல்) அதிக தண்ணீரை வீணாக்கவில்லை. பிறகு அன்னார் (ஸல்) எழுந்து நின்று திருக்குர்ஆனை ஓதித் தொழத் தொடங்கினார்கள்; மேலும் அழுது கொண்டே சென்றார்கள். எந்த அளவுக்கென்றால், அன்னாரின் கண்ணீர் அன்னாரது ஆடை நனையும் வரை வழிவதை நான் கண்டேன். பிறகு அன்னார் (ஸல்) தம் வலது பக்கம் சாய்ந்து படுத்து, தமது வலது கையை கன்னத்தின் கீழ் வைத்தார்கள். அப்போதும் அழுதுகொண்டே இருந்தார்கள்; எந்த அளவுக்கென்றால் அன்னாரின் கண்ணீர் தரை வரை வந்தடைந்ததை நான் கண்டேன்.

அதிகாலை நேரம் வந்ததும், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் ஃபஜ்ர் தொழுகைக்காக அன்னாரை அழைக்க வந்தார்கள். அன்னார் அழுதுகொண்டிருப்பதைக் கண்டு, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்கள் முன், பின் பாவங்கள் அனைத்தையும் அல்லாஹ் மன்னித்துவிட்ட பிறகும் தாங்கள் ஏன் அழுகிறீர்கள்?' என்று கேட்டார்கள். அதற்கு அன்னார் (ஸல்) 'நான் நன்றியுள்ள அடியாராக இருக்க வேண்டாமா?' என்று பதிலளித்தார்கள்.

நன்றியுணர்வு குறித்த ஒரு சம்பவத்தை நான் கடந்த குத்பாவிலும் எடுத்துரைத்திருந்தேன்.

MUNEEF TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram 5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

மேற்கொண்டு அதனுடைய விவரம் இதுவாகும்.

மற்றோர் அறிவிப்பில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேகம் அல்லது பலத்த காற்றைக் கண்டால், அவர்களின் முகம் கவலையடைவதை அறிந்து கொள்ளலாம். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! மக்கள் மேகத்தைக் கண்டால் மழை வரும் என்று மகிழ்வார்கள். ஆனால் நீங்கள் மேகத்தைக் காணும் போதெல்லாம் உங்கள் முகத்தில் கவலை தெரிகிறதே? என்று நான் கேட்டேன்.' அதற்கு அன்னார் (ஸல்), ஆயிஷாவே! இதில் அந்த சூறாவளித் தண்டனை இருக்காது என்று என்ன நிச்சயம்! எனக்கு இது எவ்வாறு நிம்மதி தரும்? நான் மறைவான விஷயத்தை அறியமாட்டேன். முந்தைய சமுதாயங்களுக்கு வந்தது போன்ற சூறாவளித் தண்டனை இதில் இல்லை என்று எனக்கு நிம்மதி அளிக்கக்கூடிய விஷயம் எதுவுமில்லை. ஒரு சமூகத்திற்குத் தண்டனை வந்தபோது, அவர்கள் அந்தத் தண்டனையைக் கண்டு 'இது நமக்கு மழையைப் பொழியச் செய்யும் மேகம்' என்று கூறினார்கள்.

திருக்குர்ஆனிலும் இது பற்றிய குறிப்பு உள்ளது. எனவே, இதில் என்ன இருக்கிறது அல்லது என்ன இல்லை என்பது எனக்கு எப்படித் தெரியும்? இதனால்தான் என் உள்ளத்தில் இருக்கும் அல்லாஹ்வின் அச்சம் மற்றும் அவன் மீதான அன்பின் காரணமாக நான் கவலையடைகிறேன் என்று பதிலளித்தார்கள்.'

மற்றோர் இடத்தில் ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் இதே அறிவிப்பை இவ்வாறு அறிவித்துள்ளார்கள்; 'ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வானில் மேகத்தைக் கண்டால், வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் வந்து சென்று கொண்டிருப்பார்கள்; அவர்களின் முகம் மாறிவிடும். ஆனால், சாதாரண முறைப்படி மழை பெய்யத் தொடங்கிவிட்டால் அவர்களின் அந்தப் பதற்றம் நீங்கிவிடும். ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் அன்னாரிடம் இந்த நிலைக்குக் காரணம் கேட்டபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'இது 'ஆது' சமுதாயத்தினர் கூறியது போன்ற மேகமாக இருக்குமோ என்று நான் அஞ்சுகிறேன்.

சூரா அல்-அஹ்காஃப் வசனத்தின்படி, அவர்கள் தங்கள் பள்ளத்தாக்குகளை நோக்கி மேகம் வருவதைக் கண்டு, 'இது நமக்கு மழையைத் தரும் மேகம்' என்று கூறினார்கள். ஆனால் அது அவர்களுக்கு மழையை அல்ல, தண்டனையையே கொண்டு வந்தது.

பிறகு மற்றோர் அறிவிப்பில் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகையில்; 'அல்லாஹ்வின் தூதரும், அவர்களது தோழர்களும் மேகத்திலிருந்து விழும் முதல் மழைத்துளி தங்கள் மீது படுவதற்காகத் தங்கள் தலைகளைக் மூடாமல் வைப்பார்கள். 'இது நமது கண்ணியமிக்க இறைவனிடமிருந்து வரும் புதிய அருட்கொடையும் மிகவும் பரக்கத் நிறைந்ததும் ஆகும் என்று அன்னார் கூறுவார்கள்.'

இது பொதுவாக மழை பெய்யும்போது அன்னார் கடைப்பிடித்த முறையாக இருந்தது.

உர்வா பின் ஸுபைர் அவர்களின் ஓர் அறிவிப்பு உள்ளது. அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ் அவர்களிடம், 'முஷ்ரிக்குகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இழைத்த மிகக் கொடிய கொடுமை எது?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள் கூறினார்கள்: 'ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் கஃபாவின் 'ஹதீம்' பகுதியில் தொழுது கொண்டிருந்தார்கள். அப்போது உக்பா பின் அபீ முயீத் என்பவன் வந்து, தனது ஆடையை அன்னாரின் கழுத்தில் போட்டு

மிகவும் பலமாக இறுக்கினான். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் உக்பாவின் தோளைப் பிடித்துத் தள்ளிவிட்டார்கள்; அன்னாரை விட்டு அவனை அகற்றினார்கள். 'எனது இறைவன் அல்லாஹ் என்று கூறும் ஒரு மனிதரையா நீங்கள் கொல்லத் துணிகிறீர்கள்?' என்று அவர்கள் கேட்டார்கள். இவரோ அல்லாஹ்வின் அன்பில் மூழ்கி அவனைத் தொழுது கொண்டிருக்கிறார். நீங்களோ இவரைக் கொல்லத் துடிக்கிறீர்கள் என்று கூறினார்கள்.'

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழு வாழ்க்கையுமே இறை நேசத்தில் மூழ்கியிருந்தது. அந்த அன்பின் காட்சிகளைக் கண்டுதான் மக்கா வாசிகள் اِنَّ مُحَمَّدًا عَشِقَ رَبَّهُ என்று கூறினர்.

பொருள்: முஹம்மது தமது இறைவனின் நேசராக மாறிவிட்டார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ' அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறைவனின் நேசராகவும் பித்தராகவும் மாறினார்கள்; அதன் பிறகு உலகில் எப்போதும் எவருக்கும் கிடைக்காததை அவர்கள் அடைந்தார்கள். அன்னாருக்கு அல்லாஹ் மீது எவ்வளவு அன்பு இருந்ததென்றால், சாதாரண மக்கள் கூட, عَشِقَ مُحَمَّدٌ عَلَى رَبِّهِ என்று கூறத் தொடங்கினர்.

பொருள்: முஹம்மது தமது இறைவனின் நேசராகிவிட்டார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மற்றோர் இடத்தில் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தை ஸஹாபிகள் கண்டிருந்தார்கள். அந்த முகம் எவ்வளவு உண்மையானது என்றால், அன்னார் (ஸல்) அல்லாஹ்வின் நேசராக உள்ளார் என்பதை மக்கத்து குறைஷிய காஃபிர்கள் தம்மையும் அறியாமல் சாட்சிக் கூறியிருந்தார்கள். அன்னாரின் அன்றாடப் பிரார்த்தனைகள் மற்றும் அன்பின் ஸஜ்தாக்கள், அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு முழுமையாகக் கீழ்ப்படிதல், நிறைவான நேசம், அந்த நேசம் எனும் முகத்தில் தென்பட்ட ஒளிமிக்க அடையாளங்கள் மற்றும் அந்த தூய முகத்தில் வழிந்தோடிய தெய்வீக ஒளியைக் கண்ட ஸஹாபிகள், عَشِقَ مُحَمَّدٌ عَلَى رَبِّهِ என்று கூறினர்.

முஹம்மது தனது இறைவனின் காதலராகிவிட்டார்.

ஸஹாபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் உண்மை, அன்பு மற்றும் தூய்மையை கண்டது மட்டுமின்றி அன்னாரின் உள்ளத்திலிருந்து ஒரு நதியைப் போல பொங்கி வழிந்த இறைவன் மீதான கொண்டிருந்த நேசத்திற்குப் பதிலாக, இறைவனது நேசத்தையும் அசாதாரண முறையில் வெளிப்பட்ட அவனது உதவிகளையும் கண்டார்கள். இதன் மூலம் அல்லாஹ் ஒருவன் இருக்கிறான் என்பதை அவர்கள் அறிந்து கொண்டார்கள். அந்த இறைவன் இந்த மனிதருடன் இருக்கிறான் என்பதை அவர்கள் உள்ளங்கள் கூறத் தொடங்கின. அவர்கள் எந்த அளவு இறை அற்புதங்களையும் வானத்து அடையாளங்களையும் கண்டார்கள் என்றால், நிச்சயமாக ஓர் உயர்வான இருப்பு உள்ளது. அவன் இறைவன் ஆவான். அவனது வல்லமையில் எல்லா விஷயமும் உள்ளது என்றும் அவனால் இயலாதது எதுவுமில்லை என்பதிலும் அவர்களுக்கு எவ்வித சந்தேகமும் இருக்கவில்லை. இதனால்தான் அவர்களால் அந்த வேலைகளையும், அந்த உயிர்த்தியாகங்களையும் உண்மையுடனும் கலப்பற்ற தன்மையுடனும் செய்ய முடிந்தது. எல்லாவித சந்தேகமும் ஐயமும் நீங்காத வரை இதை மனிதனால் செய்ய இயலாது. அந்த தூய இறைவனின் திருப்தி இஸ்லாத்தில் இணைவதிலும், அவனது தூதர் (ஸல்) அவர்களை உடலாலும் உயிராலும் முழுமையாகப் பின்பற்றுவதிலும்தான் இருக்கிறது என்பதை அவர்கள் கண்கூடாகக் கண்டார்கள். பிறகு இந்த உறுதியான உண்மை நிலை ஏற்பட்ட பின்னர், அவர்கள் காட்டிய கீழ்ப்படிதலும், ஆர்வத்துடன் அவர்கள் செய்த அந்த செயல்களும், தங்களது உயிர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த வழிகாட்டியின் முன்னே அவர்கள் அர்ப்பணித்த விதமும் – அனுபவம் வாய்க்காதவரை எவராலும் செய்ய முடியாத காரியங்களாகும்.


ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'நான் அல்லாஹ்வின் தூதரிடம், தங்களுடைய வாழ்க்கை நெறி முறை என்ன? என்று கேட்டேன். அதற்கு அன்னார் (ஸல்) அறிவு, ஞானம் எனது மூலதனம் என்றார்கள்.

அதாவது, உங்களது வாழ்வின் அம்சங்கள் யாவை அல்லது உங்களது வாழ்க்கை எந்த நெறிமுறையின் அடிப்படையில் அமைந்துள்ளது என்று கேட்டபோது அன்னார் (ஸல்) கூறினார்கள்:

இறைஞானமே எனது மூலதனமாகும், பகுத்தறிவு எனது மார்க்கத்தின் அடிப்படையாகும். இறை ஞானத்தை அல்லாஹ் எனக்கு வழங்கியுள்ளான். இது எனது மூலதனம் ஆகும்; எனது செல்வம் ஆகும். அல்லாஹ் எனக்கு அறிவை வழங்கியுள்ளான். அதை நான் அவனது அன்பிலும் அவனது சட்டங்களைப் பின்பற்றுவதிலும் பயன்படுத்துகிறேன். இது எனது மார்க்கத்தின் அடிப்படை ஆகும்.

அல்லாஹ்வின் மீதான நேசம் எனது வாழ்வின் அஸ்திவாரமும், அடிப்படையும் ஆகும். இறை வழியில் முன்னேறுவதற்கான ஆர்வம் எனது வாகனம் ஆகும். நான் இறை வழியிலும் அவனது நேசத்திலும் முன்னேறிக் கொண்டே செல்ல வேண்டும் என்று விரும்புகிறேன். எனது இந்த ஆர்வமே என்னைச் சுமந்து செல்லும் வாகனம் ஆகும் அதில் பயணித்து நான் தொடர்ச்சியாக முன்னேறிக் கொண்டே செல்கிறேன்; முயற்சி செய்து கொண்டே இருக்கிறேன். அல்லாஹ்வின் நினைவு எனது தோழனும், எனது துன்பத்தை போக்கும் நிவாரணியும் ஆகும். எனது நண்பன் யார்? எனது எனது கவலைகளைப் போக்கி எனக்கு ஆறுதல் அளிப்பது யார்? அது இறைவனின் நினைவும் அவனிடம் செய்யும் துஆக்களுமே ஆகும். இறைநம்பிக்கை எனது பொக்கிஷம் ஆகும். நான் அவன் மீதே நம்பிக்கையும் உறுதிப்பாடும் வைத்துள்ளேன். இதுவே எனது கருவூலம் ஆகும். நீர் எனது வழிமுறையை கேட்கின்றீர் என்றால், நினைவில் வைத்துக் கொள்ளும்! கவலை எனது தோழன் ஆகும். எனக்கு ஏதேனும் துன்பம் நேர்கிறது என்றால் அது எனது தோழன் ஆகும்; வாழ்வின் ஒரு பகுதி ஆகும். அல்லாஹ் என்னுடன் இருப்பதால் நான் எதற்கும் அஞ்சுவதில்லை. கல்வி எனது ஆயுதம் ஆகும். கல்வியைப் பெறுமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்; ஏனெனில் கல்வி கற்பது சிந்தனைக்கு ஒளியூட்டுகிறது. மேலும் அல்லாஹ்வைப் பற்றிய ஞானத்தையும் மேலும் பெற்றுத் தருகிறது. எனக்கு அல்லாஹ்வே கல்வியைக் கற்றுக்கொடுக்கிறான். அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும் அந்த ஞானத்தை விடவும் சிறந்த ஆயுதம் எதுவாக இருக்க முடியும்? அன்னார் (ஸல்) கூறினார்கள்: 'இதுவே எனது ஆயுதமாகும், இதன் மூலமே நான் முன்னேறிச் செல்கிறேன்.

உலகக் கல்வியைப் பொறுத்தவரையிலும் கூட, போர்க்காலச் சம்பவங்கள் குறித்து முந்தைய குத்பாக்களில் நான் எடுத்துரைத்திருந்ததுபோல, அல்லாஹ் அன்னாருக்கு எத்தகைய அறிவை வழங்கியிருந்தான் என்றால், அதன் காரணமாக அன்னார்

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

(ஸல்) மிகச் சிறந்த திட்டமிடலையும், உயர்வான வியூகங்களையும் வகுத்து வந்தார்கள் என்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதேபோன்று அன்னாரிடம் எண்ணற்ற ஆன்மிக ஞானமும் இருந்தது, அதற்கு முடிவே இருக்கவில்லை. அது அனைவருக்கும் தெளிவாகவும், வெளிப்படையாகவும் புலப்படக்கூடியது.

பிறகு அன்னார் (ஸல்) கூறினார்கள்: பொறுமை எனது ஆடை ஆகும். அதாவது எனது ஆடையும், அங்கியும் எனது பொறுமைதான். இறைவனின் விருப்பத்தில் திருப்தியடைவது எனது போர்க்காலச் செல்வம் ஆகும். நான் அல்லாஹ்வின் விருப்பத்தில் திருப்தி அடைகிறேன். இதுவே எனது போர்ச் செல்வம் ஆகும். வறுமை எனது பெருமை ஆகும். வெளிப்படையாக வறுமை அல்லது பொருளாதாரக் குறைபாடுள்ள நிலை ஏற்பட்டால் அதுவே எனது பெருமையாகும். வறுமை நிலையில் இருந்தபோதிலும் அல்லாஹ் எனக்கு எண்ணற்ற அருட்கொடைகளை வழங்கியுள்ளான் என்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன். துறவு எனது திறமை ஆகும். எனது திறமை என்பது உலகப் பற்றற்ற நிலையும் இறையச்சமும் ஆகும், அதனை அடையவே நான் முயற்சி செய்கிறேன். நம்பிக்கை எனது வலிமை ஆகும். அல்லாஹ் மீது கொண்டுள்ள முழுமையான நம்பிக்கையே எனக்கு வலிமையைத் தருகிறது. உண்மை எனது பரிந்துரை ஆகும். நான் ஒருபோதும் தவறான பேச்சை பேசியதில்லை. உண்மையே எனது பரிந்துரைக்கு ஆதாரமாகும். கீழ்ப்படிதல் எனக்குப் போதுமானது. அல்லாஹ்வின் ஒவ்வொரு கட்டளைக்கும் நான் முழுமையான கீழ்ப்படிதலுடன் செயல்படுபவன். ஜிஹாத் - அறப்போர் எனது நற்பண்பு ஆகும். அது உடல் ரீதியான ஜிஹாதாக இருந்தாலும் அல்லது அல்லாஹ்வின் பாதையில் செய்யப்படும் ஆன்மிக ஜிஹாதாக இருந்தாலும் அல்லது அல்லாஹ்வின் படைப்புகளின் உரிமைகளை நிறைவேற்றுவதற்கான போராட்டமாக இருந்தாலும் அதுவே எனது சுபாவம் ஆகும். எனது கண்ணின் குளிர்ச்சி தொழுகையில் உள்ளது. இந்த அனைத்து விஷயங்கள் இருந்தாலும், எனது கண்ணின் உண்மையான குளிர்ச்சி என்பது தொழுகையில்தான் இருக்கிறது. அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதும், அவனை வணங்குவதும், அவனது அன்பை வெளிப்படுத்துவதுமே அதன் நோக்கமாகும்.




மற்றோர் ஹதீஸில், எனது உள்ளத்தின் கனி அல்லாஹ்வின் நினைவாகும்; எனது ஆவல் எனது இறைவன் மீது உள்ளது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.'

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை குறித்தும் அல்லாஹ்வின் மீதான அன்னாரது நேசத்தின் முன்மாதிரியை குறித்தும் சில உதாரணங்களை நான் எடுத்து வைத்தேன். இந்த அழகிய முன்மாதிரியின் விளைவாகவே ஸஹாபிகளிடத்தில் ஒரு புரட்சி ஏற்பட்டது. அதற்கு முன் கற்பனை கூட செய்ய முடியாத ஓர் உன்னத நிலையை அவர்கள் அடைந்தார்கள். இது சம்பந்தமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறியதை நான் எடுத்துரைத்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய அந்த முழுமையான, நிறைவான போதனைகளையே அன்னாரின் உண்மை ஊழியரான ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும் தமதாக்கினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் குறிப்பிடுகையில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றியதன் காரணமாகவே அல்லாஹ் தமக்கு அருட்கொடைகளை வழங்கியதாகக் கூறினார்கள். அன்னார் (அலை) கூறுகிறார்கள்: 'எனது கனவில் இருமுறை பஞ்சாபி மொழியில் சில வரிகள் கூறப்பட்டன. அதில் ஒன்று 'ஜே தூ மேரா ஹோ ரஹே(ன்), ஸப் ஜக் தேரா ஹோ' (அதாவது, நீ எனக்காக ஆகிவிடு; இந்த உலகமே உனக்காகிவிடும்) என்பது. மற்றொன்று, ஒரு பரந்த மைதானம் உள்ளது. அதில் இறைவன் மீதான நேசத்தில் திளைத்த ஒரு மனிதர் என்னை நோக்கி வருவதைக் கண்டேன். அவர் என்னை நெருங்கியதும் இந்த கவிதையை பாடினார்:

'இஷ்க்கே இலாஹி முஃ பர் வஸே வலியான் ஏ நிஷானி.

(துஸக்கிரா, பக் 439 - 440, 2023-ம் ஆண்டு பதிப்பு)

பொருள்: இறைநேசர்களின் அடையாளம் என்னவென்றால், அவர்களின் முகத்தில் இறைவன் மீதான நேசத்தின் ஒளி பொழியும்.

அவர் எனது முகத்தில் அந்த இறை நேசத்தையும் ஒளியையும் கண்டதால் தான் என்னைப் பார்த்து இதனைச் சொன்னார்.

அன்னார் (அலை) இன்னோரிடத்தில் கூறும்போது, நான் அடைந்த அனைத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றியதாலேயே எனக்குக் கிடைத்தது என்று கூறினார்கள்.

இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் காட்டிய முன்மாதிரி ஆகும். இதற்காகவே அன்னார் இந்த ஜமாஅத்தை நிறுவினார்கள். இன்று நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாக பின்பற்றுபவர்கள் என்றும், அன்னாரின் உண்மை ஊழியரின் கரத்தில் பைஅத் செய்து நமது வாழ்க்கையை அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு ஏற்ப அமைப்போம் என்றும் வாக்குறுதி அளித்துள்ளோம். எனவே, நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் தூய எண்ணத்துடன் அல்லாஹ்விற்காக மட்டுமே செய்ய வேண்டும்; அவனது அன்பில் முன்னேற முயற்சிக்க வேண்டும்; இதன் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும். நாம் அவ்வாறு செய்யும்போதுதான் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு வாரிசுகளாகவும் முடியும். அப்போதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தில் இருப்பதற்கும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பைஅத்தில் இணைந்திருப்பதற்கும், அன்னாரை உண்மையாக ஏற்றுக் கொண்டவர்களில் இணைவதற்குமான உரிமையை செலுத்த முடியும். அத்தகைய நல்வாய்ப்பை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக!

பாகிஸ்தானில் உள்ள அஹ்மதிகளுக்காக இன்றைய நாட்களில் துஆ செய்து வாருங்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு, அங்கு நடந்து வந்த முபாரக் ஸானி சாஹிப் மீதான வழக்கில் செஷன்ஸ் நீதிபதி அவருக்கு ஆயுள் தண்டனை விதித்துள்ளார். அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு என்னவென்றால், அவர் திருக்குர்ஆனை வைத்திருந்தார்; அதனை ஓதினார்; மற்றவர்களுக்குக் கற்பித்தார் என்பதுதான்! இதுதான் அங்குள்ள நீதிமன்றங்களின் இன்றைய நிலை. இவர்களிடமிருந்து என்ன நீதியை எதிர்பார்க்க முடியும்? இந்தத் தீர்ப்பைக் குறித்து அன்னியர்களும் கூட, இது எவ்வளவு ஒரு வேடிக்கையான தீர்ப்பென்று எழுதியுள்ளனர்.

சில மவ்லவிகள் இந்தத் தீர்ப்பைப் பெரிதும் பாராட்டி நீதிபதியைப் புகழ்ந்து வருகின்றனர். ஆனால், நேர்மையான எழுத்தாளர்கள் இதனை விமர்சிக்கின்றனர். சிலர் கிண்டலாக, 'திருக்குர்ஆனை ஓதுவதும், வீட்டில் வைத்திருப்பதும்,

குழந்தைகளுக்குக் கற்பிப்பதும் இவ்வளவு பெரிய குற்றமா?' என்று எழுதியுள்ளனர். இதுதான் அங்கிருக்கும் பெயரளவிலான ஆலிம்கள் மற்றும் அவர்களின் கூட்டாளிகளின் நிலை. அரசாங்கமும் அதன் நிர்வாகமும் இத்தகைய மௌலவிகளுக்குப் பின்னால் சென்று சில இடங்களில் இவ்வாறே செயல்படுகின்றன.

எவ்வாறிருப்பினும், அல்லாஹ் இவர்களை மிக விரைவாகப் பிடிப்பதற்கான வழிவகையை ஏற்படுத்த வேண்டும் என்று நாம் துஆ செய்கிறோம். **அல்லாஹ்வின் பிடி மிக விரைவில் அவர்கள் மீது இறங்கும். இன்ஷா அல்லாஹ்! அதன் அறிகுறிகளும் தென்படுகின்றன.** ஆனால் நமது துஆக்களில் குறைபாடோ அல்லது நமது செயல்கள் அல்லது இறைவணக்கங்களுக்குரிய உரிமையை செலுத்தாதன் காரணமாகவோ அதில் காலதாமதம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். இதனால்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூட மேகங்களைக் கண்டால் சில சமயங்களில் அச்சத்துடன் துஆ செய்வார்கள். எனவே, துஆக்களில் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது.

அதேபோல், உலகில் உள்ள மற்ற அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் எல்லா இடங்களிலும் அனைவருக்கும் பாதுகாப்பை வழங்கி, அனைத்து குழப்பங்களிலிருந்தும் அனைவரையும் பாதுகாப்பானாக!

தொழுகைக்குப் பிறகு நான் இரண்டு ஜனாஸா காயிப் தொழுகைகளை தொழவைப்பேன். இரண்டு மர்ஹூம்களைப் பற்றிய நற்குறிப்புகள் உள்ளன.

முதலாவது, மௌலானா ஜலாலுத்தீன் நய்யர் ஸாஹிப். இவர் காதியானில் உள்ள ஸத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் முன்னாள் தலைவராகவும், மஜ்லிஸ் தஹ்ரீகே ஜதீதின் தலைவராகவும் இருந்தவர். கடந்த நாட்களில் இவர் வஃபாத் ஆனார்கள். انا للہ وانا الیہ راجعون

இவரது தந்தை மதிப்பிற்குரிய எச். ஹூசைன் ஸாஹிப் அவர்கள் உலகப் போரின் போது இராணுவத்தில் கிளர்க்காக பணியாற்றினார். அந்தச் சமயத்தில் 1922-ல் பஸ்ராவில் அஹ்மதிய்யத்தை ஏற்றார்.

பின்னர் கேரளாவிலிருந்து வெளியாகும் ஜமாஅத்தின் 'சத்ய தூதன்' இதழின் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவர் கேரளாவைச் சேர்ந்தவர்; இராணுவப் பணிக்குப் பிறகு அங்கு வந்து சேர்ந்தார். மர்ஹூமின் தந்தை எச். ஹூசைன் ஸாஹிப் அவர்கள் 1950-ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் முன்வைத்த காதியானில் குடியேறுவதற்கான திட்டத்தை ஏற்று, தனது முழு குடும்பத்துடன் காதியானுக்கு வந்து அங்கேயே குடியேறினார். ஆனால், ஓராண்டிற்குள்ளேயே காதியானில் அவர் வஃபாத் ஆனார்.

மௌலானா ஜலாலுத்தீன் நய்யர் ஸாஹிபின் தாயார் ஸுபைதா சுல்தானா ஸாஹிபா, அதன் பிறகு அங்கு தர்வேஷாக இருந்த சௌத்ரி அப்துல் ஹக் ஸாஹிபை மறுமணம் செய்து கொண்டார். அவர் நய்யர் ஸாஹிப் மற்றும் அவரது சகோதர சகோதரிகளைத் தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டார். ஜலாலுத்தீன் நய்யர் ஸாஹிபின் ஆரம்பக் கல்வி காதியானில் அமைந்தது. 1963-ல் அவர் 'மௌலவி ஃபாஸில்' தேர்வில் தேர்ச்சி பெற்றார். பின்னர் அஞ்சுமனில் பைத்துல் மால் Inspector ஆக நியமிக்கப்பட்டு நீண்ட காலம் பணியாற்றினார். அவர் இந்தியா முழுவதும் உள்ள ஜமாஅத்துகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்வார். இதன் காரணமாக மிகுந்த உழைப்புடனும், அன்புடனும் ஜமாஅத் உறுப்பினர்களை சந்தா திட்டத்தில் இணைத்தார். இதன் காரணமாக இந்தியா முழுவதும் உள்ள ஜமாஅத் அன்பர்களுடன் அவருக்கு தனிப்பட்ட தொடர்பும் இருந்தது.

மர்ஹூம் 63 ஆண்டுகள் ஜமாஅத்துக்கு தொண்டாற்றும் நல்வாய்ப்பைப் பெற்றார். இந்தக் காலகட்டத்தில் பைத்துல் மால் ஆமது இன்ஸ்பெக்டர் ஆகப் பணியாற்றிய பிறகு, கணக்காய்வாளராகவும் (Auditor) பின்னர் நீண்ட காலம் நாஸிர் பைத்துல் மால் ஆமத் ஆகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்பும் கிடைத்தது. நான் குறிப்பிட்டது போல, ஏழு ஆண்டுகள் காதியான் ஸத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் தலைவராகவும், உடல்நிலை ஒத்துழைக்கும் வரை ஸத்ர் மஜ்லிஸ் தெஹ்ரீகே ஜதீதின் தலைவராகவும் இருந்தார். அதேபோல் கிளை அமைப்புகளிலும் தொண்டாற்றும் நல்வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

அவர் மிகுந்த இறைவணக்கம் செய்பவராகவும், தொழுகை மற்றும் நோன்புகளைப் பேணுபவராகவும் இருந்தார். கிலாஃபத்தின் ஒவ்வொரு கட்டளையையும் நிறைவேற்றுவதில் முதன்மையானவர்களில் ஒருவராக இருந்தார். அவர் ஒரு விளையாட்டு வீரராகவும் இருந்ததால், அங்கு விளையாட்டுகளைச் சிறப்பாக ஒழுங்கமைத்தார். அவருக்குக் காஷ்மீரைச் சேர்ந்த ஒரு குடும்பத்தில் திருமணம் நடந்தது. அவரது மனைவி முன்னரே வஃபாத் ஆகி விட்டார். மர்ஹூமுக்கு இரண்டு மகன்களும் ஒரு மகளும் உள்ளனர்; அவர்கள் ஜமாஅத்துக்கு தொண்டாற்றி வருகின்றனர். அல்லாஹ் அவருக்கு பாவமன்னிப்பும், கருணையும் வழங்குவானாக!

அடுத்த நற்குறிப்பு, மதிப்பிற்குரிய மீர் ஹபீப் அஹ்மத் ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர் மீர் முஷ்தாக் அஹ்மத் ஸாஹிபின் மகனாவார். கடந்த நாட்களில் 79 வயதில் இவரின் மரணம் நிகழ்ந்துள்ளது. انا للہ وانا الیہ راجعون

மர்ஹூம் மிகவும் அன்பானவர், நட்பாக பழகக் கூடியவர், கிலாஃபத்தின் மீது மிகுந்த பற்று கொண்டவர். அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவர் ஆவார். அவரது குடும்பத்தில் அவரது பாட்டனார் பாவ் அப்துர் ரஹீம் ஸாஹிப் மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. அவர் 'ஃபாரூக்' இதழின் ஆசிரியர் ஹஸ்ரத் மீர் காஸிம் அலி ஸாஹிப் (ரலி) அவர்கள் மூலமாக 1903-ல் பைஅத் செய்தார். ஹஸ்ரத் மீர் காஸிம் அலி ஸாஹிப் (ரலி) அவர்களுக்குக் குழந்தைகள் இல்லாததால், அவர்கள் மீர் ஹபீப் ஸாஹிபின் தந்தை முஷ்தாக் அஹ்மத் ஸாஹிபைத் தத்தெடுத்து வளர்த்தார்.

மீர் ஹபீப் ஸாஹிப், லாகூர் அரசு கல்லூரியில் F.Sc மற்றும் B.Sc முடித்து, பின்னர் இயற்பியலில் (Physics) M.Sc பட்டம் பெற்றார். பின்னர் அவர் வெளிநாடு சென்றார்.

அவரது ஜமாஅத் தொண்டுகள் என்னவென்றால், 1970 முதல் 1971 வரை தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியில் ஆசிரியராக தொண்டை துவங்கினார். அந்தச் சமயம் கல்லூரிகள் அரசுடைமை ஆக்கப்படவில்லை. 1973 முதல் 1976 வரை நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் சியராலியோன் சென்று, ஃப்ரீடவுனில் (Freetown) இயற்பியல் ஆசிரியராக தொண்டாற்றினார். பிறகு 1976-ல் பாகிஸ்தான் திரும்பினார். அதே ஆண்டில் நைஜீரியா சென்று 1987 வரை அங்குள்ள அரசுப் பள்ளியில் பணியாற்றினார். அங்கிருக்கும்போதே 1987-ல் அவர் தனது வாழ்வை அர்ப்பணித்தார். ஆஃப்ரிக்காவில் இருக்கும்போதே வாழ்வை அர்ப்பணித்தவர் என்ற வகையில், ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் அவரை மொர்ஷாவில் உள்ள அஹ்மதிய்யா சீனியர் செகண்டரி பள்ளியின் முதல்வராக (Principal) நியமித்தார்கள். அங்கு 1991 வரை தொண்டாற்றினார்.

அதன் பிறகு மீண்டும் பாகிஸ்தான் வந்து ஜமாஅத் தொண்டுகளைத் தொடர்ந்தார். 1992-ல் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ஒரு தொழில்நுட்ப நிறுவனத்தைப் (Technical Institute) பார்வையிட அவரை மீண்டும் சியராலியோனுக்கு அனுப்பினார்கள். அவரது நிபுணத்துவக் கருத்தின் அடிப்படையில் அங்கு சில பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1996-ல் நஸாரத் தஃலீம் கீழ், ரப்வா நுஸ்ரத் ஜஹான் அகாடமியில் இயற்பியல் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

அங்கேயே அவர் ஓய்வு பெற்றார். அதேபோல் ஸத்ர் உமூமி அலுவலகத்திலும், உமூமி இஸ்லாஹி கமிட்டியிலும் தன்னார்வலராகப் பணியாற்றினார்.

அவரது மனைவி எழுதுகையில், 'எனது கணவர் தொழுகை, நோன்புகளைப் பேணுபவர்; மிகவும் மென்மையான குணம் கொண்டவர்; எப்போதும் எவ்வித கோரிக்கையையும் வைத்ததில்லை. வாசிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்; அறிவார்ந்த மனிதர். ஏதாவது கோரிக்கை இருந்தது என்றால், (வெளியூரிலிருந்து வரக் கூடியவர் ஏதேனும் அன்பளிப்பு வேண்டுமா என்று கேட்டால், 'எனக்காகப் புத்தகங்களை மட்டும் கொண்டு வாருங்கள்' என்பார். கல்விச் சார்ந்த புத்தகங்களையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் நூல்களையும் அதிகமாக படிப்பார். ஒருபோதும் பொய்யான தகவல்களைக் கூறமாட்டார். ஒரு விஷயத்தைச் சொல்ல விருப்பமில்லை என்றால் அமைதியாக இருப்பாரே தவிர, தவறான தகவலைக் கூறமாட்டார்' என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது மகளும் இத்தகைய நற்பண்புகளைக் குறிப்பிட்டுள்ளார். நானும் அவரைப் பார்த்திருக்கிறேன். அவர் மிகவும் நல்ல மனிதர். தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பார். தனது வக்ஃபை மிகுந்த நன்றி உணர்வுடன் நிறைவேற்றியவர். அல்லாஹ் அவருக்கு மன்னிப்பும் கருணையும் வழங்குவானாக!

இவருக்கு மீர் இஸ்ஹாக் ஸாஹிபின் பேத்தியும் மேஜர் ஸயீத் அஹ்மத் ஸாஹிபின் மகளுமான ஸய்யிதா லுப்னா ஸாஹிபாவுடன் திருமணம் நடைபெற்றது. ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்ஹாக் ஸாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் ஸாஹிபின் மகனாவார்; அவர் ஜமாஅத்தில் மிகவும் பிரபலமானவர் என்பதை நாம் அறிவோம். அவரது திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு ஜமாஅத்தில் புழக்கத்தில் உள்ளது. அல்லாஹ் மர்ஹூமிற்கு மன்னிப்பையும் கருணையையும் வழங்குவானாக! ஆமீன்.

தமிழாக்கம்

முபல்லிஃக்

A.P.A .தாரிக் அஹ்மது

* * * * * * * * * *

## வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி குறித்த முன்னறிவிப்பின் பின்னணி

(ஸலீக் அஹ்மது நாயிக், முரப்பி, காதியான்)

அல்லாஹ் இந்த குழப்பம் நிறைந்த காலகட்டத்தில் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்துவதற்காக ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு பல்வேறு மகத்துவ மிக்க அடையாளங்களை வழங்கினான். அந்த அடையாளங்களில் மிகவும் வலிமை மிக்க மற்றும் அசாதாரண ஓர் அடையாளம் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி குறித்த முன்னறிவிப்பாகும். இந்த முன்னறிவிப்பு எப்படிப்பட்ட காலத்தில் செய்யப்பட்டது என்றால், அப்போது சிந்தனை மற்றும் கொள்கைசார் கடுமையான தாக்குதலுக்கு இஸ்லாம் இலக்காகியிருந்தது. மேலும் முஸ்லிம் சமுதாயம் பலவீனம் மற்றும் பிரிவினைக்கு இரையாகி இருந்தது. இந்த முன்னறிவிப்பின் பின்னணி இதன் அசாதாரண அடையாளத்தின் முக்கியத்துவம் மற்றும் மகத்துவம் மேலும் இதற்கு பொருத்தமான மகத்தான நபர் யார்? போன்ற அனைத்து விவரங்களும் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் எழுத்துக்களில் இருந்து முழுமையாக, தெளிவுடன் காண கிடைக்கின்றது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மகத்தான நூலான பராஹீனே அஹ்மதிய்யா பொதுவெளியில் வந்த உடனேயே ஒருபக்கம், இஸ்லாமிய உலகில் மகிழ்ச்சி மற்றும் அமைதிக்கான அலை வீசியது. ஏனெனில் இந்த நூல் இஸ்லாத்தின் உண்மைத் தூதரின் ஒரு வலிமையான தற்காப்பு அரணாக திகழ்ந்தது. அதேநேரம் மற்றொரு பக்கம், இஸ்லாத்தின் எதிரிகளின் வட்டத்தில் கடுமையான நிம்மதியின்மையும், பதற்றமும் தொற்றிக் கொண்டது. இதே வரலாற்று நூலில் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் உலகை விளித்து கூறியவாறு ஒரு மகத்தான நற்செய்திக்கான அறிவிப்பை செய்தார்கள்:

எனவே வல்ல இறைவன் இந்த எளிய அடியானை இக்காலத்தில் பிறக்கச் செய்து நூற்றுக்கணக்கான விண்ணின் அடையாளங்கள், விண்ணுலக உணவு மற்றும் இறை ஞானங்களை அருளியும், நூற்றுக்கணக்கான திடமான பகுத்தறிவு சான்றுகளின் அறிவை வழங்கி இந்த விஷயத்தை நாடியுள்ளான். அதாவது இதன் மூலம் திருக்குர்ஆனின் உண்மையான போதனைகளை ஒவ்வொரு சமுதாயத்திலும் மற்றும் ஒவ்வொரு நாட்டிலும் பரப்பி அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்; மேலும் தனது சான்றுகளை அவர்கள் மீது முழுமைப்படுத்த வேண்டும் என்றும் இறைவன் நாடியுள்ளான். மேலும் ஒவ்வோர் எதிரியும் தான் தோல்வியுற்றதற்கும், வாயடைத்து போனதற்கும் அவர் சுயமே சாட்சியாக ஆகிவிட வேண்டும் என்றும் இறைவன் நாடியுள்ளான். (பராஹீனே அஹ்மதிய்யா ரூஹானி ஹஸாயீன் தொகுதி 1, பக்கம் 596 597)

இந்த நற்செய்திக்கான அறிவிப்பை ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இந்தியாவுடன் மட்டும் சுருக்கிவிடவில்லை. மாறாக, தமது கடிதங்களின் மூலமாக இந்தியாவிற்கு வெளியேயும் இந்த தூதுச் செய்தியை சென்றடைய செய்தார்கள். அன்னார் (அலை) தமது தகுதிக்கேற்ப தம்மால் முடிந்தவரை இஸ்லாத்தின் எதிரிகளின் மீது சான்றுகளை முழுமை பெறச் செய்தார்கள்.

ஆக, இஸ்லாத்தின் உண்மைத்துவம் மற்றும் உயிருள்ள ஒளிமயமான அடையாளங்களைக் குறித்த விவாதம் உலகின் நாலாபுறத்திலும் நிகழத் தொடங்கியது. மேலும் ஒவ்வோர் எதிரிக்கும் இந்த அடையாளங்களை காண்பதற்கு பொதுவான அழைப்பு விடுக்கப்பட்டது.

இதற்கிடையில், 1885-ம் ஆண்டில் காதியானின் சில செல்வந்தர்கள் மற்றும் ஏனைய சில இந்து மதத் தலைவர்கள் தரப்பிலிருந்து ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் சமூகத்தில் ஒரு கடிதம் கிடைத்தது. அதில் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. அதாவது, எவர் உண்மையை தேடக் கூடியவராக இருப்பாரோ மேலும், ஓராண்டு வரை எம்மிடத்தில் வந்து காதியானில் தங்குவாரோ வல்ல இறைவன் அவருக்கு இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை நிரூபணம் செய்யும் வகையிலான எப்படிப்பட்ட அடையாளங்களை நிச்சயம் காட்டுவான் என்றால் அது மனித சக்திக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் என்ற இந்த விஷயத்தை தாங்கள் லண்டன் மற்றும் அமெரிக்கா வரை பதிவுத் தபாலில் அனுப்பியுள்ளீர்கள்.

ஆனால், நாங்களோ தங்களுடைய அண்டை வீட்டுக்காரர்களாகவும், தங்களின் நகரத்தை சார்ந்தவர்களாகவும் இருக்கின்றோம். எனவே நாங்கள் லண்டன் மற்றும் அமெரிக்க குடிமக்களை விட அதிக உரிமை படைத்திருக்கின்றோம். எனினும், நாங்கள் எப்படிப்பட்ட அடையாளங்களின் மீது திருப்தி கொள்வோம் என்றால் அவற்றில் பூமி மற்றும் வானத்தை புரட்டி போட வேண்டிய அவசியமில்லை. மேலும் இயற்கைச் சட்டங்களை உடைப்பதற்கும் எந்த தேவையுமில்லை. ஆயினும் மனித சக்திகளுக்கு அப்பாற்பட்ட அடையாளங்கள் நிச்சயம் வேண்டும்- மேலும் அந்த உண்மையான மற்றும் தூய பரமேஸ்வரன் தங்களுடைய மார்க்க நேர்மையின் காரணமாக தங்களை மிகுந்த அன்புடன் நேசித்து மற்றும் அருளின் வழிகளில் தங்களின் பிரார்த்தனைகளை ஏற்றுக் கொள்கிறான் என்பதை நாங்கள் அறிந்து கொள்ளும் வகையில் அந்த அடையாளம் இருக்க வேண்டும். மேலும், துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கு முன்பு, சம்பவம் நிகழ்வதற்கு முன்னரே அவன் தங்களுக்கு தகவல் கொடுத்து விடுகின்றான் என்பதை நாங்கள் அதன் மூலம் அறிந்து கொள்ள வேண்டும் அல்லது தங்களுக்கு அவன் தனது சிறப்பான இரகசியங்களை அறிவிக்கின்றான் என்பதை நாங்கள் அந்த அடையாளங்களலிருந்து அறிந்து கொள்ள வேண்டும். மேலும் அந்த மறைவான இரகசியங்களின் செய்திகளை முன்னறிவிப்பாக அவன் தங்களுக்கு தெரிவிக்கின்றான். அல்லது அவன் பழங்காலத்திலிருந்து தன் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கும், தன் நேசர்களுக்கும், பக்தர்களுக்கும், சிறப்பு அடியார்களுக்கும் செய்து வந்தது போலவே, இப்போதும் மிக அதிசயமான முறையில் தங்களுக்கு

இதன் தொடர்ச்சி 24-ம் பக்கம்...

## முன்னறிவிப்புகளின் ஒளியில் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியின் அந்தஸ்து

(மதிப்பிற்குரிய இனாயத்துல்லாஹ் ஸாஹிப், அடினல் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத்
தஃலீமுல் குர்ஆன் வ வக்ஃபே ஆர்ஸீ)

இறைவன் எதிர்காலத்தில் தோன்றக்கூடிய நபிமார்கள் இறைத்தூதர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் தொடர்பாக முன்னரே முன்னறிவிப்புகளின் மூலமாக தகவல் கொடுத்து விடுகின்றான். இது அல்லாஹ்வின் சுன்னத் ஆகும். நபிமார்களின் பண்புகள், அவர்களின் அடையாளங்கள் மற்றும் அவர்களின் நிலைமைகளை எடுத்துரைத்து முன்னரே அவர்களின் மகத்துவத்தை இறைவன் வெளிப்படுத்தி விடுகின்றான்.

ஆக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக அல்லாஹ் காத்தமுன் நபியின் மற்றும் ரஹ்மத்துல் லில் ஆலமீனாக தோன்றச் செய்திருந்தான். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் அன்னாரின் அடிமைத்துவத்தில் தோன்றக்கூடிய இமாம் மஹ்தியை குறித்து அல்லாஹ் தகவல் வழங்கியிருந்தான்.

ஆக, திருக்குர்ஆனில் இந்த மகத்துவம் மிக்க முன்னறிவிப்புகளை குறிப்பிட்டவாறு அல்லாஹ் கூறுகின்றான்:

هُوَ الَّذِىْ بَعَثَ فِى الْاُمِّيّٖنَ رَسُوْلًا مِّنْهُمْ
يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ وَيُزَكِّيْهِمْ وَيُعَلِّمُهُمُ
الْكِتٰبَ وَالْحِكْمَةَ ۚ وَاِنْ كَانُوْا مِنْ قَبْلُ
لَفِىْ ضَلٰلٍ مُّبِيْنٍ ۙ وَّاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا
يَلْحَقُوْا بِهِمْ ۗ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ

பொருள்: அவனே எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு - அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்தபோதிலும் - அவனது கட்டளைகளைப் படித்துக் காட்டி, அவர்களைத் தூய்மைப்படுத்தி, அவர்களுக்கு வேதத்தையும், நுட்பமான அறிவையும் கற்றுக் கொடுக்கும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பினான்.

மேலும், இதுவரை அவர்களுடன் சேராத மற்றவர்களுக்கிடையிலும் (அவரை எழுப்புவான்.) அவன் வல்லமை மிக்கவனும், நுண்ணறிவுள்ளவனுமாவான். (62:3-4)

ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மேற்குறிப்பிட்ட வசனத்தின் விளக்கவுரையில் கூறுகின்றார்கள்:

மக்கள் அறிவும், ஞானமும் இல்லாதவர்களாக ஆகியிருந்த காலத்திலும், மேலும் ஆன்மா முழுமை பெறவும், மனித ஆன்மாக்கள் பகுத்தறிவு மற்றும் செயல்முறை நிலையில் உச்சத்தை அடைவதற்கு உதவக் கூடிய தத்துவம் மற்றும் மார்க்க அறிவு முற்றிலும் மறைந்து போயிருந்த காலத்திலும், மேலும் மக்கள் வழிகேட்டில் மூழ்கியிருந்த காலத்திலும் தனது தூதரை அனுப்பிய அந்த இறைவனே இறைவன் ஆவான். இத்தகைய தருணத்தில் வல்ல இறைவன் தனது தூதரை அனுப்பினான். மேலும் அந்த தூதர், அவர்களின் உள்ளங்களை தூய்மைப்படுத்தினார். அவர்களை வேதத்தின் ஞானத்தாலும், நுட்பமான அறிவாலும் நிறைத்தார்.

அடுத்து அன்னார் (அலை) கூறினார்கள்: மற்றொரு கூட்டமும் உள்ளது. அது இறுதி காலத்தில் வெளிப்படும். அவர்களும் துவக்கத்தில் இருளிலும், வழிகேட்டிலும் இருப்பார்கள். மேலும், அறிவு, ஞானம் மற்றும் உறுதி ஆகியவற்றில் இருந்து விலகி இருப்பார்கள். அப்போது இறைவன் அவர்களையும் ஸஹாபிகளின் அந்தஸ்தில் கொண்டு வருவான். அதாவது ஸஹாபிகள் எதனையெல்லாம் கண்டார்களோ அவை அவர்களுக்கும் காட்டப்படும். எந்த அளவுக்கு என்றால் அவர்களின் உண்மையும், உறுதியும் ஸஹாபிகளின் உண்மை மற்றும் உறுதியைப் போன்றதாக ஆகிவிடும்.

கூறினார்கள்: மேலும் ஸஹீ ஹதீஸில் இவ்வாறு உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கவுரை வழங்கிய நேரத்தில், ஸல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்களின் தோளின் மீது கை வைத்தார்கள். மேலும் கூறினார்கள்:

ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்டாலும் அதாவது வானத்திற்கு சென்றுவிட்டாலும் அப்போதும் ஒரு ஃபாரசீக வம்சா வளியைச் சார்ந்த ஒருவர் அதனை மீண்டும் பூமிக்கு கொண்டு வருவார்.

ஒரு நபர் இறுதிக் காலத்தில் பாரசீக வம்சா வளியில் தோன்றுவார் என்பது என்னை குறிக்கின்றது. திருக்குர்ஆன் வானத்திற்கு சென்று விடும் என்று எந்தக் காலத்தைப் பற்றிக் எழுதப்பட்டுள்ளதோ அது இந்தக் காலமே ஆகும். அது வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலமாகும். மேலும் அந்த பாரசீக வம்சாவளியைச் சார்ந்த நபர் அவரே ஆவார். அதாவது எவரது பெயர் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கின்றதோ அவரே அவர் ஆவார். (அய்யாமே ஸுல்ஹ், ரூஹானீ கஸாயீன் தொகுதி 14 பக்கம் 305 306)

ஹக்கீக்கத்துல் வஹீ என்ற நூலில் அன்னார் (அலை) கூறினார்கள்:

وَّاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ

அதாவது முஹம்மதிய்ய சமுதாயத்தில் மற்றுமொரு கூட்டத்தினர் இருக்கின்றனர். அவர்கள் பிற்காலத்தில் அதாவது இறுதி காலத்தில் தோன்றக்கூடியவர்கள் ஆவர்.

ஸஹீஹ் ஹதீஸில் இவ்வாறு உள்ளது. இந்த வசனம் இறங்கிய வேளையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது கரத்தை ஸல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்களின் முதுகில் அடித்தார்கள். மேலும் கூறினார்கள்: ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்டாலும் பாரசீக வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் அதனை மீண்டும் கொண்டு வருவார்.

இது என்னைக் குறித்த முன்னறிவிப்பாக இருந்தது. இறைவன் பராஹீனே அஹ்மதிய்யாவில் இந்த முன்னறிவிப்பை உண்மைப்படுத்துவதற்காக அதே ஹதீஸை வஹீயாக என் மீது இறக்கினான். மேலும் வஹீயின் அடிப்படையில் எனக்கு முன்னர் இதற்கு பொருத்தமான நபராக எவரும் குறிப்பிடப்படவில்லை. மேலும் இறைவனின் வஹீயானது எனக்கு முற்றிலும் பொருந்துகின்றது. (ஹக்கீக்கத்துல் வஹீ, ரூஹானி கஸாயீன், தொகுதி 22 பக்கம் 407, அடிக்குறிப்பு)

முஸ்லிம் ஷரீஃப் ஹதீஸ் நூல், ஃபஸாயிலுஸ் ஸஹாபா எனும் பாடத்தில் ரஜுலுல் ஃபாரிஸ் என்பதில் இடம் பெற்றுள்ள ஹதீஸில் ரஜுல் என்ற சொல்லிற்கு பகரமாக ரிஜால் என்ற சொல்லும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அது இதன் பக்கம் சுட்டிக்காட்டுகின்றது. அதாவது சூரா ஜுமுஆவில் முஹம்மதிய்ய சமுதாயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தை ஏற்று தோன்றக் கூடிய எந்த மகத்தான நபரை அதாவது எந்த இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹைப் பற்றி செய்தி வழங்கப்பட்டுள்ளதோ அந்த நபருக்குப் பிறகு, அவருடைய மிஷனை முன்னெடுத்து செல்வதற்காக அவருடைய ஜமாஅத் மற்றும் அவருடைய சந்ததியிலிருந்து அந்த மகத்தான நபரை அல்லாஹ் தோன்றச் செய்வான். அவரின் மூலமாக அல்லாஹ் தான் நிறுவிய இயக்கத்தை முழு உலகிலும் பரப்பி அதனை மேலோங்கச் செய்து விடுவான்.

ஆக, மிஷ்காத் எனும் ஹதீஸ் நூலில் இடம் பெற்றுள்ள இந்த ஹதீஸ் உள்ளது. அதன்

அறிவிப்பாளர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறுகின்றார்கள்:

**ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உலகில் தோன்றுவார்கள்; மேலும் திருமணம் செய்வார்கள்; மேலும் அவர்களுக்கு சந்ததி வழங்கப்படும்.**

மேற்குறிப்பிட்ட ஹதீஸின் விளக்கத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து செய்தி பெற்று, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் திருமணம் செய்வார்; அவருக்கு குழந்தைகள் பிறக்கும் என்று கூறியிருந்தார்கள்.

இதில் இந்த விஷயத்தின் பக்கம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது அல்லாஹ் அவருக்கு எப்படிப்பட்ட ஸாலிஹான புதல்வனை வழங்குவான் என்றால், அவர் நன்மையின் அடிப்படையில் தமது தந்தைக்கு ஒப்பானவராக இருப்பார். அவர் அல்லாஹ்வின் கண்ணியத்திற்குரிய அடியார்களை சார்ந்தவராக இருப்பார். மற்றோர் இடத்தில் மிஷ்காத் எனும் நூலின் மேற்குறிப்பிட்ட ஹதீஸ் குறித்து ஒளிபாய்ச்சியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதுகின்றார்கள்:

வாக்களிக்கப்பட்ட மஸீஹுக்கு சந்ததி பிறக்கும் என்ற இந்த முன்னறிவிப்பு இந்த விஷயத்தின் பக்கம் சுட்டிக்காட்டுகின்றது. அதாவது இறைவன் அவருடைய சந்ததியிலிருந்து ஒரு நபரை தோன்றச் செய்வான். அவர் அன்னாருடைய பிரதிநிதியாக இருப்பார். மேலும் அவர் இஸ்லாமிய மார்க்கத்திற்கு உதவி செய்வார். எனது சில முன்னறிவிப்புகளில் அதற்கான செய்திகள் இடம் பெற்றிருப்பதைப் போன்று அவர் அந்தப் பணியை செய்வார்.
(ஹக்கீக்கத்துல் வஹீ, பக்கம் 312)

வாக்களிக்கப்பட்ட மஸீஹுடைய வருகை மற்றும் அன்னாருடைய சந்ததியிலிருந்து வாக்களிக்கப்பட்ட கலீஃபாவின் வருகை ஆகியவற்றைப் பற்றிய ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கு ஆதரவாகவும், முந்தைய ஆன்மீக நூல்களிலும் முன்னறிவிப்புகள் கிடைக்கின்றன.

உதாரணமாக, யூதர்களின் ஷரீஅத்தின் அடிப்படை நூலான தால்மோதில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது (மஸீஹாகிய) அவர் மரணம் அடைந்து விடுவார். அவரது அரசாங்கம் அவருடைய மகன் மற்றும் பேரப் பிள்ளைகளுக்கு கிடைக்கும் என்று கூறப்படுகிறது. இந்த கருத்திற்கு ஆதரவாக பழைய ஏற்பாடு ஏசாயாவின் அதிகாரம் 42 - வசனம் 4 சமர்ப்பிக்கப்படுகிறது. அவர் தளர்ந்து போக மாட்டார்; மேலும் பூமியில் நீதிமன்றத்தை நிறுவி விடாத வரை அவர் தைரியம் இழந்து விட மாட்டார் என்று அதில் கூறப்பட்டுள்ளது .

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தில் ஹஸ்ரத் ஷாஹ் நிஃமத்துல்லா சாஹிப் என்ற ஒரு வலியுல்லாஹ் வாழ்ந்து சென்றுள்ளார்கள். அவர்கள் மஸீஹின் இரண்டாவது வருகை மற்றும் அவருக்கு மகத்தான மகன் பிறப்பது தொடர்பாக முன்னறிவிப்பு செய்துள்ளார்கள். இந்த முன்னறிவிப்பு பாரசீக கவிதையில் இடம் பெற்றுள்ளது. வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வெளிப்பாட்டிற்கு முன்பாக ஏற்பட இருந்த புரட்சியின் சித்திரத்தை வடித்து, வாக்களிக்கப்பட்ட மஸீஹீன் காலம் மற்றும் பெயரை தெள்ளத்தெளிவாக குறிப்பிட்டவாறு மகத்தான நினைவாக ஒரு மகனுடைய நற்செய்தியை கீழ்கண்ட சொற்களில் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள். அதன் பொருள்: அவரது காலம் வெற்றிகரமாக கழிந்து விடும்போது, அவரது மகன் நினைவுச் சின்னமாக இருப்பார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது நூலான நிஷானே ஆஸ்மானியில் மேற்குறிப்பிட்ட முன்னறிவிப்பின் கடைசி வரிக்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்:- இது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதாவது இறைவன் அவருக்கு தூய புதல்வரை வழங்குவான். அவர் அன்னாருடைய முன்மாதிரியாக இருப்பார். அவர் அன்னாருடைய பண்புகளில் ஒன்றிவிடுவார். அன்னாருக்கு பிறகு அவர் அன்னாரின் நினைவுச் சின்னமாக இருப்பார். இது உண்மையில் ஒரு மகனைப் பற்றி செய்யப்பட்ட இந்த எளியவனுடைய அந்த முன்னறிவிப்பிற்கு ஏற்புடையதாகும். (நிஷானே ஆஸ்மானி, ரூஹானீ கஸாயீன், தொகுதி 4, பக்கம் 373)

நிகழ்காலத்துடன் தொடர்புடைய முந்தைய புனித நூல்களில் காணப்படக்கூடிய முன்னறிவிப்புகளின் அடிப்படையில் ஸய்யிதுல் அன்பியா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் அன்னாரின் முழுமையான நிழலாக ஆன்மீக மகனாக தோன்ற இருந்த நபர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் ஆவார்கள் என்ற விஷயத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் முழுமையான நம்பிக்கை கொள்கின்றது. மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 136 ஆண்டுகால வரலாற்றின் ஒவ்வொரு பகலும், இரவும் ஒவ்வொரு நொடியும் இதற்கு சாட்சியாக இருக்கின்றது. இறைவன் முந்தைய புனித நூல்களின் முன்னறிவிப்பின் படி அன்னாருடைய உண்மை தோற்றத்திற்கு சான்றாக எங்கு ஏராளமான ஆயிரக்கணக்கான இன்னும் கூறப்போனால் லட்சக்கணக்கான அடையாளங்களையும், அற்புதங்களையும் அன்னாருக்கு வழங்கியிருந்தானோ அங்கு ஒரு குறிப்பிட்ட அந்தஸ்து மற்றும் முக்கியத்துவத்தைக் கொண்ட அடையாளமாக, அன்னாருடைய பிரதிநிதியாக ஆகக்கூடிய ஒரு ஸாலிஹான மகனை வழங்குதல் என்ற மகத்துவமிக்க அடையாளமும் உள்ளது. ஸய்யிதுனா ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களுக்கு சந்ததிகள் தொடர்பாக வழங்கப்பட்ட முன்னறிவிப்புகள் இருக்கின்றன. அவற்றில் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி என்ற ஒரு சிறப்பான அந்தஸ்து கொண்ட முன்னறிவிப்பும் இருக்கின்றது. ஆக வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி தொடர்பான முன்னறிவிப்பு தொடர்பாக பண்டித் லேக்ராமும், சில கிறிஸ்துவ பாதிரிகளும் மேலும் முஸ்லிம் என்று அழைக்கப்படக்கூடிய சில நபர்களும் மோசமான விமர்சனங்களை செய்தனர். அதை செவியுற்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பிரசுரம் ஒன்றை வெளியிட்டார்கள். அதில் முன்னறிவிப்பின் மகத்துவம் தொடர்பாக கூறினார்கள்: இது வெறும் முன்னறிவிப்பு மட்டுமே அல்ல; மாறாக, ஒரு மருத்துவ மிக்க விண்ணின் அடையாளமாகும் என்பதை அவர்கள் கண்களை திறந்து பார்த்துக் கொள்ளட்டும்! இதனை கண்ணிய மிக்க மற்றும் கம்பீர மிக்க இறைவன் தனது அன்பிற்குரிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மைத்துவம் மற்றும் மகத்துவத்தை வெளிப்படுத்துவதற்காக வெளிப்படுத்தியுள்ளான்.

வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியின் முன்னறிவிப்பு இந்த அடிப்படையிலும் ஒரு மகத்தான அந்தஸ்தைக் கொண்ட முன்னறிவிப்பாகும். அதாவது ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது அல் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் மீது அல்லாஹ் 1944 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் லாகூரில் ஒரு மகத்தான ஆன்மிக காட்சி மூலமாக இந்த விஷயத்தை வெளிப்படுத்தினான். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பிப்ரவரி 20, 1886 ஆம் ஆண்டு வாக்களிக்கப்பட்ட மகனின் பிறப்பு தொடர்பாக ஹோஷியார்பூரிலிருந்து அறிவிப்பு செய்திருந்தார்கள். அவர் மஸீஹி உள்ளம் கொண்டவராக இருப்பார் என்றும், மேலும் விரைவாக முன்னேறுவார்; மேலும் ஆத்மீக பௌதிக ஞானங்களால் நிரப்பப்படுவார்; மேலும் அவர் பூமியின் எல்லைகள் வரை பிரபலமடைவார்; சமுதாயங்கள் அவரிடமிருந்து அருளைப் பெறும் என்றெல்லாம் அவர் தொடர்பாக முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். அந்த முன்னறிவிப்பை உண்மைப்படுத்தக் கூடியவன் தானே ஆவேன் என்று அன்னார் (ரலி) அறிவித்தார்கள்.

ஆக, வல்லமை மிக்க இறைவன் புறமிருந்து கிடைத்த இந்த வெளிப்பாட்டிற்குப் பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் காதியான் மஸ்ஜித் அக்ஸாவில் ஜனவரி 28, 1944 ஆம் ஆண்டு அன்று இந்த கம்பீர மிக்க அறிவிப்பை செய்தார்கள். அதாவது நானே முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்பை உண்மைப்படுத்தக் கூடியவன் ஆவேன்; மேலும் அன்னார் (ரலி) கூறினார்கள்: எந்த ஆன்மீகக் காட்சி காட்டப்பட்டதோ அதற்கிடையில் எனது நாவு இந்த சொற்களை உச்சரித்தன. அந்த சொற்கள் இவையாகும்: வ அனல் மஸீஹில் மவ்வூத் வ மஸீலஹு வ கலீஃபஹு. பொருள்: நானும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவேன்; அதாவது நான் அன்னாருக்கு ஒப்பானவராகவும், அன்னாருடைய கலீஃபாவாகவும் இருக்கின்றேன். (தாரிகே அஹ்மதிய்யத் தொகுதி 8 பக்கம் 512 - 519)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தமது கிலாஃபத் தொடர்பாக கூறுகின்றார்கள்: நான் கலீஃபா அல்ல; மாறாக வாக்களிக்கப்பட்ட கலீஃபா ஆவேன். நான் இறைவனால் அனுப்பப்பட்டவன் அல்லன்; ஆனால்

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 5 - 12 JAN 2026 Issue No. 6 & 7

ACT. MANAGER
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

எனது குரல் இறைவனுடைய குரலாகும்.

இறைவன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக இது குறித்து செய்தி வழங்கியிருந்தான்.

ஆக, ஒரு வகையில் இந்த கிலாஃபத்தின் அந்தஸ்து மாமூரியத் மற்றும் கிலாஃபத்திற்கு இடைப்பட்ட அந்தஸ்தை கொண்டதாகும். மேலும், அஹ்மதிய்யா ஜமாஅத் இந்த சந்தர்ப்பத்தை வீணாக்கக் கூடிய ஜமாஅத் அல்ல. மேலும் இறைவனுடைய சன்னிதானத்தில் விழுந்து விட வேண்டும். நபி தினம் தினம் வருவதில்லை என்ற விஷயம் எவ்வாறு சரியானதோ அதேபோன்று வாக்களிக்கப்பட்ட கலீஃபாவும் தினம் தினம் வருவதில்லை என்ற விஷயமும் சரியானதாகும்.
( ரிப்போர்ட் மஜ்லிஸே முஷாவரத் 1936)

ஓ! ஃபஸ்லே உமர்! உமது கருணை மிகு பண்புகள் நினைவிற்கு வரும்போது அவை ஒவ்வொரு ஆன்மாவையும் பித்தனாக்குகின்றன!

ஒவ்வொரு நாளும் உன்னைப் போன்ற மனிதரை (உலகம்) கொண்டு வருவதில்லை!

இந்த தினசரி சுழற்சியும், காலச் சுழற்சியும் (அப்படியானதல்ல).!

ஒரு காலம் வரும்; அப்போது, இந்த உம்மத்தின் தியாகியின் மீது அல்லாஹ் (இறைவன்) அருள் புரிவானாக! என்று எல்லா மக்களும் கூறுவார்கள்.

தமிழாக்கம்
முபல்லிஃக்
A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * *

21-ம் பக்கத் தொடர்ச்சி (முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்பின் பின்னணி)

உதவி செய்து ஆதரிக்கிறான் என்பதை நாங்கள் அந்த அடையாளங்களிலிருந்து அறிந்து கொள்ள வேண்டும்.....

அந்த இறை அடையாளங்களை காட்டுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு என்பது 1885-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தின் துவக்கத்திலிருந்து கணக்கிடப்படும். அதன் இறுதிக்கட்டம் 1886-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தின் கடைசி வரை இருக்கும். (மஜ்மூஆ யே இஷ்திஹாரத், தொகுதி 1, பக்கம் 92 - 94)

இந்தக் கடிதத்தின் இறுதியில் 10 இந்து சகோதரர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

இந்தக் கடிதம் கிடைத்ததும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இவ்வாறு பதில் எழுதினார்கள்:

விண்ணின் அடையாளங்களை பார்ப்பதற்காக விண்ணப்பித்து, நீங்கள் அனைவரும் அனுப்பியிருந்த அன்புக் கடிதம் எனக்கு கிடைத்தது. இந்தக் கடிதம் முற்றிலும் நீதி மற்றும் உண்மையை தேடுதலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேலும் முழுமையாக பத்து நபர்களைக் கொண்ட உண்மையைத் தேடும் ஒரு குழுவினர் அதனை எழுதியுள்ளனர். எனவே நான் முழுமையான நன்றியுடன் அதன் கருத்தை முழுமையாக ஒப்புக் கொள்கிறேன். மேலும் நீங்கள் உங்களுடைய கடிதத்தில் செய்திருக்கின்ற அந்த வாக்குறுதிகளை நீங்கள் பேணுவீர்கள் என்றால், பின்னர் நிச்சயமாக வல்லமை மிக்க மற்றும் கம்பீர மிக்க இறைவனின் ஆதரவு மற்றும் உதவியுடன் ஓர் ஆண்டுக்குள் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஏதாவது இறை அடையாளம் உங்களுக்கு காட்டப்படும் என்று நான் உங்களுக்கு உறுதி அளிக்கின்றேன். இந்த எளியவன் உங்கள் அனைவருடைய நீதி நிறைந்த கடிதத்தை படித்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தான்.
(மஜ்மூஆ இஷ்திஹாராத், தொகுதி 1, பக்கம் 95)

ஹுஸூர் (அலை) அவர்கள் மிகவும் பணிவுடனும், மன்றாடலுடனும் தாழ்மையுடனும் அந்த அடையாளத்தை இறைவனிடம் வேண்டினார்கள். துஆ செய்யும் போது எல்லா விதமான இடையூறுகளிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும்; மேலும் கூடுதல் ஒருமுகப்படுதல் மற்றும் முழுமையான ஈடுபாட்டை உருவாக்குதல் போன்ற நோக்கத்துடன் அன்னார் (அலை) தனிமையை மேற்கொள்ள எண்ணம் கொண்டார்கள். இதே நோக்கத்தின் கீழ் அன்னார் (அலை) தமது குடும்பத்தார், அன்பர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்களிடம் இருந்து விலகி ஹோஷியார்பூருக்கு சென்றார்கள். மேலும் அங்கு முழுமையான இறைப் பற்றுடனும், உலகத் தொடர்புகளை துண்டித்துக் கொண்டும், தூய்மையுடனும் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் சிரம் பணிந்து ஸஜ்தா செய்து துஆக்களில் மூழ்கியிருந்தார்கள். கருணையும், அருளும் மிக்க இறைவன் அன்னாரின் மன்றாடுதலையும், துடிப்பையும், நிம்மதியின்மையையும் ஒப்புக் கொண்டான். மேலும், அன்னாருக்கு ஆறுதல் நல்கியவாறு துஆக்களை ஒப்புக் கொண்டான். மேலும் ஒரு மகத்துவ மிக்க இறை அடையாளத்திற்கான நற்செய்தியை வழங்கினான். இந்த நற்செய்தியை அறிவித்தவாறு ஹுஸூர் அக்தஸ் (அலை) அவர்கள் முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்பை தமது பிரசுரம் மூலமாக பிப்ரவரி 20,1886-ம் ஆண்டு வெளியிட்டார்கள். இதே பிரசுரத்தில் அன்னார் (அலை) தமது சந்ததியும், குடும்பமும் பரவி செழிப்பது தொடர்பான அல்லாஹ்வின் வாக்குறுதிகளையும் குறிப்பிட்டிருந்தார்கள். இந்த பிரசுரம் வெளியிட்ட அடுத்த மாதமே ஹுஸூர் (அலை) அவர்கள் மற்றுமொரு பிரசுரத்தை மார்ச் 1886-ம் ஆண்டு இந்த முன்னறிவிப்பு தொடர்பான அல்லாஹ்வின் மற்றொரு வாக்குறுதியை குறிப்பிட்டவாறு கூறினார்கள்: இப்படிப்பட்ட மகன் இறை வாக்குறுதியின்படி 9 ஆண்டுகளுக்குள் நிச்சயம் பிறப்பான்; விரைவாகவோ அல்லது தாமதம் ஆனாலும் சரியே நிச்சயம் பிறப்பான்; எவ்வாறிருப்பினும் இந்த கால இடைவெளிக்குள் பிறந்து விடுவான். (மஜ்மூஆ இஷ்திஹாராத், தொகுதி1, பக்கம் 113)

ஆக, இறை வாக்குறுதிக்கேற்ப, அந்த வாக்களிக்கப்பட்ட மகன் முன்னறிவிப்பு செய்யப்பட்ட ஆண்டிலிருந்து சரியாக மூன்று ஆண்டுகள் கழித்து, அதாவது 1889-ம் ஆண்டு, ஜனவரி 12, அன்று பிறந்தார். மேலும் இவ்வாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தொடர்பான இந்த மகத்தான முன்னறிவிப்பு முழுப் பொலிவுடன் நிறைவேறியது. அல்ஹம்துலில்லாஹ் அலா ஸாலிக்!

தமிழாக்கம்
முபல்லிஃக்
A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * *

National Watch Company
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad